இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 130 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 4 – புதன்கிழமை 20 டிசம்பர் 2023 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 130: Thiruvalluvar Year - 2054 - Margazhi 4 - Wednesday 20 December 2023 - Madurai 12 Pages ₹ 5.00

## கழக இளைஞரணி மாநில மாநாடு (25)

# “கயிற்றில் தொங்கிய கணபதி!”



**நெல்லைச் சீமையில் 2007ஆம் ஆண்டு டிசம்பர் 15, 16 ஆகிய இரண்டு நாட்கள் கழக இளைஞர் அணியின் முதல் மாநில மாபெரும் மாநாட்டை - அப்போதைய கழக இளைஞர் அணிச் செயலாளர் - தற்போதைய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மிக பிரம்மாண்டமான முறையில் எழுச்சியோடு நடத்திக் காட்டினார். இம்மாநாட்டிற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், ‘இளைஞர்களுக்கு வழி விடுவோம்’ எனும் தலைப்பில் முரசொலி’யில் 2007 நவ.7-ந் தேதி முதல் டிச.2-ந் தேதி வரை தொடர்ச்சியாக 25 ‘கலைஞர் கடிதங்கள்’ எழுதி உடன்பிறப்புகளுக்கு அழைப்பு விடுத்தார்.**

**சேலத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்தவிருக்கும் கழக இளைஞர் அணியின் 2-வது மாநில மாநாட்டையொட்டி, அக்கடிதங்களை இங்கே எடுத்து வெளியிடுவதில் மகிழ்கிறோம்.**

**உடன்பிறப்பே,**

★ மலேசிய அரசுக்கு டெல்லி மாநிலங்களவையில் கண்டனம் -

★ நாடாளுமன்றத்தில் எதிர்ப்பு -

★ மலேசியாவில் தமிழர்கள் உள்ளிட்ட இந்தியர்கள் சம வாய்ப்பு கேட்டுப் பேரணி

★ அந்தப் பேரணியில் அடக்குமுறை -

★ கண்ணீர்ப் புகை -

இப்படி மலேசியா குறித்து, ஏடுகளில் செய்திகள் இரண்டொருநாட்களாக வந்துகொண்டே இருக்கின்றன.

அதன் தொடர்பாக, டெல்லியில் நாடாளுமன்ற இரு அவைகளிலும் அண்மையில் இந்தப் பிரச்சினையில் வாக்குவாதம் சற்றுச் சூடான அளவில் நடைபெற்று, இப்போது இதனால் இந்தியா - மலேசியா ஆகிய இரு நாடுகளின் நட்புறவுக்கு ஒரு துளியும் பின்னடைவு ஏற்பட்டு விடக் கூடாது என்பதில் இரு நாடுகளும் எச்சரிக்கை உணர்வுடன் செயல்பட்டதையும், செயல்பட்டுக் கொண்டிருப்பதையும் - பொறுப்பில் இருப்பவர்களும், அந்தப் பொறுப்பை உணர்ந்து நடக்க வேண்டுமென்பதிலும் குறையாத அக்கறை கொண்டுள்ளவர்கள் இரு தரப்பிலும் இருப்பதறிந்து மகிழ்கிறேன்.

இதில் என் பெயரும் இழுக்கப்படுவதால் - மலேசியா, சிங்கப்பூர் போன்ற வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுடன் - எனக்குள்ள உறவும், நட்புணர்வும் நீண்ட காலமாகத் தொடருகிற காரணத்தால் - அந்தப் பகுதியில் பொறுப்பில் இருப்போர் - இந்தப் பிரச்சினையில் இந்திய நாட்டு அணுகுமுறையைப் பின்பற்றுவார்கள் என்றே எதிர்பார்க்கிறேன்.

ஒரு நாட்டு வம்சாவளியினர், வெளிநாடுகளில் அவதியுற நேரும்போது பரிவு காட்டுவதும், பாதுகாப்புக் கோருவதும் ஒவ்வொரு நாட்டிலும் பொறுப்பில் உள்ளோர்க்குப் பொருந்துகின்ற இயல்பான உணர்வே ஆகும். அல்லால் ஒரு நாட்டினர், அயல் நாட்டில் வதைபடுவதை அனுமதித்து ஆதரிக்கிற குற்றம் நம்மைச் சேரும் என்பதில் அய்யமில்லை. இந்த உணர்வு இன்று திடீரென்று அல்ல, என்னைப் பொறுத்தவரையில், 1949ஆம் ஆண்டிலேயே அதாவது 58 ஆண்டுகளுக்கு முன்பே உதிரத்தோடு ஊறிய ஒன்றாகும்.

இதே மலேசியா நாட்டில், தமிழ்நாட்டைச் சேர்ந்த தம்பிக்கோட்டையில் பிறந்த கணபதி, மலேசியாவுக்குப் பிழைக்கப் போய், அங்கே தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டு, அது நிறைவேற்றப்பட்டபோது - “கயிற்றில் தொங்கிய கணபதி” என்ற தலைப்பில் என்னுடைய 25 வது வயதில் ஒரு மணி நேரத்தில் 15 பக்கங்களில் எழுதித் தந்து சென்னை “அறிவுப் பண்ணை” பதிப்பகத்தினர் - அச்சியற்றி, அப்போது 3 அணா விலைக்கு விற்கப்பட்ட சிறிய நூல் - 1949 ஜுலைத் திங்களில் வெளியிடப்பட்டது. அதன் சுருக்கம் இதோ:



மலேசியா கோலாலம்பூரில் 8.1.1999 அன்று மெர்தேகா அரங்கில் முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய இலக்கிய உரையை கேட்க அரங்கம் நிரம்பிவழிய தமிழ் மக்கள் திரண்டிருந்த காட்சி!

“பகவத் சிங்கை தூக்குமேடையிலே ஊஞ்சலாட்டி உவகை கொண்ட ஏகாதிபத்தியம் - திருப்பூர்க் குமரனை தடி கொண்டு தாக்கி தெருவெல்லாம் குருதியோடச் செய்து, அதை நக்கிக் குடித்து எக்காளமிட்ட ஏகாதிபத்தியம் - இதோ, இன்றும் அதே ஏகாதிபத்திய குரலெடுத்து தன் சொர

## கலைஞர் கடிதம்

சொரப்பான ரத்த நாக்குகளால், கணபதியையும் ருசித்துப் பார்த்து விட்டது. தூக்குமேடை எத்தனையோ மனிதர்களை தனக்கு உணவாக்கிக் கொண்டு உல்லாசம் பாடியபடிதான் இருக்கிறது. அதன் கோரப் பற்களுக்கிடையே சிக்கிச் சீரழிந்த மனித உருவங்கள் கணக்கிலடங்கா. குற்றவாளி களின் குரல்வளையை நெரிப்பது மட்டுமல்ல, நிரபராதிகளின் வாழ்வை அரை நொடியில் தீர்த்துக்கட்டி, தன் வயிற்றைப் புடைக்க வைத்துக் கொண்டிருக்கிறது தூக்குமேடை! தூக்குமேடை யிலே உறைந்திருக்கும் ரத்தத்திலே, எத்தனை உத்தமர்களின் வரலாறு எழுதப்பட்டி ருக்கிறது தெரியுமா? அங்கே அறுத்தெறியப்பட்ட நரம்புகள் ஒவ்வொன்றும் - ஒடித்தெறியப்பட்ட எலும்புகள் ஒவ்வொன்றும் பேச ஆரம்பித்தால், எத்தனை நீதிபதி களின் “நேர்மை” அம்பலத்திற்கு வரும்! குற்றவாளிக் கூண்டிலே மரண தண்டனை பெற்ற நிரபராதி - அவன் மேல் அபாண்டங்களைச் சுமத்தி, அவனை அழித்த ஆனந்தத்தில் வக்கீலோடு கை குலுக்கும் வறண்ட நெஞ்சத்தினன் - தூக்கிலே தொங்க வேண்டியவன் தோகை மயிலாளின் மடியிலே!.......எதிர்க்கத் தெரியாத ஏழை சுருக்குக் கயிற்றின் அணைப்பிலே!.....இப்படியெல்லாம் பேசத் துவங்கும், அந்த நிரபராதிப் பிணங்கள்.

அவன் சீமான்.

அடுத்த வீட்டுக்காரனும் சீமான்தான்.

ஒருவன் லட்சாதிபதி.

மற்றவன் கோடீஸ்வரன்.

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

## நிவாரணத்திற்காகவே பிரதமருடன் சந்திப்பு!

# மழைச் சேதத்தை பார்வையிட இன்று தூத்துக்குடி பயணம்!

## புதுடெல்லியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

**புதுடெல்லி, டிச.20-**

**புதுடெல்லியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது, தமிழ்நாட்டிற்கு போதிய நிவாரணம் பெறுவதற்காக பிரதமரை சந்திக்க உள்ளதாகவும், மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி உள்ளிட்ட பகுதிகளை இன்று (20.12.2023) பார்வையிட உள்ளதாகவும் தெரிவித்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.12.2023) புதுதில்லியில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:–

தமிழ்நாட்டில் மழை, புயல், வெள்ளம் ஆகியவை குறித்தும், அதனால் ஏற்பட்ட சேதங்கள் குறித்தும், உங்கள் அனைவருக்கும் நன்றாக தெரியும். அதுகுறித்து நான் விரிவாகச் சொல்ல விரும்பவில்லை, தேவையுமில்லை.

கடந்த டிசம்பர் 4ஆம் தேதி அன்று புயலும், அதன் காரணமாக கடுமையான மழையும் ஒரு நாள் முழுக்கப் பெய்தது. அதற்கு முன்பே தமிழ்நாடு அரசால் எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் காரணமாக பெருமளவில் சேதம் தவிர்க்கப்பட்டது. மக்கள் பேராபத்தில் இருந்து காக்கப்பட்டார்கள். இதனை ஒன்றிய அரசின் சார்பில், அங்கு வந்த குழுவும் மாநில அரசுக்கு பாராட்டுதல்களைத் தெரிவித்திருக்கிறது.

### நான்கைந்து நாட்களில் இயல்பு வாழ்க்கை!

மழை நின்றதும் உடனடியாக நிவாரணப் பணிகளை நாங்கள் தொடங்கி விட்டோம். மறுநாளே போக்குவரத்து சீர்செய்யப்பட்டது. 95 விழுக்காடு மின் இணைப்பானது மூன்று நாட்களுக்குள் சரிசெய்யப்பட்டது. புறநகரில் ஒரு சில பகுதிகள் நீங்கலாக, நான்கைந்து நாட்களுக்குள் மற்ற அனைத்துப் பகுதிகளும் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பி விட்டன.

தண்ணீரில் மூழ்கியிருந்த பகுதி மக்களுக்குத் தேவையான பொருட்களைக் கொடுத்தோம். அவர்களையும் பாதுகாப்பான பகுதிக்கு அழைத்து வந்து அமர்த்தினோம்.

நானே பல்வேறு பகுதிகளுக்குச் சென்றிருந்தேன். 20 அமைச்சர்கள், 50 ஐ.ஏ.எஸ் ஐ.பி.எஸ். அதிகாரிகள், 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள் களத்தில் இருந்தார்கள். அதுமட்டுமல்லாமல், வெளிமாவட்டங்களில் இருந்து ஊழியர்கள் அழைத்து வரப்பட்டு, நிவாரணப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டார்கள். புயலுக்கு முன்பும் புயலின் பிறகும் அரசு எடுத்த நடவடிக்கைகளின் காரணமாகத்தான் பாதிப்பு குறைந்தது.

உடனடியாக ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்கள் வருகை தந்தார். பல்வேறு இடங்களை அவரே பார்வையிட்டார். தலைமைச் செயலகத்தில் ஒன்றிய அமைச்சர் அவர்கள், என்னைச் சந்தித்தார். வெள்ளச் சேதங்களைச் சரி செய்ய முதல் கட்டமாக 5 ஆயிரத்து 50 கோடி ரூபாய் தேவை என்று சொன்னேன். இது தொடர்பாக, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கும் கடிதம் எழுதினேன். எனது கடிதத்தை தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு அவர்கள் நேரடியாகக் கொண்டு போய் பிரதமர் அவர்களிடம் கொடுத்தார். ஒன்றிய அரசு இந்த ஆண்டு வழக்கமாக வழங்கப்படவேண்டிய ரூ.450 கோடியை வழங்கி இருக்கிறது. இது பெரும் பேரிடர் என்பதால் கூடுதல் நிதியை கோரியுள்ளோம்.

### ஒன்றிய அரசுக்கு கோரிக்கை

ஒன்றிய அரசால் அனுப்பி வைக்கப்பட்ட குழு தமிழ்நாட்டில் மூன்று நாட்கள் தங்கி பல்வேறு இடங்களைப் பார்வையிட்டது. இறுதியாக கோட்டையில் வந்து என்னைச் சந்தித்தார்கள். முழுமையான சேதங்களைக் கணக்கிட்டு தற்காலிக நிவாரணத் தொகையாக ரூ.7 ஆயிரத்து 33 கோடியும், நிரந்தர தீர்வுப் பணிகளுக்காக 12 ஆயிரத்து 659 கோடி ரூபாயும் வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளேன்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்



புதுடெல்லியில் தமிழ்நாடு இல்லத்தில் நேற்று காலை இனமானப் பேராசிரியர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு அவருடைய திருவுருவப் படத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 20-12-2023

# விளக்கம் அளிப்பதில் என்ன பிரச்சினை?

**இந்திய நாடாளுமன்றத்தில் இருந்து 92 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். பா.ஜ.க.வின் ஜனநாயகச் சாதனைகளில் இதுவும் ஒன்று.**

**நாடாளுமன்றத்தில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களை இடைநீக்கம் செய்வது அவர்களுக்குப் புதிதல்ல.**

**நாடாளுமன்றத்தில் நாட்டின் முக்கிய விவகாரங்கள் குறித்து விவாதம் நடத்த அனுமதி கோரி குரல் எழுப்பியதற்காக கடந்த 5 ஆண்டுகளில் 57 நாடாளுமன்ற உறுப்பினர்கள் 71 முறை இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.**

நாடாளுமன்றத்தில் கடந்த 2019 ஆம் ஆண்டு முதல் விலைவாசி உயர்வு, ஜி.எஸ்.டி வரி உயர்வு, மகாராஷ்டிரா குதிரை பேரம், மணிப்பூர் கலவரம், ரஃபேல் விவகாரம், டெலிபோன் ஒட்டுக் கேட்பு, அதானி விவகாரம் உள்ளிட்ட பிரச்சினைகளை எழுப்பியதற்கு 57 நாடாளுமன்ற உறுப்பினர்கள் 71 முறை இடை நீக்கம் செய்யப்பட்டு இருக்கிறார்கள். அதிகபட்சமாக 2022 ஆம் ஆண்டு மழைக்கால கூட்டத்தொடரின் போது ஜி.எஸ்.டி வரி உயர்வுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின. ஆனால் விவாதம் நடத்த அனுமதி மறுக்கப்பட்டது. அப்போது நாடாளுமன்றத்தில் முழக்கமிட்ட 23 எம்.பி.க்கள் இடைநீக்கம் செய்யப்பட்டனர். தி.மு.க. எம்.பி.க்கள் ஐந்து பேர் உட்பட அப்போது 19 எம்.பி.க்கள் மாநிலங்களவையில் இடைநீக்கம் செய்யப்பட்டனர். அதே பிரச்சினையில் மக்களவையில் நான்கு எம்.பி.க்கள் இடைநீக்கம் செய்யப்பட்டனர்.

2021 ஆம் ஆண்டு குளிர்கால கூட்டத் தொடரின் போது விவசாயிகள் பிரச்சினை, விவசாயிகள் போராட்டம் குறித்து விவாதம் நடத்த வலியுறுத்தியதற்காக மாநிலங்களவையில் 12 எம்.பி.க்கள் இடைநீக்கம் செய்யப்பட்டனர். இப்படி பல பிரச்சினைகளில் காங்கிரஸ், தி.மு.க., திரிணாமுல் காங்கிரஸ், இடதுசாரி கட்சிகள் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 57 எம்.பி.க்கள் 71 முறை சஸ்பெண்ட் செய்யப்பட்டு இருப்பது தெரியவந்துள்ளது. இடைநீக்கம் செய்வதுதான் பா.ஜ.க. தலைமையின் அரசியல் பாணியாகும்.

**ராகுல்காந்தியை பதவி நீக்கம் செய்ததைப் போலவோ - மஹுவா மொய்த்ரா பதவியைப் பறித்ததைப் போலவோ செய்ய முடியாத நிலையில், 'இடைநீக்கம்' என்ற அஸ்திரத்தை அதிகம் பயன்படுத்தி வருகிறார்கள். இதைத்தான் இப்போதும் செய்துள்ளார்கள்.**

கடந்த 13 ஆம் தேதி நாடாளுமன்றத்தில் புகைக்குண்டு வீசப்பட்டது. இது தொடர்பாக விவாதிக்க வேண்டும் என்று சொன்ன கனிமொழி கருணாநிதி உள்ளிட்ட 13 மக்களவை உறுப்பினர்களும், ஒரு மாநிலங்களவை உறுப்பினரும் இடைநீக்கம் செய்யப்பட்டார்கள். அதன் பிறகு நேற்றைய தினம் மக்களவை உறுப்பினர்கள் 33 பேர், மாநிலங்களவை உறுப்பினர்கள் 45 பேர் என 78 எம்.பி.க்கள் இடைநீக்கம் செய்யப்பட்டார்கள். ஆக மொத்தம் 92 உறுப்பினர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள்.நாடாளுமன்ற தி.மு.க. குழுத்தலைவர் டி.ஆர்.பாலு உள்ளிட்ட 10 தி.மு.க. உறுப்பினர்கள் இதில் அடக்கம்.

**இந்தியாவின் நாடாளுமன்றத்துக்குள் புகுந்து புகைக் குண்டு வீசும் சம்பவம் நடந்திருக்கிறது. இதைக் கூட விவாதிக்காமல் நாடாளுமன்றம் எதற்காக கூட வேண்டும்? உள்ளே புகுந்தவர்களுக்கு ஏதாவது ஒரு காங்கிரஸ் எம்.பி. பாஸ் கொடுத்திருந்தால் விவாதித்திருப்பார்களா, மாட்டார்களா? உள்ளே புகுந்தவர்களில் ஒருவர் இசுலாமியராக இருந்திருந்தால் விவாதித் திருப்பார்களா, மாட்டார்களா? இப்போது மட்டும் ஏன் விவாதிக்கவில்லை? உள்ளே வீசப்பட்ட புகைக் குண்டுவில் ரசாயனமோ - விஷமோ கலக்கப்பட்டு இருந்தால் என்ன ஆகி இருக்கும்? பலரது உயிருக்கே ஆபத்தானதாக ஆகி இருக்குமே? அப்போதும் இப்படித்தான் இருந்திருப்பார்களா?**

இந்தியாவின் பிரதமர் நரேந்திரமோடி சபைக்கு வருகை தந்து, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆறுதல் கூடச் சொல்லவில்லையே? உள்துறை அமைச்சர் அமித்ஷா, நாடாளுமன்றத்துக்குள் வந்து விளக்கம் கூட அளிக்கவில்லையே? விளக்கம் அளிப்பதில் என்ன பிரச்சினை இருக்கிறது?

ஆனால் இந்தி நாளிதழ் ஒன்றுக்கு பிரதமர் பேட்டி அளித்திருப்பதாகச் செய்தி வெளியாகி உள்ளது. "நாடாளுமன்றப் பாதுகாப்பு அத்துமீறல் சம்பவம் வேதனை அளிக்கிறது. கவலைக்குரியது. இது தொடர்பாக புலனாய்வு அமைப்புகள் விசாரணை மேற்கொண்டு வருகின்றன. கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த விவகாரத்தின் பின்னணியில் இருப்பவர்கள் மற்றும் அவர்களின் நோக்கம் குறித்து ஆழமாக விசாரிப்பது அவசியம். நாடாளுமன்றச் சம்பவத்தின் தீவிரத்தை குறைத்து மதிப்பிட முடியாது. அதே தீவிரத்துடன் மக்களவைத் தலைவர் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறார். கூட்டு மனப்பான்மையுடன் தீர்வு காணும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இது போன்ற விவகாரத்தின் வீண் சர்ச்சைகளை அனைவரும் தவிர்க்க வேண்டும்" என்று பிரதமர் சொன்னதாகச் செய்தி வெளியாகி உள்ளது.

**இதையே நாடாளுமன்றத்தில் சொன்னால் என்ன குறைந்து விடப் போகிறது? ஒரு நாடாளுமன்ற உறுப்பினர்க்கு எங்கோ ஒரு இடத்தில் ஏதாவது ஒரு பிரச்சினை என்றால், அது தொடர்பாக 'உரிமை மீறல்' என்ற பொருளில் நாடாளுமன்றத்தில் பிரச்சினை கிளப்பப்பட்டு விவாதங்கள் நடக்கும். ஆனால் இங்கே அனைத்து உறுப்பினர்களும் அச்சுறுத்தப் பட்டுள்ளார்கள். பா.ஜ.க. உறுப்பினர்களும் சேர்ந்து பீதியில் இருக்கிறார்கள். இது மிகப்பெரிய அச்சுறுத்தல் அல்லவா? அது விவாதிக்க வேண்டாமா?**

இதனை எதிர்க்கட்சிகள் அரசியல் ஆக்கவில்லை. 'உள்துறை அமைச்சர் பதில் சொல்ல வேண்டும்' என்றுதான் சொல்கிறார்கள். உள்துறை அமைச்சர் அவருக்கு சம்பந்தமில்லாத பிரச்சினைக்கு எல்லாம் - பிரதமருக்குப் பதிலாக பக்கம் பக்கமாக உரையாற்றி இருக்கிறாரே. இப்போது அவர் பதில் சொல்லியாக வேண்டியதற்கு ஏன் பதில் அளிக்க மறுக்கிறார்?

**"நாடாளுமன்றத்துக்குள் வரும் எங்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது?" என்று கேட்க நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உரிமை இல்லையா?**

## திற்பரப்பு அருவியில் தண்ணீர் வரத்து அதிகரிப்பு!

*கன்னியாகுமரி, டிச.20-*

*திற்பரப்பு அருவியில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுவதால் சுற்றுலா பயணிகள் குளிக்க 3வது நாளாக தடை விதிக்கப்பட்டுள்ளது.*

*கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த 3 நாட்களுக்கு பெய்த கனமழை காரணமாக திற்பரப்பு அருவியில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது.*

*இதனால் சுற்றுலா பயணிகள் குளிக்க 3வது நாளாக தடை விதிக்கப்பட்டு இருக்கிறது. தென்மேற்கு பருவமழை காரணமாக 4 மாவட்டங்களில் கனமழை கொட்டி தீர்த்து வருகிறது.*

*இதன் காரணமாக பல்வேறு நீர்நிலைகள், அருவிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து உள்ளது.*



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.12.2023) புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தில் தன்னை சந்திக்க வருகை தந்த டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அவர்களுக்கு, 'உங்களில் ஒருவன்' நூலின் ஆங்கில பதிப்பான "One Among You" நூலினை வழங்கினார். உடன் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, தயாநிதி மாறன் எம்.பி., ஆம் ஆத்மி கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் ராகவ் சத்தா ஆகியோர் உள்ளனர்.

# முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் ஆலோசனை!

## புதுடெல்லியில் தமிழ்நாடு இல்லத்தில் சந்திப்பு 40 நிமிடங்கள் நீடித்தது!

புதுடெல்லி, டிச. 20 -

புதுடெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் சந்தித்துப் பேசினார்.

இச்சந்திப்பு சுமார் 40 நிமிடங்களுக்கும் மேலாக நீடித்தது.

சென்னை உள்ளிட்ட 4 மாவட்டங்களில் மிக்ஜாம் புயல், மழை பாதிப்பு மற்றும் தென் மாவட்டங்களில் கனமழையால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு விரைந்து நிதி ஒதுக்க கோரவும், இந்தியா கூட்டணியின் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்பதற்காகவும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் டெல்லி வருகை தந்துள்ளார்.

இந்நிலையில், டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் நேற்று காலை சந்தித்துப் பேசினார்.

அப்போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 'உங்களில் ஒருவன்' நூலின் ஆங்கில பதிப்பான "One Among You" புத்தகம் மற்றும் பூங்கொத்து அரவிந்த் கெஜ்ரிவால் அவர்களுக்கு கொடுத்து வரவேற்றார்.

இதனைத் தொடர்ந்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் அவர்கள் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பு சுமார் 40 நிமிடங்களுக்கும் மேலாக நீடித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சந்திப்பின்போது, நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், ஆம் ஆத்மி எம்.பி. ராகவ் சத்தா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

முன்னதாக, தமிழ்நாடு இல்லத்தில், காவல்துறை அணிவகுப்பு மரியாதையை டெல்லி முதல்வர் கெஜ்ரிவால் ஏற்றுக் கொண்டார்.

**பேராசிரியர் திருவுருவப் படத்திற்கு அரவிந்த் கெஜ்ரிவால் மலரஞ்சலி!**

இந்நிலையில், தமிழ்நாடு இல்லத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்துப் பேசிட வருகை தந்த டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அவர்கள் இனமானப் பேராசிரியர் அவர்களின் 102வது பிறந்த தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

### கடும் மழையால் பாதிக்கப்பட்டுள்ள தூத்துக்குடி மாவட்டத்தில்

# நிவாரணப் பணிகள் மேற்கொள்ள கூடுதல் அமைச்சர்கள் நியமனம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, டிச. 20 -**

**கனமழையால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள தூத்துக்குடி மாவட்டத்திற்கு கூடுதலாக அமைச்சர் பெருமக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்களை நியமித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.**

திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி மாவட்டங்களில் பெய்த கனமழை முதல் அதிகனமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை சீர் செய்திடவும், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளவும், அமைச்சர் பெருமக்கள் நியமிக்கப்பட்டு, அவர்களுடன் இணைந்து நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், கனமழையால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள தூத்துக்குடி மாவட்டத்தில் ஸ்ரீவைகுண்டம் பகுதியில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் பா.பொன்னையா, அவர்களையும், சாத்தான்குளம் - காயல்பட்டினம் பகுதிகளுக்கு வணிக வரித் துறை அமைச்சர் பி.மூர்த்தி மற்றும் பதிவுத் துறை தலைவர் தினேஷ் ஆலிவர் பொன்ராஜ் அவர்களையும்;

தூத்துக்குடி மாநகராட்சி பகுதிகளுக்கு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன் அவர்களையும்;

தூத்துக்குடி மாநகராட்சியை சுற்றியுள்ள பகுதிகளுக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் மற்றும் மாநகர போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநர் ஆல்பி ஜான் அவர்களையும்;

இவர்களுடன் கூடுதலாக சிறப்பு முயற்சிகள் செயலாக்கத் துறை செயலாளர் டாக்டர் தாரேஷ் அகமது மற்றும் சிப்காட் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே. செந்தில்ராஜ் ஆகியோர் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடன் இணைந்து மீட்பு, நிவாரணப் பணிகள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்குவதை ஒருங்கிணைத்து மேற்கொள்ள முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

மேலும், ஹெலிகாப்டர் மூலம் உணவு வழங்குதல், வெள்ளத்தால் சூழ்ந்துள்ளோரை மீட்கும் பணியினை ஒருங்கிணைக்க தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த் மதுரையிலிருந்து பணியாற்றவும், பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள மக்களுக்கு வேண்டிய மருத்துவ உதவிகளை ஒருங்கிணைந்து மேற்கொள்ள மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி அவர்கள் அம் மாவட்டங்களுக்கு சென்று பணியாற்றிடவும் முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

அத்துடன், தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் பெருமக்கள் சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி.கீதாஜீவன், மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், கண்காணிப்பு அலுவலர் திருமதி. ஜோதி நிர்மலா ஆகியோர் நிவாரணப் பணிகளை ஒருங்கிணைந்து மேற்கொள்ளவும் முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

### பாதுகாப்பு குளறுபடி: ஒன்றிய அரசு விளக்கம் அளிக்கக்கோரி முழக்கம்!

# மீண்டும் 70 எம்.பி.க்கள் இடைநீக்கம்!

*புதுடெல்லி, டிச. 20 -*

*நாடாளுமன்றத்தில் ஏற்கனவே 92 எம்.பி.க்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்ட நிலையில்,*

*நேற்றும் ஒரே நாளில் மேலும் 70க்கும் மேற்பட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.*

*நாடாளுமன்றத்திற்குள் புகை குண்டு வீசப்பட்டது தொடர்பாக பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் விளக்கம் அளிக்க வேண்டும், நாடாளுமன்ற பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் எனக் கோரி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இரு அவைகளிலும் பதாகைகளை ஏந்தி முழக்கங்களை எழுப்பினர்.*

*இதனால் ஏற்பட்ட அமளியை தொடர்ந்து ஏற்கனவே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 92 பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டனர்.*

*இதனைக் கண்டித்து நேற்றும் முழக்கங்கள் எழுப்பப்பட்டன. புகை குண்டு வீச்சு குறித்து ஒன்றிய அரசு கட்டாயம் விளக்கம் அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.*

*இதனால் இரு அவைகளிலும் அமளி நிலவியது. இதன்காரணமாக மக்களவை மற்றும் மாநிலங்களவையைச் சேர்ந்த 70க்கும் மேற்பட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டனர்.*

*மக்களவையில் எதிர்க்கட்சி எம்.பிக்கள் அனைவரும் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர்.*

*நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி எம்.பி.க்களே இல்லாத வகையில் தொடர்ந்து சஸ்பெண்ட் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதற்கு அரசியல் கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.*

# முன்னெச்சரிக்கையுடன் செயல்பட்டதால் சேதாரம் வெகுவாகக் குறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!... முதல் பக்கத் தொடர்ச்சி

ஒன்றிய அரசின் நிதி வரட்டும் என்று காத்திருக்காமல் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்ட மக்களுக்கான இழப்பீட்டை உடனடியாக அரசு அறிவித்தது. 6 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறோம். கடந்த 17 ஆம் தேதி அன்று சென்னை வேளச்சேரிப் பகுதியில் நானே பங்கேற்று இத்தொகையை வழங்கியிருக்கிறேன். மக்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

ஒன்றிய அரசின் நிதியை முழுமையாகப் பெற்றால் தான் முழுமையாக நிவாரணப் பணிகளைச் செய்ய முடியும். எனவே பிரதமர் அவர்களை நேரடியாகச் சென்று சந்தித்து கோரிக்கை வைக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருந்த நிலையில், கடந்த 17 மற்றும் 18ஆம் தேதிகளில் தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களான நெல்லை, கன்னியாகுமரி, தூத்துக்குடி, தென்காசி ஆகிய மாவட்டங்களில் கடுமையான மழை பெய்தது. இதன் காரணமாக திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்கள் கடும் பாதிப்பை சந்தித்துள்ளன.

**குறிப்பிட்ட அளவிற்கு மேல் மழை!**

கடுமையான மழைப் பொழிவு 17 மற்றும் 18 தேதிகளில் ஏற்படும் என்பதை சென்னை வானிலை ஆராய்ச்சி மையம் 17 ஆம் தேதி அளித்தது.

வானிலை ஆராய்ச்சி மையம் குறிப்பிட்ட மழை அளவுகளுக்கு பல மடங்கு அதிகமாக மழைப் பொழிவு இம்மாவட்டங்களில் வரலாற்றில் இதுவரை பதியப்படாத அளவுக்கு ஏற்பட்டது. எடுத்துக்காட்டாக, காயல்பட்டினத்தில் 94 சென்டி மீட்டர் மழை. அப்பகுதியே வெள்ளக்காடானது. ஓராண்டில் பெய்ய வேண்டிய மழை ஒரே நாளில் கொட்டி தீர்த்ததை நீங்கள் எல்லாம் அறிவீர்கள்.

வானிலை ஆய்வு மையத்தின் எச்சரிக்கை நமக்கு சற்றே தாமதமாக கிடைத்தாலும், அதில் அளித்துள்ள அளவை விட அதிகமாக மழை பொழிவு ஏற்பட்ட சூழ்நிலையிலும், தமிழ்நாடு அரசு முன்கூட்டியே பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்திருந்தது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மழைப்பொழிவு கடுமையான உடனேயே 8 அமைச்சர்கள், 10 இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் அங்கே மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

மாவட்ட வாரியாக, இந்திய காவல் பணி அதிகாரிகள் மீட்பு மற்றும் கண்காணிப்பு பணிகளில் நியமிக்கப்பட்டார்கள்.

அருகிலுள்ள மாவட்டங்களில் இருந்து தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறையின் வீரர்கள், படகுகள், உபகரணங்கள், 375 வீரர்கள் கொண்ட தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையின் 15 குழுக்கள், 275 வீரர்கள் கொண்ட தேசிய பேரிடர் மீட்பு படையின் 10 குழுக்கள் களத்தில் நிவாரணப்பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

கூடுதலாக, மீட்புபணிகளைவிரைவுபடுத்த தமிழ்நாடு பேரிடர் மீட்பு படையில் பயிற்சி பெற்ற 230 பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

இதுமட்டுமின்றி, நமது இராணுவ வீரர்கள் 168 பேர் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

**முன்னெச்சரிக்கையாக 12,653 பேர் மீட்பு!**

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இதுவரை 12 ஆயிரத்து 653 பேர் மீட்கப்பட்டு 141 நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டு, உணவு, குடிநீர், மருத்துவ வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் அளிக்கப்பட்டு வருகிறது.

வெள்ள நீர் சூழ்ந்த பகுதிகளில் உள்ள மக்களுக்கு ஹெலிகாப்டர் மூலம் உணவு வழங்கப்பட்டு வருகிறது.

இந்த பெருமழையினையும் அதனால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளையும், நடைபெறும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளையும் நானும், தலைமைச் செயலாளர் அவர்களும் பலமுறை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுடன் காணொளி வாயிலாகவும், தொலைபேசி வாயிலாகவும் அவ்வப்போது கண்காணித்து வருகிறோம்.

> **ஒன்றிய அரசின் நிதி வரட்டும் என்று காத்திருக்காமல் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்ட மக்களுக்கான இழப்பீட்டை உடனடியாக அரசு அறிவித்தது. 6 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறோம். கடந்த 17 ஆம் தேதி அன்று சென்னை வேளச்சேரிப் பகுதியில் நானே பங்கேற்று இத்தொகையை வழங்கியிருக்கிறேன். மக்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.**

19ஆம் தேதியான இன்றும் இந்த நான்கு மாவட்டங்களுக்கும் சிவப்பு எச்சரிக்கை வானிலை ஆய்வு மையம் விடுத்துள்ளது.

தமிழ்நாடு அரசைப் பொறுத்தமட்டில், சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூரில் எந்தவகையில் செயல்பட்டு மக்களைக் காத்தோமோ அதேபோல, நெல்லை, கன்னியாகுமரி, தூத்துக்குடி, தென்காசி மாவட்ட மக்களைக் காக்கும் பணியில் இறங்கி தீவிரமாக செயல்பட்டு வருகிறோம்.

அரசு இயந்திரம் முழுமையாக அந்த மாவட்டங்களில் மையம் கொண்டுள்ளது. இந்த பாதிப்புகளுக்கு உள்ளான மாவட்ட மக்களுக்கான நிவாரணத்தையும் தமிழ்நாடு அரசு செய்தாக வேண்டும்.

**பிரதமரிடம் பேச நேரம் ஒதுக்கீடு!**

ஆகவே, முதலில் சென்னை பெருவெள்ளத்திற்காக வைக்கப்பட்ட கோரிக்கையுடன், தென் மாவட்ட வெள்ளச் சேதங்களையும் இணைத்து கோரிக்கை வைப்பதற்காக பிரதமர் அவர்களிடம் நேரம் கேட்டிருந்தேன். இன்று இரவு 10.30 மணிக்கு நேரம் ஒதுக்கி உள்ளார்கள். தமிழ்நாட்டின் கோரிக்கைகளை முழுமையாக பிரதமர் அவர்களிடம் நேரில் நான் வழங்கப் போகிறேன்.

இந்த நான்கு மாவட்டங்களில் வரலாறு காணாத மழையால், பாதிக்கப்பட்ட மக்களை மீட்டு அவர்களது வாழ்வாதாரங்களை திரும்ப உருவாக்க உடனடி நிவாரணமாக தேசிய பேரிடர் நிவாரண நிதி வழங்கிட இந்திய பிரதமர் அவர்களிடம் கோர இருக்கிறேன்.

அதேபோல, தமிழ்நாட்டில் ஏற்கனவே சென்னை உள்ளிட்ட நான்கு மாவட்டங்களில் இம்மாத துவக்கத்தில் ஏற்பட்ட மிக்ஜாம் புயல் காரணமாக ஏற்பட்ட அதி கனமழை வெள்ளப் பெருக்கினால் கடும் பாதிப்புக்களை சந்தித்தோம்.

இவ்வாறு அடுத்தடுத்து இரண்டு பேரிடர்களை தமிழ்நாடு சந்தித்துள்ள நிலையில், இவற்றை எதிர்கொள்ள தேவையான அனைத்து உதவிகளையும் ஒன்றிய அரசு வழங்குமாறு பிரதமர் அவர்களிடம் வலியுறுத்த இருக்கிறேன்.

இவ்வாறு குறிப்பிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடர்ந்து செய்தியாளர்கள் கேள்விகளுக்கு பதிலளித்தார்.

அது வருமாறு:-

**தென்மாவட்டங்களுக்குச் செல்கிறேன்.**

**செய்தியாளர் :** *தென் மாவட்டங்களில் கனமழையால் ஏற்பட்ட பாதிப்புகளை பார்வையிட நேரடியாக செல்வீர்களா?*

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பதில் :** இன்று இரவு பிரதமர் அவர்கள் சந்திக்க நேரம் கொடுத்திருக்கின்ற காரணத்தால், இரவு பிரதமரை பார்த்துவிட்டு நிலவரத்தையெல்லாம் சொல்லிவிட்டு, Memorandum கொடுத்துவிட்டு, நாளை காலை நேரடியாக தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலிக்கும் செல்கிறேன்.

**செய்தியாளர் :** *கடந்த காலங்களில் ஒன்றிய அரசிடமிருந்து கோரப்பட்ட நிவாரண நிதி நிலுவையில் உள்ள நிலையில், தற்போது கோரப்பட்ட நிவாரண நிதி உடனடியாக கிடைக்குமா....?*

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் :** கிடைக்கும் என்ற நம்பிக்கையோடுதான் இருக்கிறோம். ஏற்கனவே, ஒன்றிய அமைச்சர் திரு.ராஜ்நாத் சிங் அவர்களிடம் சொல்லியிருக்கிறோம். பிரதமருக்கு கடிதம் கொடுத்திருக்கிறோம். இன்றைக்கும் பிரதமரிடத்தில் இதை வலியுறுத்துகிறோம்.

**60 ஆண்டுகாலமாக சந்திக்காத மழை!**

**செய்தியாளர் :** *மழை வெள்ள பாதிப்புகள் ஏற்படாத வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்படுமா...?*

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் :** அதற்கு ஏற்கனவே பல திட்டங்களை தீட்டி செயல்படுத்தி கொண்டுதான் இருக்கிறோம். சென்னையில் இதுவரை 47 வருடங்களாக வராத மழை, தென்பகுதியில் 60 ஆண்டு காலமாக சந்திக்காத மழை பெய்திருக்கிறது. அதனால் இது எதிர்பாராதது. இருந்தாலும் இதற்காக முன்கூட்டியே என்னென்ன செய்யவேண்டுமோ அதையெல்லாம் நிச்சயம் அரசு செய்யும்.

**செய்தியாளர் :** *நாடாளுமன்றத்தில் நடைபெற்ற பிரச்சினை காரணமாக, நாடாளுமன்ற உறுப்பினர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டது குறித்து....*

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் :** அது உங்களுக்கு புரிந்தால் சரி. உங்களுக்கு புரிந்தால் அதை சொல்லுங்கள்.

**செய்தியாளர் :** *கவர்னர் தமிழ்நாட்டில் பல அலுவலர்களை வைத்து கூட்டங்களை நடத்தி வருவது குறித்தும், இதற்கு பல கட்சிகள் கண்டனம் தெரிவித்து வருவது பற்றி....*

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் :** கொரோனா போன்ற பேரிடர் ஏற்பட்டபோது, பிரதமர் அவர்கள்தான் ஆலோசனை கூட்டங்களை நடத்தி ஆலோசனைகளை வழங்கி கொண்டிருந்தார்கள். அப்போது குடியரசுத் தலைவர் ஏதாவது செய்திருந்தால், என்ன reaction, அதே reactionதான் இப்போது.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது பேட்டியில் குறிப்பிட்டிருந்தார்.

## தென் மாவட்டங்களில் அதி கனமழை : பெரும் பாதிப்புகள்!

# வேகத்தோடு செயல்பட்டு இந்தப் பேரிடரை வென்றிட வேண்டும்!

### புதுடெல்லியிலிருந்து காணொலிக் காட்சி மூலம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தல்!

புதுடெல்லி, டிச.20–

**தென் மாவட்டங்களில் பெய்து வரும் அதிகனமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும், மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து அமைச்சர் பெருமக்கள், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆகியோருடன் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக ஆலோசனை நடத்தினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.12.2023) புதுடெல்லியிருந்து காணொலிக் காட்சி வாயிலாக, தென் மாவட்டங்களில் பெய்து வரும் அதிகனமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும், மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்தும் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் மரு. கா.ப. கார்த்திகேயன், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் ஜி. லட்சுமிபதி, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பி.என். ஸ்ரீதர், மற்றும் தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் துரை. ரவிச்சந்திரன் ஆகியோருடன் ஆலோசனை மேற்கொண்டார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தின் போது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், போர்க்கால அடிப்படையில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை பாதுகாப்புடன் முகாம்களில் தங்க வைக்கப்பட வேண்டும் என்றும், முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு தேவையான அனைத்து அத்தியாவசிப் பொருட்களும் தங்குதடையின்றி வழங்கப்பட வேண்டும் என்றும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்தரவிட்டார்.

**புதுடெல்லியிலிருந்து முதல்வர் காணொலி உரை!**

இந்த ஆலோசனைக் கூட்டத்தின் போது, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:

திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி மாவட்டங்களில் வெள்ள நிவாரண பணிகளில் ஈடுபட்டுள்ள அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் மற்றும் காவல்துறை அலுவலர்களுக்கு என் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

வரலாறு காணாத இந்த வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்டுள்ள மக்களை உடனடியாக மீட்டு, நிவாரண உதவிகளை மிகக்குறுகிய காலத்திற்குள் வழங்கிட வேண்டிய சவாலான சூழலில் நாம் இப்பொழுது உள்ளோம்.

தற்போது மேற்கு தொடர்ச்சி மலையில் உள்ள அணைகளில் இருந்து வெளியேற்றப்படும் நீரின் அளவு குறைக்கப்பட்டு இருந்தாலும், இந்த இரண்டு நாட்களில் பெய்த பெருவெள்ளம் இன்னும் வடியாமல், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் பல பகுதிகளில் இன்னும் வெள்ளநீரில் மக்கள் சிக்கி உள்ளார்கள்.

இவர்களை உடனடியாக மீட்டெடுத்து உயிரிழப்புகளை தடுக்க வேண்டியது தான் நம் முன் தற்போது இருக்கக்கூடிய தலையாய கடமை. இந்தப் மீட்புப்பணிகளில் இராணுவம், NDRF, SDRF ஆகியவற்றோடு இணைந்து, காவல் துறையும், தீயணைப்பு துறையும், வருவாய்த்துறையும் தொடர்ந்து களப்பணி ஆற்ற வேண்டும்.

பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து மக்களை வெளியேற்றி, முகாம்களில் தங்க வைத்திருந்தாலும், இன்னும் பல பகுதிகளில் சிக்கியுள்ள மக்களை உடனடியாக வெளியேற்றி முகாம்களில் தங்க வைக்க வேண்டும். இதற்கு தேவைப்படும் அனைத்து இடங்களிலும் கூடுதலாக புதிய முகாம்களை அமைத்திட வேண்டும். தற்போது முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு தேவையான உணவு, உடைகள், போர்வைகள் போன்ற பொருட்களை உடனடியாக வழங்கிட வேண்டும்.

**நிவாரணப் பொருட்களை விரைந்து வழங்குக!**

இந்த நிவாரணப் பொருட்களை பக்கத்து மாவட்டங்களில் பெற்று தேவைப்படும் இடங்களுக்கு சரியான நேரத்திற்கு கொண்டு சேர்க்க வேண்டிய பணிகளையும் ஒருங்கிணைத்து செயலாற்ற வேண்டும். நாம் அனைவரும் இணைந்து செயலாற்றி மக்களின் உயிர்களை காப்பாற்றி, அவர்கள் அரசின் மீது வைத்துள்ள நம்பிக்கையை நிலைநாட்டிட வேண்டியது சவாலான நேரமாக இது அமைந்திருக்கிறது.

சென்னையிலும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களிலும் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தின்போது நாம் அனைவரும் செயல்பட்ட அதே வேகத்தோடும், ஒருங்கிணைப்போடும் செயல்பட்டு, இந்த பேரிடரையும் நாம் வென்றிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்தப் பணியிலே ஈடுபட்டுள்ள அனைவருக்கும் எனது நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன், நன்றி, வணக்கம்.

**முகாம்களிலுள்ள மக்களுக்கு முதல்வர் உறுதி!**

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக திருநெல்வேலி மாவட்டத்தில் முகாம்களில் தங்கியுள்ள பொதுமக்களிடம் அவர்களுக்கு செய்து கொடுக்கப்பட்டுள்ள வசதிகள் குறித்தும், பாதிப்புகளின் விவரங்கள் குறித்தும் கேட்டறிந்தார். மேலும், அரசு உங்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்து தரும் என்று தெரிவித்தார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில், தலைமைச் செயலகத்திலிருந்து தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், இ.கா.ப., பொதுத்துறை செயலாளர் க. நந்தகுமார், ஆகியோரும், காணொலிக் காட்சி வாயி லாக வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே. பிரபாகர், மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## தலைமைக் கழக அறிவிப்பு

**தென் மாவட்டங்களில் பெய்து வரும் அதி கனமழை காரணமாக, வரும் 24-12-2023 அன்று சேலத்தில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த தி.மு.க. இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாடு ஒத்திவைக்கப்படுகிறது. தேதி பின்னர் அறிவிக்கப்படும்.**

**தலைமைக் கழகம்,**
**தி.மு.க.**

# தென்மாவட்டங்களில் மழை, வெள்ள மீட்புப் பணியில் ராணுவம்!

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அறிக்கை!

*சென்னை, டிச. 20 -*

*அதிகனமழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் தென் மாவட்டங்களில் நடக்கும் மீட்புப் பணிகளில் ராணுவம் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாக அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.*

*தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழை தீவிரமடைந்துள்ளது. தென் மாவட்டங்களில் அதி கனமழை பொழிவு, போர்க்கால அடிப்படையில் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பது குறித்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் விரிவான அறிக்கை வெளியிட்டுள்ளார்.*

*அதில் அவர் கூறியிருப்பதாவது:*

*“வளி மண்டல மேலடுக்குச் சுழற்சி காரணமாக திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி மற்றும் தென்காசி மாவட்டங்களில் அதி கனமழை பெய்யக்கூடும் என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது. இதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் (டிச. 17) காலை முதல் திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி மற்றும் தென்காசி மாவட்டங்களில் பரவலாக கனமழை பெய்து வருகிறது. குறிப்பாக திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ஒரு மணி நேரத்தில், பல பகுதிகளில் அதி கன மழை பதிவாகியுள்ளது. கன மழை எச்சரிக்கையினைத் தொடர்ந்து மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக பேரிடர் மீட்புப் படை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும், தேசிய பேரிடர் மீட்புப் படையின் 2 குழுக்கள் மீட்பு நடவடிக்கைகளுக்காக வர உள்ளன.*

*இதுமட்டுமின்றி, இந்திய ராணுவம் மற்றும் கடலோர பாதுகாப்பு படையினரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பாதிப்புக்குள்ளாகக்*



*கூடிய பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு பொதுவான எச்சரிக்கை நடைமுறை மூலம் மூலம் 62.72 லட்சம் நபர்களுக்கு எச்சரிக்கை குறுஞ்செய்தி கள் அனுப்பப்பட்டுள்ளன.*

*முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, பாதிப்பிற்குள்ளாகக்கூடிய பகுதிகளில் இருந்து பொதுமக்கள் முன்கூட்டியே நிவாரண முகாம்களில் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ளனர். மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு வரப்பெற்ற 13 புகார்கள் உரிய மேல்நடவடிக்கைக்காக தொடர்புடைய துறைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.*

*அரசு பேருந்துகள் முக்கியத் தடங்களிலும் அவசர கால உதவிக்காகவும் சம்பந்தப்பட்ட மாவட்ட நிருவாகங்களின் உத்தரவுப்படி இயக்கப்படுகின்றன. அமைச்சர்களும் கண்காணிப்பு அலுவலர்களும் முகாமிட்டு முன்னெச்சரிக்கை, மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் திருநெல்வேலி மாவட்டத்திற்கு விரைந்துள்ளார்.*

*கனமழையின் தாக்கத்தை எதிர்கொள்ள மாவட்ட நிர்வாகத்தால் அனைத்து விதமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, அனைத்துத்துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்றி வருகின்றனர்”*

*இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*



பேரறிஞர் அண்ணாவால் ”பேராசிரியர் தம்பி என்று அன்போடும், இனமானப் பேராசிரியர் என்று முத்தமிழறிஞர் கலைஞரால் பெருமிதத்தோடும் அழைத்துப் போற்றப்பட்ட, பேராசிரியர் அவர்களின் 102– வது பிறந்தநாளையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் – கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க பேராசிரியர் மகன் பேராசிரியர் அ.அன்புச்செல்வன், கழக செய்தித் தொடர்பு அணித் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், தி.மு.க. இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, தலைமை நிலைய செயலாளர்கள் பூச்சி எஸ்.முருகன், துறைமுகம் காஜா, சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ப.ரங்கநாதன், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், மயிலை த.வேலு உள்ளிட்டோர் நேற்று (19.12.2023) காலை நுங்கம்பாக்கம் டி.பி.ஐ.வளாகத்தில் உள்ள பேராசிரியர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு கீழே அமைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்துக்கு மலரஞ்சலி செலுத்தினார்கள்.

## கழக இளைஞரணி மாநில மாநாடு (25)

# “கயிற்றில் தொங்கிய கணபதி!”

## கலைஞர் கடிதம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

கோடீஸ்வரன் நினைக்கிறான், “லட்சாதிபதி கோடீஸ்வரனாய் வளர்ந்து விட்டால் என்செய்வது? தன் பெருமை போய்விடுமே” என்று! அல்லது லட்சாதிபதிக்கு கோடீஸ்வரனிடத்தில் பொறாமை. இந்த எண்ணம் வளருகிறது. முடிவு கொலையில் முடிகிறது. இருவரில் ஒருவன் தூக்குமேடைக்கு நடக்கிறான். கொலைச் செய்தி பத்திரிகையில் வந்ததும் “கொடும் பாதகா” என்று திட்டினவர்கள், கொலையாளி தூக்கில் தொங்கி விட்டான் என்ற செய்தி கேட்டதும் சிறிது வருந்தத்தான் செய்கிறார்கள். ஏன்? முசோலினி அழிய மாட்டானா? அக்கிரமக்காரன்! என்றெல்லாம் “சாபம்” தந்தவர்கள், அவன் கொல்லப்பட்டதும், “அட பாபமே” என்று சோகக் குரல் எழுப்ப வில்லையா? குற்றவாளிகளுக்கேற்ற தண்டனைகள் நிறைவேறுகிற நேரத்திலேயே இந்த நிலை மக்களுக்கு என்றால், குற்றமற்றவன் - கொடுமையை நினைத்தும் பாராதவன் - கொஞ்சு மொழியினன் - நல் நெஞ்சினன், அநியாயமாகச் சாகப் போகிறான் என்று கேட்டால், அச்செய்தி காதிலே ஆயிரமாயிரம் மேகங்கள் சேர்ந்து முழக்கும் இடியொலியாகத்தான் விழும்!

“கணபதி தூக்கிலிடப்படுவார்” - இச்செய்தி திராவிடத்தை - ஏன் உலகத்தையே எட்டிய நேரத்தில் திராவிடம் சோர்ந்து வீழ்ந்தது. அதே வேளையில், ஆறுதல் சிறிது தலை நீட்டியது, “சுதந்திர பூமியில் - சுதந்திர வீரர்களாய் - சுதந்திரத் தலைவர்களைப் பெற்றிருக்கிற நமக்கு ஏன் அச்சம்? நமக்கு ஏன் வீண் சஞ்சலம்? நமது சர்க்கார், நமது நாட்டு கணபதியை அநாதையாக மலேயாவில் மாள விடாது என மனத்தைத் திடப்படுத்திக் கொண்டோம். அது மட்டுமல்ல; `காமன் வெல்த்’தோடு ஏற்படும் உறவு, கணபதியைக் காப்பாற்றும் என நம்பி கண்ணீரைத் துடைத்துக் கொண்டோம். துடைத்த கையை எடுக்கவில்லை. தூக்குமேடை கணபதியைத் தின்று ஏப்பமிட்ட சப்தம் நமக்கு கேட்டு விட்டது.

“அய்யோ கணபதீ! அருமைத் தமிழகத்தின் அன்புச் செல்வா! எப்படியடா உன் உயிர் நீங்கிற்று? உன்னைப் பெற்ற வயிறு பற்றி எரிகிறதடா! ஆபத்து உன்னை அணுகிய நேரத்திலும், நம் அரசாங்கம் காப்பாற்றும் என நம்பியிருந்தேனடா - உன்னைக் காலில் மிதிபட்டு நசுங்கும் ஒரு எறும்பாக எண்ணி விடுவரென்று தெரியாதேடா!.....”

- தமிழ்த் தாய் கதறுகிறாள் இங்கே!..... அவளைப் பார்த்து தூக்குமேடை சிரிக்கிறது.

“பார்த்தாயா, தமிழ்த் தாயே!. . . . வெள்ளைக்காரன் வெளியேறினால் நல்ல காலம் பிறக்குமென்றாயே..... இதோ பார்! . . . . உன் மகனின் சதைகளை, நான் பிய்த்துச் சாப்பிடுகிறேன். வெள்ளைக்காரன் தந்த தீனி இது! வெகு இனிப்பு! . . . . நானுந்தான் இங்கு விருந்து சாப்பிடுகிறேன்” - சிரிக்கிறது தூக்குமேடை. கைகொட்டிச் சிரிக்கிறது; கலகலவெனச் சிரிக்கிறது பக்கத்திலே பிணம் சிரிக்கிறது.

உலகில் எத்தனையோ பேர் தினம் தினம் சாகிறார்கள். எல்லாவற்றுக்குமா எல்லோரும் கவலைப்படுகிறோம்? அதுபோலவே, எத்தனையோ பேர் தூக்கிலிடப்படு கிறார்கள்.....ஆனால் கணபதியின் தண்டனை, தமிழ்நாட்டிற்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. கணபதியே ஒரு பாடமாகி விடுகிறார், தமிழ்நாட்டுக்கு! அவர் வாழ்வே தமிழர்க்கு ஒரு அரசியல் வகுப்பு. அவர் இறுதிக் கடிதம் தமிழர் பட்டாளத்துக்கு ஒரு போர்ப் பிரசங்கம்.

“மலர் மலரும். . . . . மணம் வீசும். . . . . .கருகி மடியும்” பூ மலர்வதும் கருகி மடிவதும், “காயமே இது பொய்யடா” எனக் கழறுபவர் பயன்படுத்திக் கொள்ளும் உதாரணங்கள். “மனிதன் பிறக்கிறான், சாகிறான். வந்த வழியைப் பார்த்துக் கொண்டு போவதே மனிதனின் லட்சணம்” என, வாழ்வை வெறுத்தவர் பேசுவர். மலர் மலர்வதும், கருகி உதிர்வதும் தான் அவர்கள் கண்களில் படுமே தவிர, மலர் தரும் “இன்ப வாசம் அவர்கள் உணர்வைத் தொடுவதில்லை. தொட்டாலும் அதை உரைக்க மறுக்கின்றனர். மடியப் போகிறோமே என்று மலர் மணம் தராமல் இருக்கிறதா?. . . . அப்படியிருக்கும் மலரைத்தான் மக்கள் விரும்புவரா? வயது நீண்ட, வாடா மல்லிகையை வரவேற்பவர் யார்? சாகப் போகிறோமே என்பதற்காக, சமுதாயத்துக்குச் செய்ய வேண்டிய பணியைச் செய்யாமல் இருப்பதா? மலர் மணம் தர மறுப்பதா?. . . . மணம் தரும்




மலராகத்தானிருந்தார் கணபதி. “முடி சார்ந்த மன்னரெலாம் வெந்து பிடி சாம்பலாயினர்” என்று பாடி, முனிவர் ஆஸ்ரமம் அமைத்துக் கொள்ளவில்லை..... தூக்குமேடையிலே இந்த முகாரியைப் பாடவுமில்லை, அந்த வீரர்! “நான் மணம் தரும் மலர். . . . கசக்கி எறியப்படுகிறேன்” என்ற இதய ஒலியை அவர் கடிதமாக்கினார். அவர் கடிதம் “அந்த லோக” ஆசைக்காரருக்கு ஒரு சவுக்கு!

“மிகவும் உயர்ந்த நிலையில் இருந்து தாழ்ந்து போன ஒரு குடும்பத்தை உருவாக்காது உழைக்கிறானாம், என்று பலர் என்னைப் பார்த்துப் பேசியதுண்டு. அதுபற்றி நான் கவலைப்படவில்லை”

ஊருக்குழைத்த அந்த உத்தமர், தோழர் சற்குணத்திற்கு எழுதிய கடைசி கடிதத்தில் இதையும் குறிப்பிடுகிறார்.

எத்தனையோ பேர் பண பலத்தினால். . . . .குடும்பத்துக்குள்ள செல்வாக்கினால், நாட்டுக்குத் தலைவன் நான் என வருவர். நாட்டிலிருந்து வீட்டுக்கு மூட்டை கட்டுவர். அண்ணன், தம்பி, மாமன், மைத்துனன், வீடு, வாசல், இவைகளே அவர்கள் கனவாயிருக்கும். உறவினருக்கு வேலை தேடிக் கொடுத்தல் - தனக்காக உழைத்தவர்கள், தன்னை தலைவனாக்கி யவர்கள், சிறு உரிமை கொண்டாடினாலும் எட்டி உதைத்தல் - இது சில உயர் குடும்பத்து தலைவருக்குப் பிறவிக் குணமாகவே இருக்கும். ஆனால் தாழ்ந்துபோன குடும்பத்தைக் கூட கவனிக்க நேரமில்லை கணபதிக்கு!. .. உழைக்கச் சென்ற இடத்திலும் மக்களுக்காக உயிர் விட்டார். உயிர் பிரியும் நேரத்திலும் “வாழ்க வையம்” என உற்சாகப் பண் பாடினார்.

கடிதத்தில் நம்மையெல்லாம் வேல் கொண்டு குத்தும் பகுதி தான் அது!

“நமது குடும்பம் நசித்துப் போன பின், நான் எப்படி இங்கு வந்தேன் என்பதை நீ அறிவாய். அப்பம் விற்றுக் கொண்டும் இராணி வீட்டில் மங்கு கழுவிக் கொண்டும் ஆங்கிலம் படித்தேன்”

தஞ்சை மாவட்டத்திலே.......தங்க நிற நெல் விளையும் சோழ வள நாட்டினிலே.......தம்பிக் கோட்டையிலே பிறந்த கணபதி, ஒரு சாண் வயிற்றுக்காக இளமையிலே மலேயாவுக்கு ஓடினார். தில்லை நடராசனுக்குத் தங்க வீடு . . . . திருப்பதி வெங்கடேசனுக்கு வைரக் குல்லாய். . . . .. ஆனால். . . தம்பிக் கோட்டை கணபதிக்கு தாங்காத பசி. . . மலேயாவில் வயிற்றுப் பிழைப்பு. தமிழகம் தானியக் களஞ்சியமாயிற்றே! முத்துக் குலுங்கும் கடல்களுண்டே! கணபதி ஏன் மலேயாவுக்கு ஓட வேண்டும்? ஒரு கணபதியா? எத்தனை கணபதிகளை. . . . ஏ! தாழ்ந்த தமிழுகமே!. . . .நீ. . . மலேயாவுக்கும் இலங்கைக்கும் அனுப்பியிருக்கிறாய். செப்புச் சிலைகளுக்குத் தேருந் திருவிழாவும்!. . . .செல்வச் சீமான்களுக்கு சீரும் சிறப்பும்! கணபதிகள் காலந் தள்ள, “இலங்கையும் மலேயாவும்! இது அடுக்குமா, தமிழகமே! . . . . .அன்பு மகன் செத்தான் என்று அழுகிறாயே. . . . .ஆத்திரப்படுகிறாயே. . . . .அலறித் துடிக்கிறாயே. . . . .அவனை நீ தானே விரட்டி அடித்தாய். அவனுக்கு சோறில்லை என்று சொன்னது நீ தானே?. . . . அவன் நல்ல வீட்டில் வாழக் கூடாது என்று கூறியது நீ தானே? அவன் பொன்னையும் முத்தையும் தீண்டக் கூடாது எனத் தடை போட்டது நீ தானே?. . . . .

இப்போது அழு! நன்றாக அழு! கண் இமைகள் கனத்துப் போகும் வரையில் அழு! விழிகளில் ரத்தம் வழிய ஆரம்பிக்கும் வரையில் அழு!

இதைத்தான் கணபதியின் உரத்த குரல், உத்வேகத்தோடு ஒலிக்கின்றது. இல்லையென்று கூற முடியுமா?

ஆங்கிலேயராட்சியிலே மலேயா சென்ற கணபதி, அதே ஆங்கிலேய சர்க்காரால் சவமாகச் சாய்க்கப்பட்டார். பிறந்த நாட்டிலே “சுதந்திர தேவி”யின் சங்கநாதம்! அந்த நாதம், கணபதி பிழைக்கப் போன நாட்டிலே கேட்கவில்லை. கேட்கும் அளவுக்கு ஊதப்படவில்லை. ஏன்? சங்கு ஓட்டையா? அல்லது ஊதுபவர் குரலிலே உரமில்லையா?

கணபதி எந்த வெள்ளை முதலாளியையும் சுட்டுக் கொன்றதாக வழக்கு கிடையாது. கையிலே துப்பாக்கி வைத்திருந்த ஒரே குற்றத்திற்காக இந்தக் கோர மரண தண்டனை! தீர்ப்பு கேட்டு திராவிடம் திகைத்தது. நமது தமிழர்களுக்கு அக்கறை இருந்திருந்தால், கணபதியின் கழுத்தை இறுக்கிய கயிறு, அடுத்து சாம்பசிவத்தின் முன்னே தொங்கிக் கொண்டிருக்குமா? அவர்கள் கண்களிலே நெருப்புக் கிளம்பியிருந்தால் வீர சேனனை நோக்கி, குண்டுகள் கிளம்பியிருக்குமா? இரண்டு கட்டிளங் காளைகளை மலேயா சர்க்காரின் அடக்குமுறைக்கு காணிக்கையாகத் தந்து விட்டு, அறிக்கைகள் பறக்க விடுவது உயிரோடிருக்கும்வரையில் உதாசீனம் செய்யப்பட்டவனுக்கு, செத்த பிறகு உத்தரகிரியை வெகு சிறப்பாக நடத்துவது போலத் தானே!

மலேயாவில் நடைபெறும் இந்த நிகழ்ச்சி தமிழர் வாழ்வில் ஒரு சோகத் தொடர் கதை. இந்தக் கதை, “பிழைக்கப் போகும் அத்தியாய”த்தைத் தாண்டி, “தமிழன் அநியாயமாய்க் கொல்லப்படும் அத்தியாய”த் திற்கு வந்து நிற்கிறது. அடுத்த அத்தியாயம் என்னவோ? எத்துணை பயங்கரமானதோ”?

★ ★ ★

உடன்பிறப்பே,

58 ஆண்டுகளுக்கு முன்பே இந்த உணர்வு எனக்கு இருந்திருக்கும்போது, இப்போது அந்த உணர்வு இல்லாமல் போய்விடுமா என்ன?

1999ஆம் ஆண்டு தி.மு. கழகம் பதவிப் பொறுப்பிலே இருந்தபோது, மலேசியா, சிங்கப்பூர் அரசுகளின் அழைப்பினையேற்று, ஜனவரி திங்களில் அந்த நாடுகளுக்குச் சென்றிருந்தேன். மலேசிய விமான நிலைய வரவேற்பிற்குப் பின் செய்தியாளர்கள் என்னைச் சந்தித்தபோது கூட, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் நான் மேற்கொண்டுள்ள பயணம் முக்கியமாக தமிழகத்திற்கும், இந்த நாடுகளுக்கும் இடையே நீண்ட காலமாக இருந்து



வருகிற கலாச்சாரத் தொடர்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகத் தான் என்று கூறினேன்.

மலேசியாவில் அப்போது பிரதமராக இருந்த டாக்டர் மகாதீர் முகமது அவர்களை, 9.1.1999 அன்று காலையில் சந்தித்து உரையாடினேன். அவருக்கு பொன்னாடை அணிவித்து, சந்தனத்தால் செய்யப்பட்ட வள்ளுவர் கோட்ட மாதிரி ஒன்றையும் வழங்கியதோடு, நான் எழுதிய சங்கத் தமிழ், குறளோவியம் ஆகியவற்றையும் அளித்தேன். அப்போது தமிழ் நாட்டிற்கும், மலேசியாவிற்கும் கடாரம் கொண்டான் காலந்தொட்டு, நீண்ட காலமாக நிலவி வரும் வலுவான சமூக மற்றும் கலாச்சார தொடர்புகளையெல்லாம் வரலாற்றுச் சான்றுகளோடு நான் விளக்கிக் கூறியபோது, மகாதீர் முகமது அவர்கள். அந்தச் சந்திப்பு மிகுந்த மனநிறைவைத் தந்ததாகவும், நேச உணர்வை வெளிப்படுத்தியதாகவும் கூறியது அன்றைய ஏடுகளில் செய்தியாக வெளிவந்தது.

கோலாலம்பூரில் “புத்ரா” உலக வாணிப மையத்தில் உள்ள “மெர்தேகா” அரங்கத்தில் 8.1.1999 அன்று பொது வரவேற்பில் கலந்து கொண்டேன். அப்போது நான் பேசிய பேச்சின் ஒரு பகுதி :

“தமிழகத்தில் நடைபெற்ற சுதந்திரப் போராட்டத்தில் வெள்ளையரை எதிர்த்து முதலில் களம் சென்று கட்கம் ஏந்தி இறுதியாக சுதந்திரத்திற்காகத் தன்னையே பலி கொடுத்துக் கொண்ட பூலித்தேவன், தொடர்ந்து வீரபாண்டிய கட்டபொம்மன், தொடர்ந்து மருது பாண்டியர்கள் ஆகியோரைத் தொடர்ந்து 1802ஆம் ஆண்டு மருது பாண்டியர்களின் வழித் தோன்றல்கள், அவர்களுடைய உறவினர்களை - அந்தப் புரட்சிக்காரர்களை - போராளிகளை எஞ்சிய விடுதலைப் போர்த் தளபதிகளைத் தூத்துக்குடியிலிருந்து கப்பலில் ஏற்றி, ஜேம்ஸ் வால்ஷ் என்பவர், லெப்டினென்ட் ராக் ஹெட் என்பவரின் தலைமையில், மொத்தம் 73 பேரை 76 நாட்கள் பயணம் செய்ய வைத்து, கடைசியாகக் கொண்டு வந்து விட்ட இடம் பினாங்கு. மலேசியப் பகுதியிலே உள்ள பினாங்கில் தான் அவர்கள் கொண்டு வந்து விடப்பட்டார்கள். இது “சவுத் இண்டியன் ரிபல்லியன்” என்ற தலைப்புள்ள புத்தகத்தில் காணப்படுகின்ற உண்மை.

தூத்துக்குடியிலிருந்து 73 பேர் 76 நாட்கள் கப்பலில் பயணம் செய்தார்கள். அவர்களுடைய கைகளிலே, கால்களிலே விலங்கு மாட்டப் பட்டிருந்தது. நான்கைந்து பேர்களின் கைகள்தான் கட்டப்படவில்லை. காரணம் - அவர்கள் கப்பலில் சமையல் வேலைக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்தார்கள். அவர்களைத் தவிர மற்றவர்கள் எல்லாம் விலங்கிடப்பட்டு பினாங்கில் 76 நாள் பயணத்திற்குப் பிறகு சேர்க்கப்பட்டார்கள். அவ்வாறு கொண்டு செல்லப்பட்ட, அந்த நூலிலே உள்ள 73 பேரின் பெயர் களையும் உங்கள் முன்னால் படிக்க விரும்புகிறேன். அதுதான் நாம் அவர்களுக்கு ஆற்றுகின்ற கைமாறு. அவர்களுக்காக நாம் செய்கின்ற வீர வணக்கம். 73 பெயர்களைப் படிக்கும்போது, கொஞ்சம் உங்களுக்கு அயர்வு ஏற்படலாம். ஆனால் அயர்வு ஏற்படக் கூடாது. அயர்வில்லாமல் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிட்ட மான மறவர்களின் பெயர்களைப் படிக்கின்ற நேரத்தில், அயர்வுக்குப் பதிலாக உணர்வு ஏற்பட வேண்டும். எனவே படிக்கின்றேன்.

1. வேங்கம் பெரிய உடையத் தேவர், சிவகங்கை - 2. துரைசாமி (தந்தை பெயர் மருதுபாண்டியன்) - 3. வேரப்பூர் பொம்ம நாயக் - 4. ஜெகநாத அய்யர், ராமனாதபுரம் - 5. ஆண்டியப்பத் தேவன் - 6. சடமாயன் - 7. கோனியாமி தேவன் - 8. தளவாய் குமாரசாமி நாயக், பாஞ்சாலங் குறிச்சி - 9. மேலூர் குமாரத்தேவர் - 10. பாண்டியன்புத்தூர் பாண்டியன் - 11. முத்து வீரா, அரங்குளம் - 12. சாமி, மணக்காடு - 13. ராமசுவாமி - 14. இருளப்ப தேவர், நாங்குனேரி - 15. பாண்டியன் நாயக், கம்பாடி - 16. மாடத்தேவன் - 17. மாலயில்மாடன் - 18. சின்ன பிச்சத் தேவன் - 19. வீரபாண்டியத் தேவன் - 20. வீரப்பெருமாள் தேவன் - 21. கருப்பத் தேவன் - 22. சுலோமோனியா - 23. நந்தசாமி - 24. பெருமாள் - 25. சின்னபிச்சத் தேவன் உடையத் தேவன் - 26. சின்னபிச்சத் தேவன் மகன் தேவி நாயக் - 27. முத்துராமத் தேவன் - 28. மண்டத் தேவன் - 29. பேயன் - 30. அழகநம்பி - 31. வைகுண்டத் தேவன் - 32. சிரியண்ணத் தேவன் - 33. கோனியாலும் - 34. முல்லைவடிவு - 35. சந்தானம் - 36. வீரபத்திரன் - 37. சிலம்பன் - 38. பேயன் - 39. ராமசாமி - 40. இருளப்பன் - 41. குமாரசாமி - 42. வீரபாண்டியன் - 43. வெங்கட்டராயன் - 44. உடையார் - 45. முத்துராக்கு - 46. முத்துராக்கு, அணக்குளம் - 47. சொக்குத் தலவான் - 48. இருளப்பத் தேவன் - 49. மல்லையநாயக்கன் - 50. கலோமணி நாயக்கன் - 51. தொமாச்சி நாயக் - 52. சிலோமணி நாயக் - 53. இராமசாமி - 54. பிச்சாண்டி நாயக் - 55. கல்லுமாடம் தளவாய் - 56. சின்ன மாடன் - 57. வைத்திமூர்த்தி - 58. தளவாய் பிள்ளை - 59. சுப்பிரமணியம் - 60. பெத்தன்ன நாயக் - 61. கிருஷ்ணமா நாயக் - 62. மயிலேனன் - 63. வயலமுத்து - 64. இராமன் - 65. பாளை நாயக் - 66. இராமன் 67. வெள்ளையக் கொண்டன் - 68. இராமன் - 69. அழகு சொக்கு - 70. ஷேக் உசேன் - 71. அப்பா நாயக் - 72. இராமன் சூளை - 73. குப்பன்ன பிள்ளை.

இப்படி 73 பேர் 1802ஆம் ஆண்டு பினாங்கில் இறக்கிவிடப்பட்ட பிறகு, இதில் மூன்றில் ஒரு பங்கினர், பல்வேறு காரணங்களால் இறந்துவிடுகின்றனர்.

இவர்களைக் கப்பலேற்றி அனுப்பிய ஜேம்ஸ் வால்ஷ் , 1818ஆம் ஆண்டு பினாங்குக்கு வருகிறான். அங்கே அவன் கண்ணில் பரட்டைத் தலையோடு, பராரி கோலத்தோடு, ஒடிந்து விழும் உடல் அமைப்போடு, எலும்பும் தோலுமாக, வாலிப வயதினன் - ஆனாலும் வயதானவனைப் போன்ற தோற்றமுடைய ஒருவனை அங்கே பார்க்கிறான். பார்த்தவுடன் அவன் யார் என்று தெரிகிறது. சந்தேகத்தோடு அவனைப் பார்த்து - உன் பெயர் துரைசாமி தானே? என்று கேட்க, அவன் “ஆமாம்” என்கிறான். அந்தத் துரைசாமி யார் தெரியுமா? நான் படித்தேனே பட்டியல்! அதில் இரண்டாவதாகப் படித்த மருதுபாண்டியனின் இளைய மகன் - வீரப் போரிட்டு மடிந்தானே வெள்ளையரை எதிர்த்து, அந்த மருது பாண்டியனின் மகன் துரைசாமிதான் அவன். அவன் தான் ஈளை கட்டி இருமலோடு - பரட்டைத் தலையோடு - பராரி கோலத்தோடு பரங்கியருக்கு முன்னால் நின்றான்.

இதைப் பற்றி அந்தப் பரங்கியன், ஜேம்ஸ் வால்ஷ், என்ன எழுதியிருக்கிறான் என்பதையும், நான், உங்களிடம் படித்துக் காட்ட விரும்புகிறேன் - “துரைசாமி என்ற பெயரைக் கேட்டதும், என் நெஞ்சில் யாரோ கட்டாரியால் குத்தியது போன்ற உணர்வைப் பெற்றேன். நான் சிறைப் பிடித்துக் கப்பலிலே 15 வயது பையனாக ஒப்படைத்த கைதி தான் இன்று பினாங்கில் என் முன் நின்றான். வெளித் தோற்றத்திலே மாற்றங்கள், ஆனால் உள்ளம் அதே உள்ளம். கடந்த கால நினைவுகளை என் முன்னால் எதிரொலித்தது. என் பெயரை அவன் சாதாரணமாகத் தெரிந்து கொண்டதும், என்னுடைய பழைய கால நட்பை நினைவு கூர்ந்து , தன்னுடைய குடும்பத்தாரிடம் ஒப்படைக்கும் படி ஒரு கடிதத்தைக் கொடுக்கக் கூடிய அளவுக்கு நம்பிக்கை வயப்பட்டான். ஆனால் அப்போதிருந்த ஆங்கிலேய அரசின் ஆணையின்படி , அது விதிக்கு மாறானது என்பதால், நான் அந்த உதவியைச் செய்ய முடியவில்லை” என்று எழுதியிருக்கிறான்.

அந்த துரைசாமி என்ன ஆனாரோ, எப்படி ஆனாரோ? இன்று அந்த துரைசாமியின் வாரிசுகளாக வந்தவர்கள் எத்தனைபேர் இந்த மண்டபத்தில் அமர்ந்திருக்கிறீர்களோ?

★ ★ ★

உடன்பிறப்பே, என்னுடைய அந்தப் பேச்சு இப்படியே தொடருகிறது. நெல்லையில் நடைபெறும் கழக இளைஞர் அணி மாநில மாநாட்டினையொட்டி 25 மடல்கள் எழுதிய நிலையில் இத்துடன் இந்தக் கட்டுரை தொடர் நிறைவுறுகிறது.

இளைஞர் அணியினருக்கு நான் வழங்கிய ஆத்திச்சூடி :

★ அண்ணா வழி நில்!
★ ஆற்றுக பொதுப்பணி!
★ இலக்கியம் புதுக்கிடு!
★ ஈனரை ஒதுக்கிடு!
★ உயிர் தமிழாம், உணர்ந்திடு!
★ ஊழலை நொறுக்கிடு!
★ எட்டப்பர் இகழ்ந்திடு!
★ ஏறு போல் வீறு கொள்!
★ ஐயம் களைந்து அறிவைப் பயிர் செய்!
★ ஒழுக்கம் போற்றிடு!
★ ஓம்புக மெலியோரை!
★ ஔவைக் குலம் போற்று!
★ கழகம் வில்லாம், நின் அணியே கணையாம்!
★ சாதியை விடுத்து சமத்துவம் முழக்கு!
★ ஞாயிறு வாழ்த்தி நாளும் உழைத்திடு!
★ தனியுடைமை தகர்த்திட தடந்தோள் தட்டு!
★ நாடு வாழ நலிவு தீர்த்திடு!
★ பகைவர்க்கு வளையேல்!
★ மாயைக்கு மயங்கேல்!
★ வாய்மையே போர்வாள்!
★ யானை போல் பயன்படு!
★ “ழ” கரமாய்ச் சிறப்புறு!

**அன்புள்ள,**

**மு.க.**

**- நிறைவு -**

(முரசொலி 02.12.2007)

# தென் மாவட்டங்களில் கனமழை : அமைச்சர்கள் - கழகத்தினர் நிவாரணப் பணி!






தென் தமிழகத்தில் கனமழை பெய்ததைத் தொடர்ந்து தூத்துக்குடி மாவட்டம் முழுவதும் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான நிவாரணப் பணிகளை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் கனிமொழி கருணாநிதி எம்.பி. மேற்கொண்டு நிவாரணப் பொருட்களை வழங்கினார். உடன் அமைச்சர் கீதாஜீவன், அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.



நெல்லையில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நெல்லை சந்திப்பு சிந்து பூந்துறை மக்களுக்கு உணவு மற்றும் அரிசி,போர்வை போன்ற அத்தியாவசியப் பொருட்களை சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு,நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் வழங்கினர். நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன்,அப்துல்வஹாப் எம்.எல்.ஏ. தலைமைச் செயற்குழு உறுப்பினர் பிரபாகரன்,மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் ஜெகதீஷ் மத்திய மாவட்ட துணை செயலாளர் சுரேஷ்,துணை மேயர் ராஜ்,ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி,இளைஞர் அணி அமைப்பாளர் ஜான் ரபீந்தர் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



திருநெல்வேலி மாவட்டத்தில் கனமழை காரணமாக தண்ணீர் சூழ்ந்துள்ள பகுதிகளில் முழு வீச்சில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் பாதிக்கப்பட்டுள்ள நெல்லை வண்ணாரப்பேட்டை மணிமூர்த்தி நகர் மக்கள், தச்சநல்லூரில் இருக்கும் திருமண மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சந்தித்து அரிசி, போர்வை உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை வழங்கினார்.



கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சி மீனாட்சி கார்டன் பகுதியில் மழைநீர் புகுந்துள்ள வீடுகளையும் மக்களையும் தீயணைப்பு மற்றும் பேரிடர் மீட்பு குழுவினரோடும், ஊர்காவல் குழுவினரோடும் பார்வையிட்டு அங்குள்ள மக்களுக்குத் தேவையான குடிதண்ணீர்,உணவு,பால்,பிரட் போன்ற பொருட்களை படகில் சென்று மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.ரமேஷ் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் பி.என்.ஸ்ரீதர்,மாநகராட்சி ஆணையர் ஆனந்த் மோகன், மாநகராட்சி பொறியாளர் பாலசுப்பிரமணியன்,மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



நெல்லை மாவட்டத்தில் வெள்ளத்தின் காரணமாக மீட்பு பணிகளில் படகுகள் மூலம் மக்களை மீட்ட மீனவப் பெருமக்களை நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தார்.உடன் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ.தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன் ஆகியோர் உள்ளனர்.




ஒரே நாளில் கொட்டித்தீர்த்த கன மழையால் திருநெல்வேலி உள்ளிட்ட தென் மாவட்டங்களில் கடுமையான சூழல் நிலவுகிறது. நெல்லை மாநகரம் உட்பட மழை நீர் சூழ்ந்துள்ள மாவட்டத்தின் பிற பகுதிகளின் தற்போதைய நிலையை அறியும் வண்ணம், நெல்லை மாநகராட்சி அலுவலகத்தில் அமைச்சர்கள் – அரசு உயர் அதிகாரிகள் – அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டத்தில் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்றார். மக்களுக்குத் தேவையான உணவுப்பொருட்களை வழங்குவது – பால் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்வது – தற்காலிக முகாம்களில் உள்ள மக்களுக்கு உதவுவது – மீட்பு படை வீரர்களை எந்நேரமும் தயார் நிலையில் வைத்திருப்பது – போக்குவரத்திற்கான வசதிகளை ஏற்படுத்துவது என பல்வேறு அம்சங்களை இந்தக்கூட்டத்தின் வாயிலாக வலியுறுத்தினார். மேலும், நெல்லையில் நடைபெற்று வரும் மீட்பு மற்றும் நிவாரணப்பணிகள் குறித்து பத்திரிகையாளர்களிடம் விளக்கினார்.



நெல்லை மாவட்டம் இராதாபுரம் ஒன்றியம் இராதாபுரம், சிதம்பராபுரம்,உதயத்தூர், சௌந்திரபாண்டியபுரம் ஆகிய 4 ஊராட்சி பகுதிகளில் மொத்தம் ரூபாய் 2.10 கோடி மதிப்பிலான வளர்ச்சித் திட்டபணிகளை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு அவர்கள் துவக்கி வைத்தார். இதில் இராதாபுரம் வட்டார வளர்ச்சி அலுவலகம் முன் 9.50 லட்சம் மதிப்பில் பயணிகள் நிழற்குடையை பேரவை தலைவர் மு.அப்பாவு அவர்கள் திறந்து வைத்தார்.உடன் மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ், இராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜோசப்பெல்சி, ஊராட்சி மன்ற தலைவர் பொன். மீனாட்சி அரவிந்தன் உள்பட அரசு அலுவலர்கள்,கழகத்தினர் பொதுமக்கள் உள்ளனர்.



திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், இனமான பேராசிரியர் அவர்களின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு, அவரது திருவுருவப்படத்திற்கு சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி மற்றும் கழக முன்னோடிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் மாவட்ட அவைத் தலைவர் த.வேணுகோபால், டாக்டர் எ.வ.வே.கம்பன், இரா.ஸ்ரீதரன், எஸ்.பன்னீர்செல்வம், ப்ரியா ப.விஜயரங்கன், ப.கார்த்திவேல்மாறன், பெ.கோவிந்தன், நிர்மலாவேல்மாறன், இரா.கார்த்திகேயன், கு.கணேஷ், பாலமுரளிகிருஷ்ணா சி.கே.அன்பு, சு.ராஜாங்கம், எஸ்.கண்ணதாசன், சி.சண்முகம், மு.கருணாமூர்த்தி, ஜீவரேகாவிஜயராஜ், ந.சீனுவாசன் உட்பட பலர் உள்ளனர்.

### மழை வெள்ளம்; மீட்பு-நிவாரணப் பணிகள் மேற்கொள்ள

# கூடுதல் ஹெலிகாப்டர்கள் அனுப்பி வைப்பீர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - ஒன்றிய பாதுகாப்பு அமைச்சருக்குக் கடிதம்

சென்னை, டிச.20-

தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ள கூடுதல் ஹெலிகாப்டர்கள் அனுப்பக்கோரி ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.

இது தொடர்பான அரசின் செய்திக் குறிப்பு வருமாறு:

தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ள கூடுதல் ஹெலிகாப்டர்கள் அனுப்பி வைக்கக்கோரி ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் அவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.12.2023) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களில் கடந்த இரண்டு நாட்களாக வரலாறு காணாத அளவில் மழை பெய்துவருகிறது. ஒருசில இடங்களில் 1871ஆம் ஆண்டுக்குப் பிறகு அதிக மழை பெய்துள்ளது. அதன் காரணமாக திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் வசிக்கும் சுமார் 40 இலட்சம் பேர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தாமிரபரணி ஆற்றிலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளதால் ஸ்ரீவைகுண்டம், தூத்துக்குடி நகரங்களில் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது என்றும் தனது கடித்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள தமிழ்நாடு அரசு அலுவலர்கள், மாநில பேரிடர் மீட்புக் குழு மற்றும் தேசிய பேரிடர் மீட்புப் படையினரை அங்கு அணிதிரட்டியுள்ளோம் என்றும், பிற மாவட்டங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட நிவாரணப் பொருட்கள் இணைப்புச் சாலைகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ள காரணத்தால் மக்களுக்கு விநியோகிக்க முடியவில்லை எனவே, அவற்றை ஹெலிகாப்டர்கள் மூலம் மட்டுமே விநியோகிக்க இயலும் என்றும் அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்பதற்கும், உணவுப் பொருட்களை விநியோகிக்கவும் விமானப் படையின் 4 ஹெகாப்டர்கள், கடற்படையின் 2 ஹெகாப்டர்கள் மற்றம் கடலோரக் காவல் படையின் 2 ஹெகாப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. பெருமழையின் தாக்கம் அதிகமாக இருப்பதைக் கருத்தில் கொண்டு மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்கு கூடுதல் ஹெலிகாப்டர்கள் தேவைப்படுவதால், அதிகபட்ச அளவில் ஹெலிகாப்டர்களை அனுப்பி வைக்க தனது கடிதத்தில் முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

### நம்பிக்கையோடு மனுகொடுத்த பொதுமக்கள்!

# திருவாரூரில் 'மக்களுடன் முதல்வர்' திட்ட முகாம்!

## பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

திருவாரூர்,டிச20.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பொற்கால ஆட்சியில் மாநிலம் முழுவதும் உள்ள மக்களின் கோரிக்கைகளை பெற்று அவைகளை உடனுக்குடன் தீர்த்துவைக்கும் நோக்கத்துடன் செயல்படுத்தப்பட்டு வரும் மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் திருவாரூர் நகர பகுதியில் நடைபெற்றது.

மக்களின் நம்பிக்கைக்குரிய ஆட்சி என்கிற பெயரோடு ஆட்சி நடத்தும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் மீதுள்ள நம்பிக்கையால் திருவாரூரில் பொதுமக்கள் தங்களின் கோரிக்கைகளை கொடுத்தனர். கட்டுமான வரைபடம், சொத்துவரி, குடிநீர் வரி, வர்த்தக உரிமம், கழிவு நீர்இணைப்பு, குடிநீர் இணைப்பு, பிறப்பு இறப்பு சான்று, திடக்கழிவு மேலாண்மை, வருவாய் துறை, மின்துறை, காவல் துறை, மாற்றுத்திறனாளிகள், கூடுறவுத்துறை, சமூக நலத்துறை, ஆதிதிராவிட நலத்துறை, தொழில்துறை என பல்வேறு துறைகளில் உதவிகள் கேட்டு மனுக்கள் பெறப்பட்டன.

### 5வது காவல் ஆணையம்

# பொதுமக்கள் கருத்துகள் தெரிவிக்கலாம்

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு

சென்னை, டிச.20-

ஐந்தாவது காவல் ஆணையத்துக்கு பொதுமக்களும் தங்கள் கருத்துகளை தெரிவிக்கலாம் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது-

இது குறித்து அறிவிப்பு

காவல் துறையின் பணியை செம்மையாக்கும் வண்ணம், தமிழ்நாடு அரசு 2022 ஆம் ஆண்டு 5வது காவல் ஆணையம் (Police Commission) அமைத்துள்ளது. ஐந்தாவது காவல் ஆணையம், அசோக்நகர், சென்னை, காவல் பயிற்சி கல்லூரி அலுவலக வளாகத்தில் இயங்கி வருகிறது.

காவல் பணியினை செம்மைப்படுத்த பொது மக்களிடமிருந்து கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன என்றும், நேரில் சந்தித்து மனு அளிக்க விரும்புபவர்கள் 05.12.2023 அன்று காலை 10.30 மணி முதல் பிற்பகல் 01.30 மணி வரை மேற்கண்ட முகவரியில் நேரிடையாக சமர்ப்பிக்கலாம் என்றும் தெரிவிக்கப் பட்டது.

ஆனால், "மிக்ஜாம்" புயல் மழையினால் பொது மக்களின் கருத்துகள் நேரில் பெற இயலவில்லை. எனவே, தபால் மூலம் தெரிவிக்க விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு தபாலில் தங்களின் கருத்துகளை எழுதி அனுப்பலாம்.

முகவரி : தலைவர்,
5வது காவல் ஆணையம்,
காவல் பயிற்சி கல்லூரி வளாகம்,அசோக் நகர்,
சென்னை83.

மின் அஞ்சலில் அனுப்ப விரும்புவோர் கீழ்க்கண்ட மின் அஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்.

EMail ID: fifthpolicecommision@gmail.com

நேரில் சந்தித்து மனு அளிக்க விரும்புபவர்கள் 21.12.2023 அன்று காலை 10.30 மணி முதல் பிற்பகல் 01.30 மணி வரை மேற்கண்ட முகவரியில் நேரிடையாக சமர்ப்பிக்கலாம்.

மேல் விவரங்களுக்கு கீழ்க்கண்ட கைபேசி எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்.

கைபேசி எண் 9498155777

காவல் கண்காணிப்பாளர், 5வது காவல் ஆணையம், அசோக் நகர், சென்னை83.



நெல்லையில் மழையால் பாதிக்கப்பட்ட கருபந்துறை பகுதியை நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் நேரில் சென்று பார்வையிட்டு அங்குள்ள 3000 நபர்களுக்கு உணவு, பிஸ்கட், தண்ணீர் பாட்டில் ஆகியவற்றை வழங்கினார்.உடன் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் மீரான்மைதீன், முகமது சபி,வெங்கடேஷ்,மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் நவநீதன், மாவட்ட இலக்கிய அணி தலைவர் நெல்லை ரவி,மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் சேக் உஸ்மான், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் ராஜ்,அஸ்கர் உள்பட கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### அரசின் சேவைகள் பொதுமக்களை விரைவாகவும் எளிதாகவும் சென்று சேரும் வகையில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது!

# 'மக்களுடன் முதல்வர்' - அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் மகத்தான திட்டம்!

## சேலத்தில் - திட்டத்தினைத் தொடங்கி வைத்து - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

**சேலம், டிச.20 -**

**அரசின் சேவைகள் பொதுமக்களை விரைவாகவும், எளிதாகவும் சென்று சேரும் வகையில் தொடங்கி வைக்கப்பட்டுள்ள "மக்களுடன் முதல்வர்" திட்டம் அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையிலான மகத்தான திட்டமாகும் என்று - சேலம் மாவட்டத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் "மக்களுடன் முதல்வர்" திட்டத்தினைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் அவர்கள் "மக்களுடன் முதல்வர்" திட்டத்தினை நேற்று முன்தினம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் "மக்களுடன் முதல்வர்" திட்டத்தினை, நேற்று முன்தினம் (18.12.2023) சேலம் மாநகராட்சி, தொங்கும் பூங்கா பல்நோக்கு அரங்கில் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிக்குப் பின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

முதலமைச்சர் அவர்கள் அரசின் சேவைகள் பொதுமக்களை விரைவாகவும், எளிதாகவும் சென்றுசேரும் வகையில் தொடங்கி வைக்கப்பட்டுள்ள "மக்களுடன் முதல்வர்" திட்டம் அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையிலான மகத்தான திட்டத்தினை இன்றைய தினம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் தொடங்கி வைத்துள்ளார்கள். இத்திட்டத்தின் மூலம் பொதுமக்கள் அதிகமாக அணுகும் 13 அரசு துறைகள் கண்டறியப்பட்டு, அத்துறைகள் சார்ந்த கோரிக்கைகளை பொதுமக்கள் எவ்வித சிரமமுமின்றி ஒரே இடத்தில் விண்ணப்பிக்க ஏதுவாக "மக்களுடன் முதல்வர்" திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, "மக்களுடன் முதல்வர்" திட்டத்தின் கீழ், மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளைச் சுற்றியுள்ள கிராம பஞ்சாயத்து பகுதிகளில் இத்திட்டம் முதற்கட்டமாக சிறப்புடன் செயல்படுத்தப்படவுள்ளன. இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாடு முழுவதும் உள்ள நகர்ப்புற உள்ளாட்சிகளில் முதற்கட்டமாக 1,745 சிறப்பு முகாம்கள் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. இம்முகாமில் சேர்க்கப்பட்டுள்ள 13 துறைகளின் மூலம் வழங்கப்படும் சேவைகளின் விவரங்கள் பொதுமக்களின் பார்வைக்காக முகாம் நடைபெறும் இடங்களில் வைக்கப்பட்டுள்ளன.

மேலும், இம்முகாம்கள் நடைபெறும் இடங்களில் பொதுமக்களுக்கு சேவை வழங்கும் 13 துறைகளின் சார்பில் மனுக்களை பெற துறைவாரியாக தனித்தனி மேசை முகப்புகள் பொதுமக்களின் மனுக்களைப் பெறுவதற்கான அதற்குரிய அலுவலர்களுடன் அமைக்கப்பட்டுள்ளது. இதுதவிர, இம்முகாம்களில் இணையவழியிலும் விண்ணப்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**மனுக்கள் மீது 30 நாட்களில் தீர்வு!**

சேலம் மாவட்டத்தில் 18.12.2023 முதல் 06.01.2024 வரை 16 நாட்களில் 142 முகாம்களை நடத்த உரிய இடங்கள் தேர்வு செய்யப்பட்டு பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் விளம்பரப்படுத்தப்பட்டுள் ளது. இம்முகாமானது காலை 10 மணி முதல் மாலை 3 மணி வரை நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. இம்முகாமில் பெறப்படும் மனுக்கள் மீது 30 நாட்களில் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் அளிக்கும் கோரிக்கை மனுக்களைப்பரிசீலனை செய்ய முகாம் கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் முகாம் பொறுப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். எனவே, இம்முகாமில் கலந்துகொண்டு பொதுமக்கள் பயன் பெறலாம்.

இவ்வாறு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இதனைத்தொடர்ந்து, சேலம், தொங்கும் பூங்கா பல்நோக்கு அரங்கில் "மக்களுடன் முதல்வர்" திட்டத்தின் கீழ் பெறப்பட்ட மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு உடனடியாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையில் 5 நபர்களுக்கு விலையில்லா மூன்று சக்கர சைக்கிள், காதொலிக் கருவிகள், மடக்கு நாற்காலியும், பிற்படுத்தப்பட் டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையில் 5 நபர்களுக்கு விலையில்லா தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டன.

மேலும், தொழிலாளர் திறன் மேம்பாட்டுத் துறையில் இயற்கை மரண நிவாரணத் தொகை ஒரு நபருக்கும், கூட்டுறவுத் துறையில் தொழில்முனைவோர் கடனுதவி மற்றும் சிறுதொழில் கடனுதவி 5 நபர்களுக்கும், வருவாய்த் துறையில் வருமானச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், குடியிருப்புச் சான்றிதழ்கள் 5 நபர்களுக்கும், மின்சாரத் துறையில் மின் இணைப்புப் பெயர் மாற்றம் 4 நபர்களுக்கும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் சொத்து வரி பெயர் மாற்றம் 7 நபர்களுக்கும் என மொத்தம் 32 நபர்களின் மனுக்களுக்கு உடனடித் தீர்வு காணப்பட்டு சான்றிதழ்கள் மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித் தலைவர் செ.கார்மேகம், மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா. இராஜேந்திரன், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம், மாநகராட்சி ஆணையாளர் சீ.பாலச்சந்தர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) மரு.அலர்மேல் மங்கை, மாவட்ட வருவாய் அலுவலர் மரு.பெ. மேனகா, முன்னாள் அமைச்சர் டி.எம். செல்வகணபதி, மாநகராட்சி துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

### விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# இனமானப் பேராசிரியரின் பிறந்தநாள் விழா!

## திருவுருவப் படத்திற்கு அமைச்சர் செஞ்சி மஸ்தான் மலர் தூவி மரியாதை

செஞ்சி, டிச.20-

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் இனமான பேராசிரியர் அவர்களின் 102வது பிறந்த நாள் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

செஞ்சி பேருந்து நிலையம் எதிரில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த இனமான பேராசிரியரின் திருவுருவப்படத்திற்கு நகர செயலாளர் கார்த்திக் தலைமையில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் ஆகியோர்முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ்தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்.

இதில் மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், முன்னாள் நகர செயலாளர் காஜா நஜீர்,நகர பொருளாளர் நெடுஞ்செழியன்,நகர துணை செயலாளர் சுமித்ரா சங்கர்,பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் பொன்னம்பலம், நூர்ஜகான் ஜாபர், புவனேஸ்வரி அண்ணா துரை, சிவக்குமார், வார்டு செயலாளர்கள் ஜி. டி .தனசேகரன், கோகுல், தொண்டரணி பாஷா, என். ஆர். பேட்டை முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பாலகிருஷ்ணன், துணைத் தலைவர் ராமு, வழக்கறிஞர்கள் பாபு, சந்திரன், நிர்வாகிகள் ராம்குமார், ராம்ராஜ் பஸ் ஸ்டாண்ட் செல்லன்,மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் பிரபு, உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டு இனமான பேராசிரியரின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.




இனமான பேராசிரியர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு வேலூர் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு தொகுதிநிதியில் இருந்து ஊனமுற்ற பெண்ணுக்கு மூன்று சக்கர வாகனத்தை ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ.வழங்கினார். அருகில் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் கதிரேசன், மண்டலக் குழு தலைவர் வீனஸ் நரேந்திரன், மாநில சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் எம்.நூருல்லா, பகுதி செயலாளர்கள் சுந்தர விஜி, முரளி கிருஷ்ணன், மாமன்ற உறுப்பினர்கள் வீ.எஸ்.முருகன், கணேஷ் சங்கர், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அவர்கள் கோயம்புத்தூர் மாவட்டத்தில் "மக்களுடன் முதல்வர்" திட்டத்தினை நேற்று முன்தினம் (18.12.2023) தொடங்கி வைத்ததையொட்டி சேலம் மாவட்டத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சேலம் மாநகராட்சி தொங்கும் பூங்கா பல்நோக்கு அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் "மக்களுடன் முதல்வர்" திட்டத்தின்கீழ் பொது மக்கள் கணினி மூலம் பதிவு செய்த கோரிக்கை மனுக்களுக்கான ஒப்புகை சீட்டுகளை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் செ.கார்மேகம், மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா. இராஜேந்திரன்,சேலம் மேற்கு சட்ட மன்ற உறுப்பினர் இரா. அருள். மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம், மாநகராட்சி ஆணையாளர் சீ. பாலச்சந்தர், கூடுதல் ஆட்சியர்(வளர்ச்சி) மரு.அலர்மேல் மங்கை, மாவட்ட வருவாய் அலுவலர் மரு.பெ. மேனகா, முன்னாள்அமைச்சர் டி.எம்.செல்வகணபதி, மாநகராட்சி துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



திருக்கோயிலூர் சட்டமன்றத் தொகுதி, திருக்கோயிலூர் நகராட்சியில் மக்களுடன் முதல்வர் நிகழ்ச்சியில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கலந்து கொண்டு பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்றார். மாவட்ட ஆட்சியர் சரவணகுமார், மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ, மாவட்ட பொருளாளர் இரா. ஜனகராஜ், மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் மு.தங்கம், மாவட்ட துணைச் செயலாளர் டி.என்.முருகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.செல்வராஜ், நகரச் செயலாளர் கோபிகிருஷ்ணன், பேரூராட்சி மன்ற தலைவர் எஸ். அன்பு, துணைத் தலைவர் டி.குணா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### புகைக் குண்டு வீச்சு பற்றி விளக்கம் அளிக்கக் கோரியதால்

# நாடாளுமன்றத்தில் டி.ஆர்.பாலு உள்பட 80 எம்.பி.க்கள் சஸ்பெண்ட்!

### மசோதாக்களை நிறைவேற்றவே எதிர்க்கட்சி எம்.பி.க்கள் நீக்கம் - டி.ஆர்.பாலு குற்றச்சாட்டு!

புதுடெல்லி, டிச.20 -

நாடாளுமன்றத்தில் பாதுகாப்பு குளறுபடி குறித்து கேள்வி எழுப்பிய காங்கிரஸ், தி.மு.க., திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளை சேர்ந்த மொத்தம் 80 எம்.பி.க்கள் ஒரே நாளில் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர். தங்களது மசோதாக்களை நிறைவேற்றப் படவே எதிர்க்கட்சி எம்.பி.க்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளதாக கழக நாடாளுமன்றக் குழுத்தலைவர் டி.ஆர்.பாலு அவர்கள் குறிப்பிட்டார்.



புகைக் குண்டுவீச்சு சம்பவம் குறித்து ஒன்றிய அரசு விளக்கம் அளிக்கக் கோரி எதிர்கட்சியினர் தொடர் முழக்கமிட்டதால் நாடாளுமன்றம் நேற்று முன்தினம் முடங்கியது. கடந்த 13 ஆம் தேதி அன்று நாடாளுமன்றத்தில் நிகழ்ந்த புகைக் குண்டு வீச்சு சம்பவம் குறித்து ஒன்றிய அரசு விளக்கம் அளிக்க வேண்டும் என மக்களவையில் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் வலியுறுத்தினர்.

14 உறுப்பினர்களின் சஸ்பெண்டை ரத்து செய்ய வேண்டும் என்றும், நாடாளுமன்ற பாதுகாப்பு குறித்து அவையை ஒத்திவைத்துவிட்டு விவாதம் நடத்த வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். இதற்கு சபாநாயகர் அனுமதி மறுத்தார்.

பின்னர் மக்களவை பகல் 12 மணி வரையிலும் பின்னர், 2 மணி, 3 மணி என மூன்று முறை ஒத்தி வைக்கப்பட்டது.

ஒத்திவைக்கப்பட்ட அவை பிற்பகல் மூன்று மணிக்கு கூடியதும், நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர், மேலும் தி.மு.க. காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பிக்களை சஸ்பெண்ட் செய்ய கோரும் தீர்மானத்தை முன்மொழிந்தார்.

இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, நாடாளுமன்ற தி.மு.க. குழுத்தலைவர் டி.ஆர்.பாலு, திமுக எம்.பி.க்கள் ஆ.ராசா, எஸ். எஸ்.பழனி மாணிக்கம், தயாநிதி மாறன், கலாநிதி வீராசாமி, தமிழச்சி தங்க பாண்டியன், சி என் அண்ணாதுரை, ஜி செல்வம் மற்றும் காங்கிரஸ் கட்சியின் ஆதிர்ரஞ்சன் சவுத்ரி திருநாவுக்கரசர் உள்ளிட்ட 33 பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டதாக சபாநாயகர் அறிவித்தார்.

இவர்களில் 30 எம்.பி.க்கள் கூட்டத்தொடர் முழுவதும் சஸ்பெண்ட் செய்யப்பட்டதாகவும் மீதமுள்ள 3 பேர், நாடாளுமன்ற கண்காணிப்பு குழு அறிக்கை சமர்ப்பிக்கும் வரை சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளதாக சபாநாயகர் அறிவித்துள்ளார். இதைத்தொடர்ந்து மக்களவை ஒத்திவைக்கப்பட்டது

இதேபோல் மாநிலங்களவையிலும் காங்கிரஸ், திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் 47 பேர் கூட்டத்தொடர் முழுவதும் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர். புகை குண்டுவீச்சு சம்பவம் குறித்து ஒன்றிய அரசு விளக்கம் அளிக்கக் கோரி எதிர்கட்சி உறுப்பினர்கள் முழக்கமிட்டதால் அவை அடுத்தடுத்து ஒத்திவைக்கப்பட்டது.

மாலை நான்கரை மணிக்கு அவை மீண்டும் கூடியதும், பாதுகாப்பு குளறுபடி குறித்து ஒன்றிய பா.ஜ.க. அரசு விளக்கம் அளிக்கக் கோரி எதிர்க்கட்சி எம்.பிக்கள் முழக்கமிட்டனர்.

இதனால் காங்கிரஸ் கட்சியின் பிரமோத் திவாரி, கே.சி.வேணுகோபால், ஜெய்ராம் ரமேஷ் மற்றும் ராஷ்ட்ரீய ஜனதா தள கட்சியின் மனோஜ் ஜா உள்ளிட்ட 36 பேர் கூட்டத்தொடர் முழுவதும் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளதாக, குரல் வாக்கெடுப்பு மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனையடுத்து 36 பேர் கூட்டத்தொடர் முழுவதும் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளதாகவும், 11 பேர், நாடாளுமன்ற கண்காணிப்பு குழு, அறிக்கை அளிக்கும் வரை சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளதாக அவைத்தலைவர் அறிவித்தார்.

**நாடாளுமன்ற தி.மு.க. குழுத்தலைவர் டி.ஆர்.பாலு புகார்!**

இதனையொட்டி செய்தியாளர்களிடம் பேசிய தி.மு.க. நாடாளுமன்ற குழு தலைவர் டி.ஆர். பாலு நாடாளுமன்றத்தில் பாதுகாப்பு குளறுபடி குறித்து எதிர்க்கட்சி எம்பிக்கள் கேள்வி எழுப்பியதாகவும், இதனால் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறினார். 3 மாநில தேர்தல் வெற்றிக்குப் பிறகு பா.ஜ.க. ஒன்றிய அரசின் நடவடிக்கைகள் மிகவும் மோசமடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

### தமிழ்நாட்டில் நகர்ப்புறங்களுக்கு இணையாக

# கிராமப்புறங்களிலும் உயர்தர மருத்துவ சிகிச்சை!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேச்சு!

சேலம், டிச. 20 -

சேலம் மாவட்டம், காரிப்பட்டி மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் நேற்று முன்தினம் (18.12.2023) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறையில் ரூ. 4 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 11 கட்டடங்களைத் திறந்து வைத்துப் பேசியதாவது:

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, காரிப்பட்டி மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் வட்டார பொது சுகாதார ஆய்வகக் கட்டடங்கள் பொது மக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைக்கப்பட்டன. இதில் 62 வகையான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், இங்கு சேகரிக்கப்படும் மாதிரிகளின் முடிவுகளை எப்பொழுது வேண்டுமானாலும் அறிந்து கொள்ளும் வகையில் பதிவு செய்து கண்காணிக்கப்படுகிறது.

மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களான இளம்பிள்ளை, காரிப்பட்டி மற்றும் பேளூரில் தலா ரூ. 50 இலட்சம் மதிப்பீட்டில் வட்டார பொது சுகாதார ஆய்வகக் கட்டடங்கள் பொது மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டன. மேலும், மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கண்டர் குலமாணிக்கம், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பண்ணப்பட்டி, நங்கவள்ளி ஒன்றியத்திற்குட்பட்ட கோட்டமேடு, வாழப்பாடி ஒன்றியத்திற்குட்பட்ட கண்கட்டி ஆலா மற்றும் புழுதிக்குட்டை ஆகிய பகுதிகளில் தலா ரூ. 30 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலையங்களுக்கான கட்டடங்களும் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

மேலும், வீரபாண்டி ஒன்றியத்திற்குட்பட்ட பெருமாகவுண்டம்பட்டி மற்றும் பெத்தநாயக்கன் பாளையம் ஒன்றியத்திற்குட்பட்ட சின்னம சமுத்திரம் ஆகிய பகுதிகளில் தலா ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலையங்களுக்கான கட்டடங்களும், தாரமங்கலம் வட்டார அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் எம்.எஸ்.பி. கன்ஸ்ட்ரக்கன்ஸ் நிறுவனத்தின் பொது நிறுவன சமூக பொறுப்புகள் நிதியிலிருந்து ரூ. 60 இலட்சம் மதிப்பீட்டில் பிரசவ கால கவனிப்பு ஸ்கேன் அறையும் என மொத்தம் ரூ. 4 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 11 மருத்துவக் கட்டடங்கள் இன்றைய தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, சேலம் மாவட்டத்தில் மாநில அளவிலான 2 திட்டங்கள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. முதலமைச்சர் அவர்கள் கடந்த 29.09.2021 அன்று வாழப்பாடியில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் ஏழை எளியோர் வாழும் இடத்திலேயே சிறப்பு மருத்துவச் சேவை அளிக்கும் கலைஞரின் வருமுன் காப்போம் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டுக்கும் 1,250 சிறப்பு முகாம்கள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி, இதுவரை 30 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் இம்முகாமின் மூலம் பயன்பெற்றுள்ளனர்.

அதேபோன்று, கடந்த 10.07.2023 அன்று காடையாம்பட்டி மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாட்டிலேயே முதன்முறையாக "சிறுநீரகம் காக்கும் சீர்மிகு மருத்துவத் திட்டம்" தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், 22.35 இலட்சம் நபர்களுக்கு அரசு துணை சுகாதார நிலையங்கள் மூலமும், 5.36 இலட்சம் நபர்களுக்கு துணை சுகாதார நிலையம் மூலமும் என மொத்தம் இதுவரை கடந்த 5 மாதங்களில் 27.71 இலட்சம் நபர்களுக்கு சிறுநீரக பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களில் செயல்படுத்தப்படுகின்றது.

நோயால் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவமனைகளுக்கு நேரடியாகச் சென்று மட்டுமே மருத்துவ ஆலோசனைகள் மற்றும் சிகிச்சைகளை எடுத்துக் கொள்ள முடியும். ஆனால் தமிழ்நாட்டில் மட்டுமே அரசின் மருத்துவச் சேவைகள் பொதுமக்களின் இல்லங்களுக்கேச் சென்று வழங்கப்படுகிறது. அந்தவகையில், மக்களைத் தேடி மருத்துவம் உள்ளிட்ட தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் பல்வேறு மருத்துவச் சேவைகள் உலகில் வேறெங்கும் வழங்கப்படுவதில்லை. மேலும், தமிழ்நாட்டில் நகர்ப்புறங்களுக்கு இணையாக கிராமப்புறங்களிலும் உயர்தர மருத்துவச் சிகிச்சைகள் கிடைப்பதை உறுதி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் பேசினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் செ. கார்மேகம், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா. இராஜேந்திரன், முன்னாள் அமைச்சர் டி. எம் . செல்வகணபதி, அயோத்தியாப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி ஹேமலதா விஜயகுமார், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு. இரா. மணி, துணை இயக்குநர்கள் (சுகாதாரப் பணிகள்) மரு.ச. சௌண்டம்மாள், மரு.என். யோகானந்த், உட்பட தொடர்புடைய அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### பொதுமக்கள் மனுக்களை பதிவு செய்தனர்!

# புதுக்கோட்டையில் "மக்களுடன் முதல்வர்" புதிய திட்டம்!

### அமைச்சர் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன் முகாமினை பார்வையிட்டனர்!

புதுக்கோட்டை, டிச. 20 -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் 18.12.2023 கோயம்புத்தூர் மாவட்டத்தில், அரசுத் துறைகளை அன்றாடம் அணுகும் பொதுமக்களுக்கு, அரசின் சேவைகள் விரைவாகவும் எளிதாகவும் அவர்களைச் சென்று சேரும் வகையில் "மக்களுடன் முதல்வர்" என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்தார்கள்.

அதனைத்தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி நகரத்தார் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் ஐ.சா.மெர்சி ரம்யா தலைமையில் கலந்துகொண்டு, மனுக்களை பதிவு செய்யும் சிறப்பு முகாமினை பார்வையிட்டார்.

"மக்களுடன் முதல்வர்" என்ற இப்புதிய திட்டத்தின் கீழ், பொதுமக்கள் அதிகமாக அணுகும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நகராட்சி நிர்வாகத் துறை, ஊரக வளர்ச்சித் துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சமூக நலத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, கூட்டுறவுத்துறை, மகளிர் மேம்பாட்டுக் கழகம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, எரிசக்தி துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் துறை ஆகிய 13 அரசுத் துறைகள் சார்ந்த கோரிக்கைகளைப் பெற்று தீர்வு காண்பதற்கு முதலமைச்சர் அவர்களின் நேரடிக் கண்காணிப்பில், அனைத்து நகர்ப்புற, மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளில் வார்டு மற்றும் கிராம ஊராட்சி அளவில், அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பு முகாம்கள் நடத்தப்படும்.

மேலும் அனைத்து தரப்பு மக்களுக்கும் மேற்கண்ட 13 அரசுத் துறைகளின் சேவைகள் எளிதில் கிடைத்திடவும், தாமதங்களை தவிர்த்திட வேண்டும் என்பதும் தான் இந்த திட்டத்தின் நோக்கமாகும். இந்த சிறப்பு முகாம்களில் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் அனைவரும் ஒரே குடையின்கீழ் மக்களின் கோரிக்கைகளைப் பெற்று பதிவு செய்வார்கள். முகாம்களில் பெறப்படும் மனுக்கள் அனைத்தும், சம்பந்தப்பட்ட துறைகளால் 30 தினங்களுக்குள் உரிய முறையில் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதியின் அடிப்படையில் உரிய சேவைகள் மக்களுக்கு வழங்கப்படும். அதன்படி, புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுக்கோ ட்டை நகராட்சி, அறந்தாங்கி நகராட்சி, ஆலங்குடி பேரூராட்சி, பொன்னமராவதி பேரூராட்சி ஆகிய இடங்களில் நடைபெற்ற முகாம்களில், "மக்களுடன் முதல்வர்" திட்டத்தின்கீழ் 554 மனுக்களும், இதர 289 மனுக்களும் என மொத்தம் 843 மனுக்கள் பெறப்பட்டுள்ளது.



சேலம் மாவட்டம், காரிப்பட்டி மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நேற்று முன்தினம் (18.12.2023) நடைபெற்ற நிகழ்ச்சியில் பொதுசுகாதாரத்துறையின் சார்பில் ரூ.4 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட துணை சுகாதார நிலையங்கள், வட்டார பொது சுகாதார ஆய்வகங்கள் உள்ளிட்ட 11 பல்வேறு கட்டடங்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் செ.கார்மேகம், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், முன்னாள் அமைச்சர் டி.எம்.செல்வகணபதி, ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.ஹேமலதா விஜயகுமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

### இயற்கைப் பேரிடர்களை எதிர்கொள்வது குறித்து தொலைநோக்குத் திட்டங்கள் அவசியம்!

# அனைத்துப் பகுதிகளிலிருந்தும் உதவிக்கரங்கள் நீள வேண்டிய நேரமிது!

### "தீக்கதிர்" நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, டிச.20-

புயல் மற்றும் அதி கன மழை போன்ற இயற்கைப் பேரிடர்களை எதிர்கொள்வது குறித்து தொலைநோக்குத் திட்டங்கள் அவசியம் எனவும், தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் உதவிக்கரங்கள் நீள வேண்டிய நேரமிது எனவும் குறிப்பிட்டு "தீக்கதிர்" நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.

அது வருமாறு:-

மிக்ஜாம் புயல் மற்றும் அதிகனமழை காரண மாக தலைநகர் சென்னை உட்பட தமிழ்நாட்டின் வட மாவட்டங்கள் கடுமையான பாதிப்பைச் சந்தித்தன. இந்த மாவட்டங்களில் இயல்பு வாழ்க்கை மெல்ல மெல்ல திரும்பத் துவங்கியுள்ள நிலையில், தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களான கன்னியாகுமரி, திருநெல் வேலி, தூத்துக்குடி, தென்காசி ஆகிய மாவட்டங்களில் அதிகனமழை பெய்து வருகிறது. விருதுநகர், இராமநாதபுரம், சிவகங்கை, தேனி உள்ளிட்ட மாவட்டங்களிலும் கன மழை கொட்டி வருகிறது.

இடைவிடாத கனமழை காரணமாக குமரி, நெல்லை, தென்காசி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் அனைத்து நீர்த்தேக்கங்களும் நிரம்பி வழி கின்றன. தாமிரபரணி உள்ளிட்ட ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு திருநெல்வேலி மாநகரம் உட்பட பல ஊர்களில் குடியிருப்புப் பகுதிகளை வெள்ளம் சூழ்ந்துள்ளது. மின்சாரம், தொலைத்தொடர்பு, ரயில் மற்றும் பேருந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. திருச்செந் தூர் உள்ளிட்ட ஊர்கள் வெள்ளத்தால் தனித்தீவு போல மாறியுள்ளன.

பல ஏரிகள், குளங்கள், கண்மாய்களின் கரை கள் உடைந்து சாலைகள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. ரயில் தண்டவாளங்கள் அரிக்கப்பட்டு ரயில் போக்குவரத்து முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் வளிமண்டல கீழடுக்குச் சுழற்சி நீடிப்பதால் இந்த நான்கு மாவட்டங்களிலும் கனமழை தொடர வாய்ப்பு உள்ளது என வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது அச்சத் தையும், கவலையையும் அதிகரிப்பதாக உள்ளது.

தூத்துக்குடி மாவட்டம் காயல்பட்டினத்தில் ஓர் ஆண்டில் பெய்ய வேண்டிய மழை அளவு ஒரே



தீக்கதிர்

2023 டிசம்பர் 19 செவ்வாய்க்கிழமை

உதவிக் கரங்கள் நீளட்டும்!

மிக்ஜம் புயல் மற்றும் அதிகனமழை காரணமாக தலைநகர் சென்னை உட்பட தமிழ்நாட்டின் வட மாவட்டங்கள் கடுமையான பாதிப்பைச் சந்தித்தன. இந்த மாவட்டங்களில் இயல்பு வாழ்க்கை மெல்ல மெல்ல திரும்பத் துவங்கியுள்ள நிலையில், தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களான கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி ஆகிய மாவட்டங்களில் அதிகனமழை பெய்து வருகிறது. விருதுநகர், இராமநாதபுரம், சிவகங்கை, தேனி உள்ளிட்ட மாவட்டங்களிலும் கனமழை கொட்டி வருகிறது.

இடைவிடாத கனமழை காரணமாக குமரி, நெல்லை, தென்காசி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் அனைத்து நீர்த்தேக்கங்களும் நிரம்பி வழிகின்றன. தாமிரபரணி உள்ளிட்ட ஆறுகளில்

நாளில் கொட்டித் தீர்த்துள்ளது. 1931ஆம் ஆண்டு க்குப் பிறகு பாளையங்கோட்டையில் அதிக மழை அளவு பதிவாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

மாநில அரசும், மாவட்ட நிர்வாகங்களும் மீட்பு நடவடிக்கைகளில் தீவிரமாக இறங்கியுள்ளன. ஒன்றிய அரசிடமிருந்து இயற்கை பேரிடர் மீட்புப் படையோடு முப்படைகளின் உதவியும் கோரப்பட்டுள்ளது. வரலாறு காணாத இந்த இயற்கைப் பேரிடரைச் சமாளிக்க மாநில அரசுக்கு ஒன்றிய அரசு அனைத்து வகை யிலும் துணை நிற்பது அவசியமாகும்.

வெள்ளத்தில் சிக்கியுள்ள மக்களை மீட்டு நிவாரண முகாம்களில் தங்க வைப்பது, அத்தியாவசியப் பொருட்கள் தடையின்றி கிடைக்க வகை செய்வது போன்றவை முதன்மைப் பணி யாக உள்ளது. விவசாயம், கால்நடை மற்றும் சிறு, குறு தொழில்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை கணக்கிட்டு உரிய இழப்பீடு வழங்கப்பட வேண்டும். தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதி களிலிருந்தும் உதவிக் கரங்கள் நீள வேண்டிய நேரமிது. இத்தகைய இயற்கைப் பேரிடர்களை எதிர்கொள்வது குறித்து தொலைநோக்குத் திட்டங்கள் அவசியம்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிபிடப்பட்டுள்ளது.



புதுச்சேரி மாநில தி.மு.க. சார்பில் பேராசிரியர் அவர்களின் பிறந்த நாளையொட்டி அவரது படத்திற்கு மாநில அமைப்பாளர் இரா. சிவா எம்.எல்.ஏ. மாலை அணிவித்தார்.

# நாடாளுமன்றத்தில் வெளிப்படும் நாடு மக்கள் சீற்றம்!

**இ**ந்திய மக்களாட்சி வரலாற்றில் சென்ற வாரம், பல வகைகளிலும் விழுமியங்கள் பின்னடைவை சந்தித்த வாரம். இப்போதெல்லாம் இவை தொடர்ந்து நடப்பவை தான் என்பதால் பழகிப்போகிறது. ஒரு சாதாரண அறிவுறுத்தல் கடிதம் கொடுத்து நெறிப்படுத்த வேண்டிய சங்கதியை உள்நோக்கத்துடன் பெரிது படுத்தி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நாடாளுமன்ற எதிர்க்கட்சி உறுப்பினரின் பதவியைப் பறித்தது ஆளும் கட்சி.


**அதிலும் குறிப்பாக அவர், மஹூவா மொய்த்ரா, ஆளும் கட்சிக்கு இணக்கமான பெருமுதலீட்டிய சக்தியான அதானியைக் குறித்து தொடர்ந்து கேள்வி எழுப்பியவர். அப்படிப்பட்டவரின் கேள்வி கேட்கும் உரிமையைப் பாதுகாப்பதுதானே மக்களாட்சியில் முக்கியம்? அதற்குத்தானே நாடாளுமன்றம்? அவர் யார் சொல்லி கேட்டால் என்ன? கேள்விகள் தானே முக்கியம்?**

**அதற்கு அடுத்த கட்டமாக உச்ச நீதிமன்றம் காஷ்மீர் மாநிலத்தின் விசேஷ அந்தஸ்து பறிப்பான விதி 370 நீக்கம், அதன் மாநில அந்தஸ்தையே நீக்கியது, மாநிலத்தை தன்னிச்சையாக மூன்றாகப் பிரித்து யூனியன் பிரதேசங்க ளாக்கியது ஆகிய ஒன்றிய அரசின் எதேச்சதிகார செயல்பாடுகள் அனைத்தையும் அங்கீகரித்தது. இது கூட்டாட்சி தத்துவத்தைக் குழி தோண்டிப் புதைக்கும் செயல் என இந்திய மக்களாட்சியின் மீது அக்கறை கொண்டவர் அனைவரும் கூறியுள்ளனர்.**

**ஆனால், இதையெல்லாம் விட மிக அபூர்வமான ஒரு நிகழ்வு அரங்கேறியுள்ளது. அது என்னவென்றால், எளிய பின்னணியைச் சேர்ந்த நாட்டின் வெவ்வேறு பகுதியைச் சேர்ந்த இளம் வயதினர் ஆறு பேர் திட்டமிட்டு நாடாளுமன்றத்தில் புகுந்துள்ளனர். நாடாளுமன்ற மக்களவை நடந்து கொண்டிருக்கும்போதே உறுப்பினர் இருக்கைகள் மீது தாவிக்குதித்த அவர்கள் வண்ணப் புகையை உருவாக்கியுள்ளனர். பகத் சிங்கும், தோழர்களும் காலனீய கால நாடாளுமன்றத்தில் 1929ஆம் ஆண்டு குண்டு வெடிக்கச் செய்த பிறகு, இதுதான் அவைக்குள்ளேயே நடந்துள்ள அத்துமீறி புகுதல், தடை விளைவித்தல், தாக்குதல்.**












தாக்கியவர்கள் தங்களை பகத்சிங் ரசிகர்கள் என்ற பெயரில்தான் ஃபேஸ்புக் குழுவாக அமைத்துக் கொண்டுள்ளனர். ஆனால், இவர்கள் நோக்கம் யாரையும் காயப்படுத்துவதோ, பொருட்களை சேதப்படுத்துவதோ போலத் தெரியவில்லை. வெடி பொருட்களையோ, விஷப்புகையையோ அவர்கள் கொண்டு செல்லவில்லை. சாதாரண வண்ணப்புகையைத் தான் அவர்கள் உருவாக்கியுள்ளனர். கவனம் ஈர்க்கவே அப்படி செய்ததாகக் கூறியுள்ளனர். தாக்குதலை சட்டம் ஒழுங்கில் அக்கறையுள்ள நாமனைவரும் கண்டிக்கும் நேரத்தில், இது அரசாளுபவர்களுக்கு விடப்பட்டுள்ள மிக முக்கியமான எச்சரிக்கை எனலாம். எப்படி என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.




உண்மையாகச் சிந்தித்துப் பார்த்தால் மஹூவா மொய்த்ரா பதவி பறிப்பு, உச்ச நீதிமன்றத் தீர்ப்பு ஆகியவற்றுக்கும், நாடாளுமன்றத் தாக்குதலுக்கும் ஓர் ஆழமான தொடர்பு உள்ளது. கவனிக்க; நேரடித் தொடர்பு அல்ல. இந்த சம்பவங்களைத் தொடர்ந்து அது நடக்கவில்லை; தாக்குதலை நிகழ்த்தியவர்கள் இரண்டாண்டுகள் திட்டமிட்டதாகக் கூறப்படுகிறது. இது குறித்த தகவல்கள் இப்போதுதான் விரிவாக வெளியாகத் தொடங்கியுள்ளது. புலனாய்வும் நடக்கிறது.

இந்தச் சம்பவங்களுக்கு இடையிலான ஆழமான தொடர்பாக நாம் காணக்கூடியது மக்களுக்கு மக்களாட்சியின் மீதுள்ள நம்பிக்கை குறைகிறது என்பதுதான். அது குறையாமல் காப்பதுதான் மூன்று மன்றங்களின் பணி. நாடாளுமன்றம், நீதிமன்றம், மக்கள் மன்றம் ஆகியவை தான் அந்த மூன்று மன்றங்கள். இவற்றில் என்ன நடக்கிறது என்பதே கேள்வி.

**நாடாளுமன்றத்தின் பணி என்ன?**

நாடாளுமன்றம் என்ற தமிழ்ச்சொல் அதன் அடிப்படை நோக்கத்தை தெளிவாகக் கூறி விடுகிறது. அந்த மன்றம் தான் நாட்டை ஆள்கிறது. மக்களின் பிரதிநிதிகள் அந்த அவையில் கூடி ஆட்சி குறித்து, நிர்வாகம் குறித்து, சட்டங்கள் குறித்து விவாதிக்க வேண்டும். அதுதான் அதன் முக்கிய நோக்கம்.

ஆங்கிலத்தில் நாடாளுமன்றம் 'பார்லிமென்ட்' என்றழைக்கப்படுகிறது. அதன் மூலச்சொல் லத்தீனில் உரையாடுதல், கலந்து பேசுதல் என்பதைக் குறிப்பதாகும். பார்வே, பர்லாரே என்றால் ஃபிரெஞ்சு, இத்தாலிய மொழிகளில் பேசுதல். இந்தப் பணியினை நாடாளுமன்றம் மறந்து போய்விட்டது எனலாம்.

அதற்கு முக்கிய காரணம் ஆளும் கட்சி எதிர்க்கட்சிகளைப் புறக்கணிப்பதாகும். எப்படி ஓர் ஆளும் கட்சி உறுப்பினர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவரோ, அதேபோல மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்தான் எதிர்க்கட்சி உறுப்பினர். எப்படி பிரதமரை ஒரு தொகுதி மக்கள் தேர்ந்தெடுத்தார்களோ, அதேபோலத்தான் ஒவ்வோர் உறுப்பினரையும் வெவ்வேறு தொகுதி மக்கள் தேர்ந்தெடுத்துள்ளார்கள்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்ற கட்சி, பிரதம அமைச்சரை தேர்ந்தெடுக்கிறது. அவர் அமைச்சரவையை அமைக்கிறார். அதன் பிறகு ஆட்சியதிகாரம் அந்தக் கட்சியிடம் சென்று விடுகிறது. அவர்களுக்கு நாடாளுமன்ற பெரும்பான்மை இருப்பதால் எந்தச் சட்டத்தையும் இயற்றலாம் என்பது சாத்தியமாகிவிடுகிறது. இதை முன்னிட்டு எதிர்க்கட்சிகளை அது உதாசீனம் செய்தால் மக்களாட்சி பெரும்பான்மைவாதமாக சீரழிந்து விடுகிறது.

**அப்படியானால் ஆளும் கட்சி என்ன செய்ய வேண்டும்? முக்கியமான சட்டங்களை இயற்றினால் எதிர்க்கட்சிகளின் ஒப்புதலைப் பெற முயற்சி செய்ய வேண்டும். பொது மன்றத்தில் நிறைய விவாதிக்க வேண்டும். கூடிய அளவு கருத்தொற்றுமையை உருவாக்க வேண்டும். அதில் ஓரளவு பலன் தெரிந்த பிறகே சட்டமாக இயற்ற வேண்டும். நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இருப்பதால் எதையும் சட்டமாக்கி விடலாம் என நினைக்கக் கூடாது.**

எதிர்க்கட்சிகளுக்கு விமர்சிக்கவும், கேள்விகளை எழுப்பவும் தாராளமாக இடமளிக்க வேண்டும். அவை ஒத்திவைப்பைக் கோரினால் ஒத்திவைக்க வேண்டும். எங்களிடம் பெரும்பான்மை இருக் கிறது. எங்கள் இஷ்டப்படி அவையை நட த்துவோமே தவிர, நீங்கள் கோருகின்றபடி செய்ய மாட்டோம் என்ற அகந்தை நாடாளுமன்றத்தை கேலிக்கூத்தாக்குகிறது.

**நாடாளுமன்ற தாக்குதலைக் குறித்தே விவாதிக்க மறுத்து, விவாதத்தைக் கோரிய எதிர்க்கட்சி உறுப்பினர்களை, தமிழ்நாட்டைச் சேர்ந்த தி.மு.க உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, காங்கிரஸ் உறுப்பினர் ஜோதிமணி உட்பட பலரை இடைநீக்கம் செய்துவிட்டார்கள். நாடாளுமன்றமே தாக்கப்பட்டால் கூட உறுப்பினர்கள் கேள்வி கேட்கக் கூடாதா என்ன? இப்படி நாடாளுமன்றத்தை பொருளற்றதாக்கினால் மக்கள் ஏன் சீற்றமடைந்து உள்ளே புக மாட்டார்கள்.**

ஆளும்கட்சியிடம் ஆட்சி செய்யும் அதிகாரம் இருக்கிறது. எதிர்க்கட்சிகளிடம் அது கிடையாது. அவற்றிடம் உள்ள ஒரே வாய்ப்பு நாடாளுமன்றத்தில் கேள்விகளைக் கேட்பதுதான்; கண்டனங்களை தெரிவிப்பதுதான். அதற்கு முழு உரிமை அளிக்கும் போதுதான் நாடாளுமன்றம் அதற்குரிய பயனை முழுமையாக அடையும். வெறும் வாக்கெடுப்புகளில் பெரும்பான்மை கட்சி சட்டங்களை இயற்றும் இயந்திரத்தனமான செயல்பாட்டுக்காகவா ஆயிரம் கோடி ரூபாயில் நாடாளுமன்றக் கட்டடம்? அதற்காகவா இத்துணை செலவு செய்து தேர்தல்? எதிர்க்கட்சிகளின் விமர்சனங்களும், கண்டனங்களும் முழுமையாக ஒலிக்க அனுமதிப்பதும்,

**ஆளும்கட்சி அதற்கு சிரத்தையுடன் பதில் சொல்வதும்தான் மக்களாட்சி!**

பத்தாண்டுக் கால நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க. ஆட்சி, நாடாளுமன்றத்தின் இருண்ட காலம் எனலாம். பிரதமர் மிகக் குறைவான நாட்களே நாடாளுமன்றத்திற்கு வருவதை வழக்கமாகக் கொண்டார். வந்தாலும் பெரும்பாலும் பேச மாட்டார். கேள்விகளை எதிர்கொள்ள மாட்டார்.

சட்டங்கள் பல நாடாளுமன்ற நிலைக்குழுக்களால் பரிசீலிக்கப்படாமலேயே அவைக்கு வரும். அங்கும் அவற்றின் மீது போதிய விவாதம் இல்லாமலேயே வாக்கெடுப்பில் நிறைவேற்றப் படும். எதிர்க்கட்சிகளைப் பேசி, விவாதித்து இணங்க வைக்கும் முயற்சி என்பதை நினைத்துக் கூட பார்ப்பதில்லை.

அதாவது பொதுவான பொது நன்மை குறித்த சிந்தனை அடிப்படையில்தான் ஆட்சி நடக்க வேண்டும் என்பதே மறக்கப்பட்டு, பெரும்பான்மை அடிப்படையில் ஆட்சி நடக்கலாம் என்பது எழுதப்படாத நியதி ஆகிவிட்டது. அதற்குப்பின் நாடாளுமன்றத்தை மக்கள் எப்படி நம்புவார்கள்?

**நீதிமன்றத்தில் நடப்பவையும் நம்பிக்கை தருவதில்லை!**

காஷ்மீரின் மாநில அந்தஸ்தை பறித்து அதை மூன்று ஒன்றிய ஆட்சிப் பகுதிகளாக மாற்றியபோது நாடாளுமன்றத்தில் பேசிய முன்னாள் நிதி மற்றும் உள்துறை அமைச்சர் பசிதம்பரம் நீதிமன்றம் ஒருபோதும் இதை ஏற்காது என்று கூறினார்.

ஏனெனில் வெளிப்படையாகவே இது கூட்டாட்சி தத்துவத்துக்கு சவால் விடுவதாக உள்ளது என்பதுதான். மாநில சட்டமன்றத்தின், மக்களின் விருப்பத்தைக் கேட்காமல் ஒன்றிய அரசு அதை மூன்றாகப் பிரிப்பது என்பதெல்லாம் எதேச்சதிகாரப் போக்குக்கே வழிவகுக்கும் என்பது வெளிப்படையானது.

**ராஜன் குறை கிருஷ்ணன்**
*பேராசிரியர்*
*அம்பேத்கர் பல்கலைக் கழகம், புதுடெல்லி.*



ஆனால், உச்ச நீதிமன்றம் கடந்த வாரம் வழங்கிய தீர்ப்பு ஒப்புக்குக் கூட அதைக் கண்டிக்கவில்லை. ஒரு நீதிபதி மட்டும் மாற்றுக் கருத்தினை கூறியிருந்தாலும், லடாக் பகுதி ஒன்றிய ஆட்சிப் பகுதியாக ஆக்கியதை நீதிமன்றம் கேள்வி கேட்கவே இல்லை; அதை அனுமதித்துள்ளது. இது எந்த ஒரு மாநிலத்தையும் ஒன்றிய அரசு பிளந்து அதில் ஒரு பகுதியை ஒன்றிய ஆட்சிப் பகுதியாக்கலாம் என்பதற்கு முன்னுதாரணமாக மாறுகிறது.

இப்படி மக்களின் விருப்பத்திற்கு மாறாக, அதைத் தெரிந்துகொள்ளாமல், அரசு தன்னிச்சையாக நடக்குமென்றால் மக்கள் தங்கள் எதிர்ப்பை எப்படித் தெரிவிப்பது என்ற கேள்வி எழும். நீதிமன்றம் மக்களுக்கு நம்பிக்கையளிக்க வேண்டும். அரசு தான் தோன்றித்தனமாக செயல்பட்டால் நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்ற உத்தரவாதத்தை அளிக்க வேண்டும்.




**பொது மன்றத்தில் நடப்பது என்ன?**

மக்களுக்கு நம்பிக்கையளிக்க வேண்டிய மற்றொரு மக்களாட்சியின் தூண் ஊடகங்களால் வழி நடத்தப்படும் பொது மன்றமாகும். அதில் மக்களின் அதிருப்தி முழுமையாக வெளிப்பட வேண்டும். அவர்களது தேவைகளைக் கூறுவதற்கு ஊடகங்கள் முக்கிய இடம் கொடுக்க வேண்டும். ஆட்சியின் மீதான விமர்சனங்களையும் முதன்மைப் படுத்த வேண்டும்.

ஆனால் ஊடகங்களும் ஆளும் கட்சிக்கு ஆதரவாக, ஆட்சியின் புகழ்பாடுவதாகவே மாறுகின்றன. தேச பக்தி என்ற பெயரில் அரசின் மீதான விமர்சனங்களை ஊடகங்கள் முதன்மைப்படுத்த மறுக்கின்றன. எளிய மனிதர்களின் குரல்கள் இவற்றில் வெளிப்படுவதில்லை.

**இளைஞர்கள் கடும் வேலைவாய்ப்பின்மையைச் சந்திக்கிறார்கள்; அவர்கள் மனம் வேதனைப்படுகிறது. ஆட்சியாளர்களின் பிழைகளால் மணிப்பூரில் பெரும் கலவரம் மூள்வதைப் பார்க்கிறார்கள். பெண்கள் அவமானப்படுத்தப்படுவதை, அதை அரசும், ஊடகங்களும் மறைக்க முயல்வதைப் பார்க்கிறார்கள். அரசின் எதிர்வினை அவர்களுக்கு திருப்தி அளிக்கவில்லை. விவசாயிகள் பெருந்திரளாக அரசுக்கு எதிராகப் போராடுவதைப் பார்க்கிறார்கள். அரசு அவர்கள் குரலுக்குச் செவி சாய்ப்பதாகத் தெரிவதில்லை.**

**மக்களிடையே, குறிப்பாக லட்சிய நோக்குள்ள இளைஞர்களிடையே அதிருப்தி பெருகுகிறது. அவர்கள் தேர்தலையும், வாக்குரிமையையும் மட்டுமே நம்பியிருக்க முடிவதில்லை. ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் வருகிறது. அதில் கொடுக்கப்படும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுவதில்லை. குறிப்பாக நரேந்திர மோடி வேலைவாய்ப்புகளை உருவாக்குவேன் என்றுதான் வாக்குறுதி கொடுத்தார். பத்தாண்டுகளில் அது சிறிதும் நிறைவேற்றப்படவில்லை.**



**மக்களே நேரடியாக நாடாளுமன்றத்தில் புகுந்து குரல் கொடுத்தல்!**

நாடாளுமன்றத் தாக்குதலில் ஈடுபட்டவர்களுக்கு மைசூரைச் சேர்ந்த ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்தான் அனுமதி கொடுக்க பரிந்துரை அளித்துள்ளார். அவர் பரிந்துரை அளித்த மைசூரைச் சேர்ந்த அந்த இளைஞரின் குடும்பத்தாரும், இளைஞரும் அவருக்காக தேர்தலில் ஆதரவு திரட்டியுள்ளனர். ஆனால், பா.ஜ.க. ஆட்சி அந்த இளைஞருக்குக் கடும் அதிருப்தி அளித்துள்ளதாகத் தெரிகிறது. அதனால் அந்த நாடாளுமன்ற உறுப்பினரையே பயன்படுத்தி மன்றத்தின் உள்ளே சென்று நேரடியாக குரல் கொடுக்க முடிவு செய்துள்ளனர்.

இது நிச்சயம் விரும்பத்தக்கதல்ல. இது குழப்பத்துக்குத்தான் இட்டுச் செல்லுமே தவிர தீர்வுக்கல்ல. எனவே நாம் அந்த இளைஞர்களைக் கண்டிக்க வேண்டும். நாடாளுமன்றத்தின் பாதுகாப்பு குறைபாட்டுக்காக ஆளும்கட்சியையும் நாம் கடுமையாக கண்டிக்க வேண்டும். புதிய கட்டடத்தின் வடிவமைப்பிலேயே இப்படி பார்வையாளர் மாடத்திலிருந்து உள்ளே குதிக்க வாய்ப்பிருக்கும்படி செய்தது அபத்தமான பிழையாகும்.

ஆனால், பிரச்சினை எப்படி மக்களை நாடாளுமன்றத்தில் புகாமல் தடுப்பது என்பது மட்டுமல்ல; எப்படி அவர்கள் அப்படி ஒரு செயலைச் செய்ய நினைக்கத் தேவையில்லாமல் ஆட்சி செய்வது என்பதுதான். எதிர்க்கட்சிகளும், ஊடகங்களும், நீதிமன்றங்களும் மக்களாட்சியின் மீதான மக்களின் நம்பிக்கையை வலுப்படுத்த வேண்டும். ஆளும்கட்சியிடம் அதிகாரம் குவிந்திருப்பதான தோற்றம் வரக் கூடாது.

**நாடாளுமன்றக் கட்டடத்துக்கு வெளியே வண்ணப் புகையைப் பரப்பிய நீலம் என்ற பெண் எழுப்பிய முழக்கம் நம் கவனத்துக்குரியது. படித்த பெண் அவர். அரசுப் பணிக்காக தேர்வுகள் எழுதுபவர். அவர் முழக்கமிட்டது என்ன? "தானாஷாஹி நஹி சலேகி" என்பதுதான் அந்த முழக்கம். சர்வாதிகாரம் செல்லாது என்று அதன் பொருள். அதாவது சர்வாதிகாரத்தை அனுமதிக்க மாட்டோம் என்று முழங்குகிறார்.**

**எந்த தீவிரவாத இயக்கத்தையும் சேராத ஒரு பெண் நீலம். அவருக்காக, அவரை தீவிரவாதியாகக் கருதி தண்டிக்க வேண்டாமென, அவர் ஊர் சபையில் தீர்மானம் எல்லாம் இயற்றியுள்ளார்கள் அப்படி ஓர் எளிய குடிநபர் "சர்வாதிகாரத்தை அனுமதிக்க மாட்டோம்" என முழக்கமிடுகிறார் என்றால், நம் மக்களாட்சியில் என்ன பிரச்சினை என்பதை ஆள்பவர்கள் சிந்திக்க வேண்டும். ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.**

நன்றி :
**'மின்னம்பலம்'**
இணையதளம்




சிவகங்கை, ராமநாதபுரம் மறை மாவட்ட பிஷப்பாகப் பதவியேற்ற முனைவர் ஆனந்தத்திற்கு கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தமிழக முதல்வர் சார்பில் பணி சிறக்க பாராட்டி பொன்னாடை அணிவித்து வாழ்த்தினார். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித்,மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பி.கே.அரவிந்த், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், சிவகங்கை நகர்மன்ற தலைவர் சி.எம்.துரைஆனந்த் ஆகியோர் உள்ளார்கள்.



இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. சுற்றுச்சூழல் அணி சார்பில் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை கொண்டாடும் விதமாக சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கம் பேரூர், காவேரிப்பாக்கம் நகரத்தில் கழக சுற்றுச்சூழல் அணி மாநிலத் துணைச் செயலாளர் ஆர். வினோத் காந்தி பொது மக்களுடன் இணைந்து 100 மரக்கன்றுகள் நட்டு, துவக்கி வைத்தார். இதில் பொதுக்குழு உறுப்பினர் சி.மாணிக்கம், காவேரிப்பாக்கம் பேரூர் செயலாளர் பாஸ் (எ) நரசிம்மன், காவேரிப்பாக்கம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் ஒச்சேரி பாலாஜி வெங்கடேசன், பிரின்ஸ் ரவி, மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் வெங்கடேசன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் வேதா சீனிவாஸ், துணை அமைப்பாளர் சிவா, அன்பரசு டாக்டர் அசோக் குமார், மாவட்டப் பிரதிநிதி நா.சக்தி மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



புதுடெல்லி வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (18.12.2023) புதுடெல்லி விமான நிலையத்தில், தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, தயாநிதிமாறன், திருச்சி சிவா உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் ஆகியோர் மலர்க்கொத்து வழங்கி, சால்வை அணிவித்து வரவேற்றனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (19.12.2023) புதுதில்லி தமிழ்நாடு இல்லத்தில், தில்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அவர்கள் சந்தித்துப் பேசினார். உடன் நாடாளுமன்ற கழக குழுத் தலைவர் டி.ஆர். பாலு, தயாநிதி மாறன் எம்.பி., ஆம் ஆத்மி கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் ராகவ் சத்தா ஆகியோர் உள்ளனர்.

### அரசு அலுவலகங்களை நாடி மக்கள் செல்லும் நிலையை மாற்றி

# மக்களைத் தேடி அரசுத் துறைகள் செல்லும் நிலையை உருவாக்கியுள்ளார் நமது முதல்வர்!

## கடலூர் மாவட்டத்தில் 'மக்களுடன் முதல்வர்' திட்டத்தைத் துவக்கி வைத்து- அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் பேச்சு!

கடலூர், டிச. 20-

முதலமைச்சர் அவர்கள் மக்களுடன் முதல்வர் திட்டத்தை துவக்கி வைத்ததை தொடர்ந்து, கடலூர் மாவட்டம், கடலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பாதிரிக்குப்பம் ஊராட்சி, கூத்தப்பாக்கம் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண் தம்புராஜ், முன்னிலையில் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மக்களுடன் முதல்வர் திட்டத்தை நேற்று முன்தினம் துவக்கி வைத்தார்.

இதில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்ததாவது,

முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் வாழ்வாதாரம் மேம்படும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செம்மையாக செயல்படுத்தி வருகிறார். மகளிருக்கு இலவச பேருந்து பயணம் திட்டம், அரசு பள்ளியில் பயின்ற பெண் குழந்தைகள் உயர்கல்வி பயில ஏதுவாக புதுமைப் பெண் திட்டம், மக்களைதேடி மருத்துவம் திட்டம், அரசு பள்ளி மாணவர்களின் நலன் கருதி காலை உணவு வழங்கும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 'மக்களுடன் முதல்வர்" என்ற சிறப்புத் திட்டத்தினை பொதுமக்கள் பயன்பெறும் வகையில் துவக்கிவைத்துள்ளார். அரசு அலுவலகங்களை நாடி மக்கள் செல்லும் நிலையை மாற்றி மக்களை தேடி அரசுத் துறைகள் சென்று முகாம்கள் நடத்தி அவர்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று உடனடியாக தீர்வு கானும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

அதற்கிணங்க, கடலூர் மாவட்டத்தில், கடலூர் மாநகராட்சி, 6 நகராட்சிகள், 14 பேரூராட்சிகள் மற்றும் மாநகராட்சி ஒட்டிய 17 புறநகர் பகுதிகளில் நேற்று (18.12.2023) முதல் தொடங்கப்பட்டு 2024 ஜனவரி 5ஆம் தேதி வரை 60 முகாம்கள் நடைபெறவுள்ளது.

கடலூர் மாநகராட்சியில் 11 முகாம்களும், நெல்லிக்குப்பம் நகராட்சியில் 3 முகாம்களும், பண்ருட்டி நகராட்சியில் 5 முகாம்களும், சிதம்பரம் நகராட்சியில் 5 முகாம்களும், விருத்தாசலம் நகராட்சியில் 5 முகாம்களும், வடலூர் நகராட்சியில் 3 முகாம்களும், திட்டக்குடி நகராட்சியில் 3 முகாம்களும், பேரூராட்சிகளில் 14 முகாம்களும். மாநகராட்சி ஒட்டிய புறநகர் பகுதிகளில் 14 முகாம்களும் ஆக மொத்தம் 60 முகாம்கள் நடைபெறவுள்ளன.



பொதுமக்கள் தங்கள் பகுதியில் நடைபெறும் முகாமிற்கு சென்று கோரிக்கை மனுக்களை உரிய ஆவணங்களுடன் அளித்து பயன்பெறலாம். இம்முகாம்களில் எரிசக்திதுறை தமிழ்நாடு மின்சார வாரியம், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீ ர்வழங்கல் துறை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, காவல் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, ஆதிதிராவிடர் பிற்படுத்தப்பட் டோர் நலத் துறை, வாழ்வாதார கடன் உதவிகள் முதலான துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் கலந்து மனுக்களை பெறுகின்றனர். இம்முகாம்களில் இசேவை வசதிகள் செய்யப்பட்டுள்ளது. இம்முகாம்களில் பெறப்படும் மனுக்களின் மீது சம்மந்தப்பட்ட துறைகளின் மூலம் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு ஒரு மாத காலத்திற்குள் முடித்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திட்ட இயக்குநர் திருமதி இரா. சரண்யா, உதவி இயக்குநர் ஊராட்சிகள் திருமதி ஷபானா அஞ்சும் அவர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி சுதா, வீரமணி மற்றும் பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களில் - மின் நுகர்வோர்

# மின் கட்டணத்தை அபராதத் தொகை இல்லாமல் செலுத்த கால நீட்டிப்பு!

## நிதி - மின்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவிப்பு!

**நெல்லை, டிச. 20 -**

**திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் மின் நுகர்வோர்கள் மின்கட்டணத்தை அபராதத் தொகை இல்லாமல் செலுத்த காலநீட்டிப்பு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவித்துள்ளார்.**



கடந்த சில தினங்களாக திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் பெய்த கனமழை மற்றும் அதிகனமழையின் காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புகளை தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்வழிகாட்டுதலின்படி, அரசு பல்வேறு மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில் கடந்த 2 தினங்களாக மேற்கண்ட மாவட்டங்களைச் சேர்ந்த மின் நுகர்வோர்களுக்கு மின் கட்டணம் செலுத்துவதில் ஏற்பட்டுள்ள இடர்ப்பாடுகளைக் கருத்தில் கொண்டு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி மின்நுகர்வோர்கள் தங்களது மின்கட்டணத்தை அபராதத் தொகை இல்லாமல் செலுத்த கீழ்க்கண்டவாறு காலநீட்டிப்பு அளிக்கப்பட்டுள்ளதாக நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

இது குறித்து, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளதாவது :-

மின் உபயோகிப்பாளர்களின், மின்கட்டணம் செலுத்தும் கடைசி நாள் 18.12.2023 முதல் 30.12.2023 வரை இருந்த நிலையில், மேற்காணும் சூழலின் காரணமாக அபராதத் தொகை இல்லாமல் 02.01.2024 அன்று வரை மின் உபயோகிப்பாளர்கள் மின்கட்டணம் செலுத்த காலநீட்டிப்பு வழங்கப்படுகிறது.

ஏற்கனவே, மேற்படி மின் உபயோகிப்பாளர்கள் மின்கட்டணத்துடன் 18.12.2023 அன்று அபராதத் தொகை செலுத்தி இருப்பின், அந்த அபராதத் தொகை அடுத்து வரும் மாத மின்கட்டணத் தொகையில் சரிக்கட்டப்படும்.

இந்த காலநீட்டிப்பு வீடு, வணிக பயன்பாடு, தொழிற் சாலைகள், சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் மற்றும் பிற மின் நுகர்வோர்கள் அனைவருக்கும் பொருந்தும்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

# அரியலூர் மாவட்டத்தில் 'மக்களுடன் முதல்வர்' திட்டம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்!

அரியலூர், டிச, 20

அரியலூர் மாவட்டம், அரியலூர் நகராட்சி அலுவலகத்தில் அரசின் சேவைகள் விரைவாகவும், எளிதாகவும் சென்று சேரும் வகையில் "மக்களுடன் முதல்வர்" திட்டத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்து, பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, தலைமையில், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா முன்னிலையில் நடைபெற்றது.

முதலமைச்சர்மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசின் சேவைகள் குறிப்பிட்ட காலத்திற்குள் பொதுமக்களுக்கு கிடைப்பதை உறுதி செய்திடும் வகையில் பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். அவற்றின் நீட்சியாக அன்றாடம் அரசு துறைகளை அணுகும் பொதுமக்களுக்கு அரசு அலுவலர்கள் வழங்கும் சேவைகளை மேலும் செம்மைபடுத்தி அரசின் சேவைகள் விரைவாகவும், எளிதாகவும் சென்றுசேரும் வண்ணம் "மக்களுடன் முதல்வர்" திட்டத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கோயம்புத்தூர் மாவட்டம், எஸ்.என்.ஆர் கல்லூரியில் தொடங்கி வைத்து பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.

இதன் தொடர்ச்சியாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் அரியலூர் மாவட்டம், அரியலூர் நகராட்சி அலுவலகத்தில் மக்களுடன் முதல்வர் திட்டத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்து பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டதுடன் அவற்றின் மீது உடனடி நடவடிக்கை மேற்கொண்டு இரண்டு நபர்களுக்கு பட்டா ஆணைகளும், ஒரு நபருக்கு பிறப்பு சான்றிதழையும் வழங்கினார்.

மேலும் இத்திட்டமானது முதல்கட்டமாக அரியலூர் மற்றும் ஜெயங்கொண்டம் நகராட்சிகளிலும், உடையார்பாளையம் பேரூராட்சியில் தொடங்கப்பட்டுள்ளது. அதன்படி அரியலூர் மற்றும் ஜெயங்கொண்டம் நகராட்சிகளில் 18.12.2023 இன்றும், 19.12.2023, 20.12.2023 மற்றும் 21.12.2023 ஆகிய நாட்களிலும், உடையார்பாளையம் பேரூராட்சியில் 18.12.2023 மற்றும் 19.12.2023 ஆகிய நாட்களிலும், வரதராஜன்பேட்டை பேரூராட்சியில் 20.12.2023 மற்றும் 21.12.2023 ஆகிய நாட்களிலும் நடைபெறவுள்ளது. எனவே மேற்படி முகாம்களில் குறிப்பிடப்பட்டுள்ள வார்டுகளைச் சேர்ந்த பொதுமக்கள் தங்களது கோரிக்கை மனுக்களை அளித்து பயன்பெறலாம். அதன் பின்னர் ஊராட்சிகளுக்குட்பட்ட பகுதிகளுக்கு இரண்டாம் கட்டமாக 2024 ஆம் ஆண்டு மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாம் நடைபெற உள்ளது.

இம்முகாம்களில் பெறப்படும் அனைத்து கோரிக்கை மனுக்களும் 30 தினங்களுக்குள் சம்மந்தப்பட்ட துறைகளால் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதியின் அடிப்படை யில் உரிய சேவைகள் வழங்கப்படும் என போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

இம்முகாமில் அரியலூர் நகர்மன்றத் தலைவர் சாந்தி கலைவாணன், அரியலூர் நகர்மன்ற துணைத் தலைவர் கலியமூர்த்தி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் இலக்குவன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) பூங்கோதை, அரியலூர் நகராட்சி ஆணையர் திரு.அசோக்குமார், மாவட்ட துணை செயலாளர் சந்திரசேகர், ஒன்றிய கழக செயலாளர்கள் இரா. கென்னடி, பூ.செல்வராஜ், மா.அன்பழகன், கோ.அறிவழகன், நகர கழக செயலாளர் இரா.முருகேசன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தெய்வ. இளையராஜா, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### சேலம் அரசு மோகன் குமாரமங்கலம்

# மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அதிநவீன மருத்துவக் கருவிகள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

சேலம், டிச. 20-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (18.12.2023) சேலம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அதிநவீன மருத்துவ உபகரணங்கள் மற்றும் புதிய மருத்துவக் கட்டடங்களைத் திறந்து வைத்துப் பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருத்துவத் துறைக்கு முக்கியத்துவம் அளித்து பல்வேறு சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அந்தவகையில், இன்றைய தினம் சேலம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நுண்கதிர் துறையில் ரூ.12 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடத்துடன் கூடிய அதிநவீன PET-CT Scan கருவி, இருதய சிகிச்சை துறைக்கு ரூ.6.15 கோடி மதிப்பிலான CATH-LAB மற்றும் மகப்பேறு மருத்துவத் துறைக்கு ரூ.39 இலட்சம் மதிப்பிலான குடும்பக் கட்டுப்பாட்டுக்கான அதிநவீன லேப்ராஸ்கோப்பி கருவி என மொத்தம் ரூ.18.54 கோடி மதிப்பிலான வசதிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, புற்றுநோயினை மிகத் துல்லியமாக கண்டறியும் PET-CT Scan கருவி தமிழ்நாட்டில் உள்ள சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் மதுரை இராஜாஜி அரசு பொது மருத்துவமனை ஆகிய இரண்டு அரசு மருத்துவமனைகளில் இருந்து வந்த நிலையில், கடந்த மாதம் திருநெல்வேலி, தஞ்சாவூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் PET-CT Scan கருவி பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இன்றைய தினம் சேலம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் PET-CT Scan கருவி பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

மேலும், இன்றைய தினம் இங்கு தொடங்கி வைக்கப்பட்டுள்ள அதிநவீன PET-CT Scan கருவி மூலம் நாளொன்றுக்கு சுமார் 20 நோயாளிகள் வரை பயன்பெறுவர். இந்த ஸ்கேன் பரிசோதனையினை முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இலவசமாக செய்துகொள்ள முடியும். முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட அட்டை இல்லாத நோயாளிகள் தோராயமாக ரூ.6,500/- முதல் ரூ.11,000/- வரை மட்டும் பராமரிப்பு செலவிற்காக செலுத்தி இந்த ஸ்கேன் பரிசோதனையினை செய்து கொள்ளலாம்.

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் சில நாட்களுக்கு முன்னர் சேலம் மாவட்டத்தில் 4 சிறப்பு காப்பீட்டுத் திட்ட பதிவு முகாம்கள் நடத்தப்பட்டது. மேலும் வருகின்ற ஜனவரி மாதத்திலும் இச்சிறப்பு காப்பீட்டு திட்ட பதிவு முகாம்கள் நடத்தப்படவுள்ளன. சேலம் மாவட்டத்தில் 90 சதவிகித மக்கள் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட அட்டை வைத்துள்ளனர். காப்பீட்டு அட்டை இல்லாதவர்களும் விண்ண ப்பித்தால் விரைவாக முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு அட்டை வழங்கப்படும்.

PET-CT Scan கருவி அறிக்கையின் மூலம் புற்றுநோயின் அனைத்து நிலையினையும் அறிந்து கொள்வது மட்டுமல்லாமல், எவ்வித சிகிச்சை அளிக்கலாம் என்பதை தீர்மானிப்பது மற்றும் புற்றுநோய் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு சிகிச்சையின் செயல்திறனையும் அறிந்து கொள்ள முடியும்.

இந்த ஆண்டு ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, சேலம், திருவண்ணாமலை, திருவாரூர் ஆகிய பகுதிகளில் CATH-LAB கருவியினை செயல்படுத்த திட்டமிடப்பட்டது. இதில் சேலம் மாவட்டத்தில் இன்றைய தினம் முதலில் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இருதய சிகிச்சைக்கான கருவிகளில் மிக முக்கியமானது CATH-LAB கருவி. இதன் மூலம் அருகிலிருக்கும் 8 மாவட்டங்களைச் சேர்ந்த மக்களும் Angiogram, AngioPlasty சிகிச்சைப் பெற்று பயனடைவார்கள்.

மேலும், மகப்பேறு மருத்துவத் துறைக்கு வழங்கப்பட்டுள்ள அதிநவீன கேமராவுடன் கூடிய லேப்ராஸ்கோப்பி கருவியின் மூலம் பாதுகாப்பான நிரந்திர குடும்பநல அறுவை சிகிச்சை செய்து கொள்ள முடியும். சிறிய வெட்டு ஏற்படுவதால் குருதிப் போகும் வலியும் வெகுகுறைவாக இருப்பதன் காரணமாக விரைவில் குணமாகும். மருத்துவமனையில் தங்கும் காலம் குறைந்து அறுவை சிகிச்சை செய்த 24 மணி நேரத்தில் வீட்டிற்குச் செல்லலாம். இதன் மூலம் நிரந்தர குடும்பநல அறுவை சிகிச்சை எண்ணிக்கையை மேலும் அதிகரித்து சேலம் நகர்ப்புற மற்றும் கிராமப்புற மக்களுக்கு பெரும் பயனாக அமையும்.

சேலம் மாவட்டத்தில் மருத்துவ உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்ச்சியாக பெருமளவில் மேம்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் இம்மாவட்டத்தைச் சுற்றியுள்ள பல்வேறு மாவட்டங்களும் பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் அவர்கள் பேசினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் செ. கார்மேகம், மாநகராட்சி மேயர் ஆ. இராமச்சந்திரன், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா. இராஜேந்திரன், முன்னாள் அமைச்சர் டி.எம்.செல்வகணபதி, மாநகராட்சி துணை மேயர் திருமதி மா. சாரதாதேவி, அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு. இரா. மணி, மருத்துவக் கண்காணிப்பாளர் மரு.ப.வே. தனபால் உட்பட தொடர்புடைய அலுவலர்கள், மருத்துவர்கள் கலந்துகொண்டனர்.




இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடி நகராட்சி மற்றும் கீழக்கரை நகராட்சியில் "மக்களுடன் முதல்வர்" துவங்கப்பட்டுள்ளது. பரமக்குடி நகராட்சியில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்டத்தின் சிறப்பு முகாம் இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் - சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் , பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் தலைமையில் நடைபெற்றது . இந்நிகழ்ச்சியில் பரமக்குடி சார் ஆட்சியர் அப்தாப் ரசூல்,, பரமக்குடி நகர் மன்றத்தலைவர் சேதுகருணாநிதி சமூகப்பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் மாரிச்செல்வி , பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் எம்.மாரிமுத்து, பரமக்குடி வட்டாட்சியர் ரவி , பரமக்குடி நகர் மன்ற துணைத்தலைவர் குணா மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் விஜய சரவண மஹாலில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்டம் சிறப்பு முகாமை மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு தொடங்கி வைத்து சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில் அ.நல்லதம்பி எம்.எல்.ஏ., மாவட்ட வருவாய் அலுவலர் வளர்மதி, மாவட்ட ஆவின் தலைவர் எஸ்.ராஜேந்திரன், ஆ.சம்பத்குமார், ஒன்றிய செயலாளர் கே.ஏ.குணசேகரன், சு.அரசு, திருப்பத்தூர் நகர மன்ற தலைவர் சங்கீதா வெங்கடேசன், செ.வெங்கடேசன், ஏ.ஆர்.சபியுல்லா மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.





பேரறிஞர் அண்ணாவால் “பேராசிரியர் தம்பி” என்று அன்போடும், “இனமானப் பேராசிரியர்” என்று முத்தமிழறிஞர் கலைஞரால் பெருமிதத்தோடும் அழைத்துப் போற்றப்பட்ட, மறைந்த பேராசிரியர் அவர்களின் 102– வது பிறந்தநாளையொட்டி, தமிழ்நாடு முதல் அமைச்சர் – கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க பேராசிரியர் மகன் பேராசிரியர் அ.அன்புச்செல்வன், கழக செய்தித் தொடர்பு அணித் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், தி.மு.க. இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, தலைமை நிலையச் செயலாளர்கள் பூச்சி எஸ்.முருகன், துறைமுகம் காஜா, சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ப.ரங்கநாதன், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், மயிலை த. வேலு உள்ளிட்டோர் நேற்று (19.12.2023) கழக தலைமை நிலையமான அண்ணா அறிவாலயம், கீழ்ப்பாக்கம், பேராசிரியர் இல்லம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள பேராசிரியரின் திருவுருவப் படத்துக்கு மலரஞ்சலி செலுத்தினார்கள்.

### அண்ணா அறிவாலயம் - பேராசிரியர் இல்லம் - டி.பி.ஐ. வளாகத்தில்

# இனமானப் பேராசிரியர் திருவுருவப்படம் - திருவுருவச் சிலைக்கு மரியாதை!

## தலைமைக் கழகத்தின் சார்பில் மலர்மாலை அணிவித்தனர்!

சென்னை, டிச.20 -

தந்தை பெரியாரின் தொண்டராக பேறறிஞர் அண்ணாவின் தம்பியாக முத்தமிழறிஞர் கலைஞரின் தமையனாக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தத்துவத் தலைமையாக, தன் வாழ்நாள் முழுவதும் அப்பழுக்கற்ற கொள்கைக் கோபுரமாக உயர்ந்து நின்ற இனமான பேராசிரியர் அவர்களின் பிறந்த நாளான நேற்று (19.12.2023) காலை, அண்ணா அறிவாலயத்திலும் மற்றும் சென்னை, கீழ்ப்பாக்கம், ஆஸ்பிரான் கார்டனில் உள்ள பேராசிரியர் இல்லத்திலும் வைக்கப்பட்ட இனமானப் பேராசிரியர் திருவுருவப் படத்திற்கும் சென்னை, டி.பி.ஐ. வளாகத்தில் அமைந்துள்ள பேராசிரியர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகே வைக்கப்பட்டுள்ள “இனமானப் பேராசிரியர்” அவர்களின் படத்திற்கும், தலைமைக் கழகத்தின் சார்பில், கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், துணை அமைப்புச் செயலாளர்கள் எஸ்.ஆஸ்டின், ப.தாயகம் கவி, எம்.எல்.ஏ., தலைமை நிலையச் செயலாளர்கள் பூச்சி எஸ்.முருகன், துறைமுகம் காஜா ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இந்நிகழ்வின்போது சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு, கழக சட்டத்துறை இணைச்செயலாளர் இ.பரந்தராமன், எம்.எல்.ஏ., தேர்தல் பணிக் குழுத் தலைவர் புரசை ப.ரங்கநாதன், தலைமைக் கழக துணை மேலாளர் என்.ஜெயக்குமார், சட்டத் துறை துணைச் செயலாளர் கே.எஸ்.இரவிச்சந்திரன், பகுதிச் செயலாளர்கள் ஆயிரம்விளக்கு மா.பா.அன்புதுரை, அண்ணா நகர் பரமசிவம் மற்றும் நுங்கை வி.எஸ்.ராஜ், சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர் டி.வி.செம்மொழி (எ) சதீஷ் குமார், பேராசிரியர் அவர்களின் மகன் வெற்றிச்செல்வன் ஆகியோருடன் பகுதி, வட்ட நிர்வாகிகள் உடனிருந்தனர்.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் இனமானப் பேராசிரியர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு அன்னாரது திருவுருவப்படத்திற்கு மக்கள் செய்தி தொடர்புத் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மாநகர் மாவட்டச் செயலாளர் கோ. தளபதி ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் கழக நிர்வாகிகள் வ.வேலுசாமி, பெ.குழந்தைவேலு, அக்ரி கணேசன், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் பூமிநாதன் ஆகியோர் உள்ளனர்.

### உள்நாட்டு எஃகு உற்பத்தியைப் பெருக்க

# ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

## மக்களவையில் கழக உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, டிச. 20 -

சர்வதேச மற்றும் உள்நாட்டில் எஃகு விலை மாற்றம் குறித்தும் உள்நாட்டு எஃகு உற்பத்தியைப் பெருக்க ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்தும் நாடாளுமன்ற மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.



தொடர்ந்து அவர் கடந்த இரண்டு ஆண்டுகளில் சர்வதேச மற்றும் உள்நாட்டில் எஃகு விலை முன்னெப்போதும் இல்லாத வகையில் உயர்ந்துள்ளது என்பது உண்மையா? அப்படியானால் அதன் விவரங்கள் மற்றும் நாட்டில் இரும்பு மற்றும் எஃகு ஆகியவற்றின் உள்நாட்டு விலைகளைக் குறைக்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் யாவை? இறக்குமதி செய்யப்பட்ட எஃகு சார்ந்திருப்பதைக் குறைக்க ஒன்றிய அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா? மேலும் உள்நாட்டு தொழில்துறை பயன்பாட்டிற்காக இரும்பு, எஃகு ஆகியவற்றின் விலைகளைக் கட்டுப்படுத்துவது குறித்து ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை? நாட்டில் அதிகரித்து வரும் இரும்பு, எஃகு தேவைகளை பூர்த்தி செய்ய சர்வதேச இரும்பு, எஃகு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை?

பல்வேறு தொழிற்சாலைகளில் இருந்து சேகரிக்கப்பட்ட இரும்பு கசடுகள், கழிவுகளை மறுசுழற்சி செய்வதன் மூலம் உற்பத்தி செய்யப்படும் இரும்பின் அளவு மறுசுழற்சி செய்யப்பட்ட இரும்பின் உற்பத்தியின் நிலை என்ன? என்றும் கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் எஃகு அமைச்சகத்தின் ராஜாங்க அமைச்சர் ஃபக்கன் சிங் குலாஸ்தே எழுத்துப் பூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு:-

பதில் நவம்பர் 2023க்கான இரும்பு மற்றும் எஃகு / முக்கியப் எஃகு பொருட்களின் சராசரி உள்நாட்டுச் சந்தை விலை, எஃகு நிறுவனங்கள் கூட்டுக் குழு நிர்ணயம் அடிப்படையில், நவம்பர் 2021 விலையுடன் ஒப்பிடும் போது விலை 520% வரை குறைந்துள்ளது. நவம்பர் 2021ல் ரூ.46625 ஆக இருந்த பிக் அயர்ன் நவம்பர் 2023ல் ரூ.43469 ஆக 7 % விலை குறைந்தது. நவம்பர் 2021ல் ரூ.46237 ஆக இருந்த சன்னரக எஃகு / இரும்பு நவம்பர் 2023ல் ரூ.42915 ஆக 7 % விலை குறைந்தது. நவம்பர் 2021ல் ரூ.55388 இருந்த 8mm வயர் கம்பிகள் நவம்பர் 2023ல் ரூ.52220 ஆக 6% விலை குறைந்தது. நவம்பர் 2021ல் ரூ.57314 ஆக இருந்த 10mm TMT கம்பிகள் நவம்பர் 2023ல் ரூ.53271 ஆக 7% விலை குறைந்தது. நவம்பர் 2021ல் ரூ.69852 ஆக இருந்த 10mm எஃகு தகடுகள் நவம்பர் 2023ல் ரூ.57636 ஆக 17% விலை குறைந்தது. நவம்பர் 2021ல் ரூ.71623 ஆக இருந்த 2mm எஃகு H.R. சுருள்கள் நவம்பர் 2023ல் ரூ.58216 ஆக 19% விலை குறைந்தது. நவம்பர் 2021ல் ரூ.78860 ஆக இருந்த 0.63 mm எஃகு C.R. எஃகு சுருள்கள் நவம்பர் 2023ல் ரூ.72966 ஆக 20% விலை குறைந்தது. நவம்பர் 2021ல் ரூ.85237 ஆக இருந்த 0.63 mm எஃகு ஜி.பி. எஃகு சுருள்கள் நவம்பர் 2023ல் ரூ.68032 ஆக 20% விலை குறைந்தது.

இதே போல் சீனா, அமெரிக்கா, ஐரோப்பிய, யூனியன் நாடுகள் நவம்பர் 2023 சர்வதேச எஃகு விலை நவம்பர் 2021 விலையை விட வெகுவாக குறைந்துள்ளது.


எஃகு என்பது ஒரு கட்டுப்பாடு நீக்கப்பட்ட துறை இதில் ஒன்றிய அரசின் பங்கு ஒரு வசதியாளராக உள்ளது. இறக்குமதி / ஏற்றுமதி போன்ற முடிவுகள் சந்தை உந்துதல் மற்றும் தொழில்நுட்ப வணிகக் கருத்தாய்வுகளின் அடிப்படையில் எஃகு நிறுவனங்களால் எடுக்கப்படுகின்றன. உள்நாட்டு எஃகுத் தொழிலைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் அரசாங்கம் பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இரும்பு மற்றும் எஃகு பொருட்கள் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட எஃகு கொள்முதல்ஐ ஊக்குவிக்கும் கொள்கை அறிவிப்பு. தரமற்ற எஃகு உற்பத்தி மற்றும் இறக்குமதியை நிறுத்த எஃகு தரக் கட்டுப்பாட்டு ஆணையை அமல்படுத்துதல். எஃகு இறக்குமதியின் மேம்பட்ட பதிவுக்காக எஃகு இறக்குமதி கண்காணிப்பு அமைப்பை (SIMS) செயல்படுத்துதல். 6322 கோடி செலவில் சிறப்பு எஃகுக்கான உற்பத்தி இணைக்கப்பட்ட ஊக்கத் தொகை (PLI) திட்டத்தின் அறிவிப்பு. நாட்டில் எஃகு, இரும்பு தேவைக்காக அயல்நாடு மற்றும் பன்னாட்டு நிறுவனங்களுடன் ஒப்பந்தம், முன்மொழிவு போடுவதற்கான திட்டம் எதுவும் ஒன்றிய அரசு பரிசீலனையில் இல்லை. எஃகு என்பது ஒரு கட்டுப்பாடு நீக்கப்பட்ட துறையாகும் அங்கு மூலப்பொருட்களின் பயன்பாடு மற்றும் எஃகு உற்பத்திக்கான முறைகள் பற்றிய முடிவுகள் தனிப்பட்ட நிறுவனங்களால் அவற்றின் தொழில்நுட்ப பொருளாதாரக் கருத்தாய்வுகளின் அடிப்படையில் எடுக்கப்படுகின்றன.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் தனது பதிலில் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தேவதானம்பட்டி தே.க. இராஜேந்திரன்
### டிசம்பர் 20 (1996)



கழகம் தொடங்கிய காலம் முதல் உறுப்பினராகி, நாடகத்தின் மூலம் கழகக் கொள்கைகளைப் பரப்பி, தீவிர கழகப் பணியாற்றியவர்.

தேவதானப்பட்டி கிளைச் செயலாளராகவும் – பேரூர்க் கழகச் செயலாளராகவும் – பொதுக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

தேவதானப்பட்டி பேரூராட்சி மன்றத் தலைவராகப் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக நெருக்கடி காலத்தில் மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

# “தொலைநோக்குச் சிந்தனையாளர் கலைஞர்” குறும்படப் போட்டி!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, டிச.20

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை கொண்டாடும் வகையில் “தொலைநோக்குச் சிந்தனையாளர் கலைஞர்” எனும் குழுவின் சார்பில் குறும்பட போட்டி (Short film Competition) மற்றும் சுருள்பட போட்டி (Reels Competition) நடைபெறுகிறது.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பு வருமாறு:-

தொலைநோக்குச் சிந்தனையாளர் கலைஞர் எனும் குழு, நூற்றாண்டு விழா நாயகன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டிற்கு ஆற்றிய அரும்பணிகளில் அவரது பரிமாணங்களை போற்றும் வகையில் பல்வேறு முன்னெடுப்புகளை செய்து வருகிறது.

அந்த வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை சிறப்பிக்கும் வகையில் தொலைநோக்குச் சிந்தனையாளர் கலைஞர் எனும் குழுவின் சார்பில் குறும்பட போட்டி (Short film Competition) மற்றும் சுருள்படபோட்டி (Reels Competition) நடத்துவது தொடர்பான செய்தி வெளியீடு 31.10.2023 அன்று வெளியிடப்பட்டது. அச்செய்தி வெளியீட்டில் இப்போட்டிகளுக்கான விண்ணப்பங்களுடன் கூடிய குறும்படங்கள் மற்றும் சுருள்படங்களை 20.12.2023க்குள் அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டது.

நிர்வாகக் காரணங்களால் இப்போட்டிகளுக்கான கடைசி தேதி 15.01.2024 வரை நீட்டிக்கப் பட்டுள்ளது.

குறும்படப் போட்டியில் கலந்துகொள்ள விருப்பமுள்ளவர்கள் தொலைநோக்குச் சிந்தனையாளர் கலைஞர் (உதாரணமாக சமூக நீதி, கல்வியில் புரட்சி, சுகாதார துறையில் புரட்சி, தொழிற்துறை மேம்பாடு, மாநில அரசின் உரிமை, பெண்கள் முன்னேற்றம், கிராமப்புற/ நகர்ப்புற வளர்ச்சி) என்ற தலைப்பில் புதிய குறும் படங்களை (Short film) (அதிகபட்சம் 10 நிமிடங்கள்) உருவாக்கி அதனை விண்ணப்பங்களுடன் 15.01.2024 தேதிக்குள் (shortfilm kalaignar 100@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.


இதேபோல் சுருள்பட போட்டியில் (Reels) கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் ‘தொலைநோக்குச் சிந்தனையாளர் -கலைஞர்’ எனும் தலைப்பில் புதிய சுருள்படங்களை 30 வினாடிகள் முதல் 1 நிமிடம் வரை இருக்கும் வகையில் உருவாக்கி விண்ணப்பங் களுடன் 15.01.2024 தேதிக்குள் (reelskalaignar100@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

குறும்பட போட்டி (Short film Competition) மற்றும் சுருள் பட போட்டி (Reels Competition) களுக்கான வழிகாட்டி நெறிமுறைகள் https://dipr.tn.gov.in (செய்தி வெளியீடு (Press release) எண்.2179, நாள்:31.10.2023) என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

இவ்வாறு தமிழ்நாடு அரசு செய்திக்குறிப்பில் அறிவித்துள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆந்திரா கே.ஏ.முனுசாமி
### டிசம்பர் 20 (2016)



எட்டு வயதிலேயே சுயமரியாதைக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, அஞ்சா நெஞ்சராக உருவாகி, தி.மு.கழகம் துவங்கப்பட்ட ஒரு சில மாதங்களிலேயே, பல எதிர்ப்புகளை மீறி, ஆந்திர மாநிலத்தில் சில மாவட்டங்களில் கழகத்தின் கிளைகள் துவக்கி கழகக் கொடி ஏற்றி வைத்தவர்.

ஆந்திர மாநிலத்தில் பல மாவட்டங்களில் 1954 முதல் 1971 வரை 500க்கும் மேற்பட்ட கிளைக் கழகங்களைத் தொடங்கியதோடு, 1966ஆம் ஆண்டு ஆந்திர மாநிலப் பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆந்திர மாநிலக் கழக அமைப்பாளராக இருபது ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து பொறுப்பு வகித்தவர்.

2007ஆம் ஆண்டு, ஈரோட்டில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் அண்ணா விருதினை தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கினார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (19.12.2023) இனமானப் பேராசிரியர் அவர்களின் பிறந்தநாளையொட்டி, புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் நாடாளுமன்ற கழக குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, ஆ.ராசா எம்.பி., எஸ்.எஸ்.பழனிமாணிக்கம் எம்.பி., தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் ஆகியோர் உள்ளனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (18.12.2023) விருதுநகர் பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகையில், விருதுநகர் மாவட்டத்திலும் அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக "ரெட் அலர்ட் விடுக்கப்பட்டுள்ள நிலையில், அனைத்து வகையிலும் எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்திடும் வகையில் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சீனிவாசப் பெருமாள் ஆகியோருடன் கலந்தாலோசித்து ஆய்வு மேற்கொண்டார்.

### குடியிருப்புகளில் சூழ்ந்த வெள்ள நீரும் வடியத் தொடங்கியது!

# தென் மாவட்டங்களில் மக்கள் இயல்பு நிலைக்கு திரும்பினர்!

### அமைச்சர்கள் - கனிமொழி கருணாநிதி எம்.பி. நிவாரண உதவி வழங்கினர்!

திருநெல்வேலி, டிச. 20 -

நெல்லை மாவட்டத்தில் கடந்த இரண்டு நாட்களாக கொட்டித் தீர்த்த கனமழை காரணமாக அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து 30 ஆயிரம் கன அடிக்கு மேல் உபரி நீர் திறந்துவிடப்பட்டது. காட்டாற்று வெள்ளத்தின் காரணமாக தாமிரபரணி ஆற்றில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால், தாழ்வானப் பகுதிகளில் குடியிருப்புகளுக்குள் தண்ணீர் புகுந்து மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டதுடன், பல்வேறு இடங்களில் போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டது.

இந்த நிலையில் குமரி கடலில் நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வுநிலை ஆழ்கடல் நோக்கி நகரத் தொடங்கியதால், நெல்லையில் நேற்று பிற்பகல் முதல் மழை படிப்படியாக குறைய தொடங்கியது. இதுபோன்று மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளிலும் மழை குறைந்ததன் காரணமாக பாபநாசம், சேர்வலாறு ஆகிய அணைகளில் இருந்து வெளியேற்றப்படும் உபரிநீரின் அளவு கணிசமாக குறைக்கப்பட்டு சுமார் 7,000 முதல் 10 ஆயிரம் கனஅடி வரையே வெளியேற்றப்பட்டு வருகிறது. இதன் காரணமாக கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்ட தாமிரபரணி ஆற்றில், நேற்று முன்தினம் இரவு முதல் தண்ணீர் குறைய தொடங்கியது. நேற்று காலை சுமார் 10 அடி உயரத்திற்கு வெள்ளநீர் குறைந்து தாமிரபரணி ஆறு இயல்பு நிலைக்கு திரும்பி வருகிறது.

**தூத்துக்குடியில் கனிமொழி கருணாநிதி எம்.பி. நிவாரணம் வழங்கினார்!**

வரலாறு காணாத அளவில் கொட்டித் தீர்த்த கனமழையால், பாதிக்கப்பட்டுள்ள தூத்துக்குடியில், மக்களை மீட்கவும், அவர்களுக்கு அவசர உதவிகளை வழங்கும் பணியில் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர்.

குறிப்பாக இத்தொகுதியின் எம்.பி. கனிமொழி கருணாநிதி பம்பரமாக சுழன்று நிவாரண பணிகளை மேற்கொண்டு வருகிறார். இந்த நிலையில் மீட்பு மற்றும் நிவாரண பணிகளை மேற்கொள்வது குறித்து ஆலோசனைக் கூட்டம், தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கே.என்.நேரு, நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி, மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதாஜீவன், மாவட்ட ஆட்சியர் லட்சுமிபதி, மேயர் ஜெகன் பெரியசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து, தூத்துக்குடி மாநகராட்சி பகுதிகளில் வெள்ள பாதிப்புகளை கனிமொழி கருணாநிதி எம்.பி. நேரில் ஆய்வு செய்தார்.

பொதுமக்களை சந்தித்து அவர்களுக்கு தேவையான நிவாரணப் பொருட்களை கனிமொழி கருணாநிதி எம்.பி. வழங்கினார்.





தூத்துக்குடியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நாடாளுமன்ற கழகக் குழுத் துணைத் தலைவர் கனிமொழி கருணாநிதி நேரில் சென்று பாதிக்கப்பட்ட மக்களை மீட்டு அவர்களுக்கு வேண்டிய நிவாரணப் பொருட்களை வழங்கினார். அதுபோது அமைச்சர் பெ.கீதாஜீவன் உள்பட கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.12.2023) புதுடெல்லியிருந்து காணொலிக் காட்சி வாயிலாக, தென் மாவட்டங்களில் பெய்து வரும் அதிகனமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும், மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்தும் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.கா.ப. கார்த்திகேயன், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் ஜி. லட்சுமிபதி, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் பி.என். ஸ்ரீதர், மற்றும் தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் துரை. ரவிச்சந்திரன், ஆகியோருடன் ஆலோசனை மேற்கொண்டார். இந்த ஆலோசனைக் கூட்டத்தில், தலைமைச் செயலகத்திலிருந்து தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், பொதுத்துறைச் செயலாளர் க. நந்தகுமார், ஆகியோரும், காணொலிக் காட்சி வாயிலாக வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே. பிரபாகர், மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

### கழகத்தின் கொள்கைத் தூண் - இனமானப்

# பேராசிரியரின் நீங்கா நினைவுகளை நெஞ்சிலேந்துவோம்!

### பிறந்த நாளையொட்டி - முதல்வர் மு.க. ஸ்டாலின் பதிவு



**புதுடெல்லி, டிச.20-**

**தமிழர் நலவாழ்வுக்காகவே வாழ்ந்து மறைந்த இனமானப் பேராசிரியர் அவர்களின் பிறந்தநாள் நேற்று (19.12.2023). இந்நாளினையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள ட்விட்டர் பதிவில், "கழகத்தின் கொள்கைத் தூண் - இனமானப் பேராசிரியர் அவர்களின் பிறந்தநாளில், அவரின் நீங்கா நினைவுகளை நெஞ்சிலேந்துவோம்!'' என குறிப்பிட்டுள்ளார்.**

இனமானப் பேராசிரியர் அவர்களின் பிறந்தநாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ட்விட்டர் பதிவு வருமாறு:-

"யாரோ சிறியர் நரியர் சூதோ வாதோ செய்திடத் துணிவரேல் பேராசிரியர் கூர்வேல் பிளக்கும்! தீராப் பிணியும் தீர்ந்து தமிழினம் பிழைக்கும்! பெரியாரின் பிள்ளைகள் நாம் பேரறிஞர் தம்பிகள் நாம் - என்றும் பிரியாத இருவண்ணக் கொடியே நாம்!" என முத்தமிழறிஞர் கலைஞர் கவிபாடிய கழகத்தின் கொள்கைத்தூண், என் வளர்ச்சிக்கு ஊக்கம் வழங்கிய பெரியப்பா, தமிழர் நலவாழ்வுக்காகவே வாழ்ந்து மறைந்த இனமானப் பேராசிரியர் அவர்களின் பிறந்தநாளில் அவரின் நீங்கா நினைவுகளை நெஞ்சிலேந்தி வணங்குகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### நெல்லை மாவட்டத்தில் கனமழை!

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நிவாரணப் பணி!

### பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கல்!

நெல்லை, டிச. 20 -

நெல்லை மாவட்டத்தில் மழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு த்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18ம் தேதி) பார்வையிட்டு சமாதானபுரம் பெல் பள்ளியில் தங்க வைக்கப்பட்டுள்ள நபர்களுக்கும், தச்சநல்லூர் வெல்கம் மஹாலில் தங்க வைக்கப்பட்டுள்ள நபர்களுக்கும் அடிப்படைத் தேவையான நிவாரண உதவிகளை வழங்கி சந்திப்பு பேருந்து நிலையத்தில் வெள்ள பாதிப்புகளை பார்வையிட்டார்கள்.

நெல்லை மாவட்டத்தில் கடந்த இரண்டு நாட்களில் பெய்த கனமழை காரணமாக மாவட்டம் முழுவதும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. தாமிரபரணி ஆற்றில் அதிக அளவுக்கு மேல் தண்ணீர் வந்ததால் பல்வேறு இடங்களில் தண்ணீர் தேங்கி பாதிப்பு ஏற்பட்டது. இந்த மழையானது நான்கு தென் மாவட்டங்களில் அதிக அளவு பாதிப்புகளை ஏற்படுத்தி உள்ளது.

மழையின் பாதிப்பை அறிந்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு பொறுப்பு அமைச்சர்களையும், உயர் அதிகாரிகளையும் அனுப்பி வைத்து மீட்பு பணிகளுக்கு உத்தரவிட்டார்கள். தொடர்ந்து மீட்பு பணிகளை துரிதப்படுத்தவும், கண்காணிக்கவும் கண்காணிப்பு அலுவலர்களை அனுப்பி வைத்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இந்த மழை பாதிப்புகளை பார்வையிட்டு நிவாரண உதவிகள் வழங்கி பணிகளை துரியப்படுத்த முதலமைச்சர் அவர்கள் தென் மாவட்டங்களுக்கு சென்று தென் மாவட்ட மக்களுக்கு உறுதுணையாக இருந்து மீட்பு பணிகளை மேற்கொண்டு உதவி புரிய என்னை உடனடியாக அனுப்பி வைத்தார்.

கரையோர மக்கள் மற்றும் தாழ்வானப் பகுதியில் உள்ள மக்கள் அனைவரையும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நேற்று காலை முதல் 75 நிவாரண முகாம்களில் 3500 நபர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உணவு வசதி, குடிநீர் வசதி மற்றும் கழிப்பறை வசதி முறையாக மாவட்ட நிர்வாகம் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மழையின் அளவு நேற்றைய விட இன்று குறைந்துள்ளது. தண்ணீர் வடியத் தொடங்கியுள்ளது. இந்த வெள்ள பெருக்கினால் மாவட்டத்தில் மூன்று நபர்கள் உயிரிழந்துள்ளனர். நெல்லை சந்திப்பு சிந்துபூந்துறை பகுதியில் படகுகள் மூலம் தொடர்ந்து மீட்பு பணிகளில் ஈடுபட்டு வருகிறோம். மாவட்டத்தில் ஆய்வுப் பணிகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை 50,000 நபர்களுக்கு தரமான உணவு கொடுக்கப்பட்டுள்ளது. பொது மக்களுக்கு பால் கிடைப்பதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் இது குறித்து அறிவுறுத்தப்பட்டு 10 ஆயிரம் லிட்டர் பால் கொண்டு வருவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் இதுவரை 36 கிராமங்களில் வெள்ளிநீர் புகுந்துள்ளது வெள்ள நீர்களை வெளியேற்றும் பணிகள் நடைபெற்று வருகிறது. மாவட்டத்தில் உள்ள தாழ்வானப் பகுதியில் உள்ள மக்கள் அனைவரையும் நிவாரண முகங்களில் வரவழைத்து தங்கவைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நாளை முதலமைச்சர் அவர்கள் டெல்லியில் சென்று பிரதமர் அவர்களை நேரில் சந்தித்து நிவாரணம் கோர உள்ளார். இன்னும் மூன்று நாட்களில் திருநெல்வேலி மாவட்டத்திற்குத் தேவையான நிவாரணத்தை அறிவிப்பார்கள். தமிழ்நாட்டு மக்களுக்கு இயற்கை சீற்றங்களால் எந்தவித பாதிப்பு களும் ஏற்படாமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டு தமிழ்நாடு மக்களை பாதுகாக்கும் அரசாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு செயல்பட்டு வருகிறது.

இவ்வாறு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், நிதி மற்றும் மனித வள மேம்பாட்டு துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் எஸ்.கே.பிரபாகர், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் டாக்டர்.செல்வராஜ், கூடுதல் வருவாய் ஆணையர் கோ.பிரகாஷ், மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான், நாடாளுமன்ற உறுப்பினர் ஞான திரவியம், பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப், நெல்லை மாநகராட்சி மேயர் சரவணன், ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் சிவ கிருஷ்ணமூர்த்தி,

நெல்லை மாநகராட்சி ஆணையாளர் சுபம் தாக்கரே ஞானதேவ்ராவ், மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன், துணை மேயர் ராஜ் உள்பட அரசு அலுவலர்கள் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அரசின் சேவைகள் விரைவாகவும், எளிதாகவும் பொதுமக்களுக்குச் சென்று சேரும் வண்ணம் "மக்களுடன் முதல்வர்" என்ற புதிய திட்டத்தை கோயம்புத்தூரில் 18.12.2023 அன்று தொடங்கி வைத்தார். அதனைத்தொடர்ந்து, திண்டுக்கல் மாவட்டத்தில், "மக்களுடன் முதல்வர்" திட்ட சிறப்பு முகாமை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, நேற்று முன்தினம் (18.12.2023) தொடங்கி வைத்து பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் மு.பாஸ்கரன், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் ஆத்தூர் திருமதி மு.மகேஸ்வரி, ரெட்டியார் சத்திரம் ப.க.சிவகுருசாமி, திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் கமலக்கண்ணன், கூட்டுறவு சங்கங்கள் இணைப் பதிவாளர் கோ.காந்திநாதன், சின்னாளப்பட்டி பேரூராட்சித் தலைவர் திருமதி இரா.பிரதீபா உட்பட பலர் உள்ளனர்.

முரசொலி பாசறை
மதுரை 20.12.2023

# திராவிடப் போராளிகள்

**47** ■ வழக்கறிஞர் அருள்மொழி

**ம**றைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...

## பொற்செல்வி இளமுருகு-இணையர் பெயர்கொண்ட இனமான சுடர்!

திராவிட இயக்கமும் தமிழுணர்வும் போல பிரிக்கமுடியாத பெயர்கள்தான் பொற்செல்வி இளமுருகு. பொதுவாக தன் மனைவியை மதிப்பவர்கள்கூட தன் பெயரோடு தன் மனைவியின் பெயரை இணைத்துக் கொள்ள முன் வருவதில்லை. 1940-களின் இறுதியில், தன் மனைவி பொற்செல்வியின் பெயரை தன் பெயருக்குப் பின்னால் இணைத்துக் கொண்டவர் இளமுருகு. அவரது இயற்பெயர் பாலசுப்பிரமணியன் என்பது. ஆனால், தனபாக்கியம் தான் பொற்செல்வி ஆனார் என்ற செய்தியை அறிந்தவர்கள் குறைவு. அப்படித்தான் பொற்செல்வியின் போராட்டங்களும் பெருமைகளும் அதிகம் பேசப்படாமல் இருக்கின்றன.

திருச்சி மாவட்டம், துறையூரில் பிறந்த தனபாக்கியம், இளம் வயது முதல் சுயமரியாதை இயக்கக் கருத்துகளைக் கேட்டு வளர்ந்தவர். அவரது அண்ணன் சைமன் ராமசாமி என்பவர் தந்தை பெரியாரின் தீவிரத் தொண்டர். அதனால், சுயமரியாதை இயக்கத்தினர் அவர்கள் வீட்டுக்கு அடிக்கடி வருவது வழக்கம்.

பெரியார் கொள்கைகளில் தனபாக்கியத்துக்கு ஈடுபாடு வந்தது இயல்பே. அவரது ஆர்வத்தைக் கண்ட சைமன் ராமசாமி அவர்கள், சிறுமியான தனபாக்கியத்தை சுயமரியாதை மாநாடுகளுக்கு அழைத்துச் சென்றார். பகுத்தறிவு, பெண்ணுரிமை போலவே தமிழுணர்வும் கொண்டார் தனபாக்கியம்.

தந்தை பெரியாரிடம் மிகுந்த மரியாதையும் அன்பும் கொண்டிருந்த தனபாக்கியத்தின் உரிமை முழக்கம் நீதிக்கட்சி மேடைகளிலும், சுயமரியாதைக் கூட்டங்களிலும் ஒலித்தது.

தமிழ்ப் பற்றினால் தன் பெயரை தமிழாக்கிக் கொள்ள விரும்பிய தனபாக்கியம், பொற்செல்வி என்று பெயர் மாற்றிக்கொண்டார். எக்காரணம் கொண்டும் ஒரு பெண்ணின் வாழ்க்கை ஆணைச் சார்ந்து இருக்கக்கூடாது என்ற கொள்கையில் உறுதியாக இருந்த பொற்செல்வி, பள்ளிக் கல்விக்குப்பின் ஆசிரியர் பயிற்சி முடித்தார். சேலத்தில் சில காலமும், பின்னர் திருச்சியிலும் ஆசிரியராகப் பணியாற்றினார். அநீதிகளைத் தட்டிக்கேட்பதிலும், உரிமைப் போராட்டங்களிலும் முதலிடத்தில் நின்றார். ஆசிரியர் போராட்டம் ஒன்றைத் தலைமை தாங்கி நடத்தியதில், அவரது போராட்ட குணம் புகழ்பெற்றது. இந்தி எதிர்ப்புப் போராட்டம் அவரை மேலும் எழுச்சியுறச் செய்தது. அவரது உரைகள் கேட்டவர்களை சிந்திக்கச் செய்தன.

### புதுமை மாறாத கொள்கையாளர்

திராவிட இயக்க ஏடுகளை தேடித்தேடிப் படிப்பதில் பொற்செல்விக்கு மிகுந்த ஈடுபாடு. 20 வயது கடந்த பின்னும், திருமண ஏற்பாட்டுக்கு அவர் உடன்படவில்லை. அவரது தங்கையின் திருமணம் முடிந்தபின்னும், தன் கொள்கைக்கும், நிபந்தனைகளுக்கும் ஏற்ற கொள்கைச் சிந்தனையாளரைத்தான் மணப்பேன் என்று உறுதியுடன் இருந்தார்.

அந்த நேரத்தில், ‘தமிழ்ச்சுடர்’ என்ற ஏட்டில் சந்தா செலுத்துமாறு வந்த விளம்பரத்தைப் பார்த்து அந்த ஏட்டின் ஆசிரியருக்குக் கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தில் , தான் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றுவதாகவும், தனக்கு பத்திரிகையை அனுப்பி வைத்தால் சம்பளம் வந்தவுடன் சந்தா தொகையை அனுப்பி வைப்பதாகவும் எழுதியிருந்தார். அந்த ஏட்டின் ஆசிரியர்தான் இளமுருகு. அவர் திருநெல்வேலியைப் பூர்வீகமாகக் கொண்டவர். பெரியகுளத்தில் வாழ்ந்து வந்தார்.

சாதிப் பெருமை பேசும் தன் சமூகத்தினர் பலர் பெண்கொடுக்க முன் வந்தபோதும், அவற்றை ஏற்காமல் தன் கொள்கைக்கேற்ற சிந்தனையுடைய பெண்ணைத்தான் மணப்பேன் என்ற உறுதியுடன் இருந்தவர். பொற்செல்வியின் கடிதத்தைப் பார்த்தவுடன் இவரே தான் தேடிய கொள்கைப் பெண் என்பதைப் புரிந்து கொண்டார். உடனே, பொற்செல்வியைப் பாராட்டி ஒரு கடிதம் எழுதினார். தங்கள் பத்திரிகையில் கட்டுரைகள் எழுதுமாறும் அப்படியே புகைப்படம் ஒன்று அனுப்புமாறும் கேட்டார். பொற்செல்வியோ கட்டுரைகள் அனுப்பினார். ஆனால், புகைப்படம் அனுப்பவில்லை. இருவரது உள்ளமும் ஒரே முடிவை எடுத்தபோதும் தனது இயல்பை விளக்கி பொற்செல்வி அவர்கள் இளமுருகுவுக்கு எழுதிய கடிதத்தை சுயமரியாதை விரும்பும் பெண்ணுக்கு எடுத்துக் காட்டாகச் சொல்லலாம்.

“ .....இதுவரை கட்டுப்பாடு இன்றி இருந்தவள் நான். எனது குணம், நடத்தை, தொழில் இவை தங்களுக்குப் பிடித்ததுதானா? ... மேலும் குடும்பப் பொறுப்பே தெரியாமல் ஒய்வு காலத்தைப் புத்தகப் படிப்பில் செலவிடும் ஒரு பெண்ணை, அநியாயம் செய்பவர்களை எதிர்த்து அதனால் வாயாடி, அடங்காப்பிடாரி என்று ஒரு சிலரால் சொல்லப்படும் ஒரு பெண்ணோடு நீங்கள் வாழ்க்கை நடத்த முடியுமா? அறிவுக்குப் பொருத்தமான விஷயங்களில் உங்களுடன் வாதாடுவதை, உங்கள் வீட்டவர்கள் தவறாக நினைத்து, எதிர்த்துப் பேசுகிறாளே என்று நினைத்தால் நீங்கள் முகம் சுளிக்க நேருமே. மேலும், வேலையை விட்டுவிட்டால் ஒவ்வொரு காசுக்கும் உங்களை எதிர்பார்ப்பது தன்மானம் ஆகுமா? புதுமை மாறியபிறகு உங்களுக்கு என்னைப் பிடிக்காமல் போய்விட்டால் அப்போது என்ன செய்வது?




இப்படித் தொடருகிறது அந்தக் கடிதம். இன்றும் மணவாழ்வை முடிவு செய்வதற்கு முன் ஒருபெண் என்னென்ன கேட்க வேண்டுமோ சிந்திக்க வேண்டுமோ அத்தனை கேள்விகளையும் 1940-களில் எழுப்பி இருக்கிறார் பொற்செல்வி. அவரது ஐயங்களைத் தீர்த்து பொற்செல்வி எப்போதும் கொள்கையில் சமரசம் செய்து கொள்ளத் தேவையில்லை என்று உரிமைவாழ்வுக்கு உறுதி அளித்தார் இளமுருகு. அவர்கள் திருமணம் எளிமையான முறையில் பதிவுத் திருமணமாக நடந்தது.

### காதல் மணத் தொண்டு

திராவிட முன்னேற்றக்கழகம் தோன்றியது முதல் பொற்செல்வி இளமுருகு இருவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்து இடையறாது பணியாற்றினார்கள். அம்மையாரின் கொள்கை உறுதியும் இயக்கப் பற்றும் எத்தகையது என்பதற்கு ஒரு சான்று இது. அவரது உறவினர் பெண்கள் பொற்செல்வி ஏன் தாலி அணியவில்லை என்று திரும்பத் திரும்பக் கேட்டு தாலி அணியுமாறு கட்டாயப்படுத்தினர். அதற்கு தன் வழியில் ஒரு தீர்வுகண்டார் பொற்செல்வி. ‘தமிழ் வாழ்க’ என்ற சொற்களையும் உதயசூரியன் சின்னத்தையும் பொறித்த டாலரை சங்கிலியில் கோர்த்து அணிந்து கொண்டு இதுதான் என் தாலி என்று அறிவித்தார்.

மணப்பாறையில் ஆசிரியராகப் பணியாற்றி பின் குளித்தலைக்குக் குடியேறிய பொற்செல்வி இளமுருகு இணையர் படைத்த சாதனைகள் கணக்கற்றவை. அவர்கள் வாழ்வும் ஆற்றிய பணியும் குளித்தலையின் அடையாளங்களில் ஒன்றாக மாறிவிட்டன.

1956-ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் தமிழ் ஆட்சிமொழியாக வேண்டும் என்று கோரிக்கையோடு ஒரு பெரிய மாநாட்டை குளித்தலையில் நடத்தினார்கள். புரட்சிக்கவிஞர், குன்றக்குடி அடிகளார், சுத்தானந்த பாரதி, தேவநேயப் பாவாணர், தோழர் ஜீவானந்தம், தமிழறிஞர் இலக்குவனார், உள்ளிட்ட எண்ணற்ற தமிழறிஞர்களும் திராவிட இயக்கத் தலைவர்களும் கூடிய அந்த மாநாடு குளித்தலைக்கே பெருமை சேர்த்தது.

### தமிழறிஞர் சட்டப் பேராசிரியர்

தமிழ் கா.சு.பிள்ளையின் பெயரால் அவர்கள் அமைத்த அந்த நூலகம் பல ஆய்வறிஞர்களின் வேடந்தாங்கலானது.

ஆண்டுதோறும் அவர்கள் இருவரும் சேர்ந்து நடத்திய கா.சு.பிள்ளை இலக்கிய விழாவில் பங்கேற்காத திராவிட இயக்கத் தலைவர்களோ தமிழறிஞர்களோ யாருமில்லை.

கலைஞர் அவர்கள் முதன் முதலில் தேர்தலில் நின்று வென்ற குளித்தலை தொகுதியின் வெற்றிக்காகக் கடுமையாக உழைத்தார் பொற்செல்வி. ‘என் குளித்தலை வெற்றிக்குக் காரணமானவர்கள்’ என கலைஞர் அவர்கள் ஒவ்வொரு முறையும் இளமுருகு, பொற்செல்வி என இருவரின் பெயரையும் தனித்தனியாகக் குறிப்பிட்டார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் மகளிர் மன்றம் தொடங்கப்பட்டு பின் அதை மகளிர் அணியாக விரிவுபடுத்தியபோது மகளிர் அணியின் தலைவராக பொற்செல்வி அம்மையார் இருந்தார். பொற்செல்வி இளமுருகு அவர்களுக்கு 1987 ஆம் ஆண்டு முப்பெரும் விழாவில் கலைஞர் அவர்கள் ‘கலைஞர் விருது’ வழங்கிப் பெருமைப்படுத்தினார். இன்றைய முதல்வர் அவர்களும் குளித்தலைக்கு சென்றால் அம்மையாரைப் பார்த்து நலம் விசாரிப்பதை கடமையெனக் கொண்டிருந்தார். அந்தப் பெருமை குறையாத அம்மையாரின் வாழ்வு 2008 ஆம் ஆண்டு முடிவுற்றது. அதற்கு முன்பே தாங்கள் சேகரித்த ஆயிரக்கணக்கான நூல்களை அறிவாலயத்திற்கு நன்கொடையாக வழங்கிவிட்டார் பொற்செல்வி அம்மையார்.

கொள்கைக் காதல் இணையராக வாழ்ந்த பொற்செல்வி இளமுருகு இணையர் தம் வாழ்க்கையை சுருக்கமாக எழுதி ஒரு நூலை வெளியிட்டனர். அந்த நூலின் பெயர் ’காதல் மணம்’. அந்த நூலை வெளியிட்ட அவர்களது பதிப்பகத்தின் பெயர் ‘காதலர் பண்ணை’.

திராவிட இயக்கம் முன்வைக்கும் சமத்துவ வாழ்வை சாதிக்கும் வலிமை இத்தகைய காதல் மணங்களுக்குதான் உண்டு என்று வாழ்ந்துகாட்டிய திராவிடப் போராளி பொற்செல்வி இளமுருகு அவர்களின் வாழ்க்கை திராவிட இயக்கத்தின் சிறந்த வரலாற்றைச் சொல்லிக் கொண்டே இருக்கும்.

(வருவார்கள்...)

## புத்தகச் சேதம் தவிர்க்க...

காலநிலை மாற்றம் காரணமாக இயற்கை சீற்றங்கள் அதிகரித்தபடி உள்ளன. கடந்த சில வாரங்களுக்கு முன்பு மிக்ஜாம் புயலால் சென்னையைப் புரட்டிப் போட்டது பெருமழை. அதிலிருந்து மீள்வதற்குள், தென் தமிழ்நாட்டில் பருவமழை வரலாறு காணாத படி கொட்டித் தீர்க்கிறது.

இதுபோன்ற பெருமழைக் காலங்களில் உயிர்ச்சேதம், பொருட்சேதம் ஏற்படுகின்றன. அதோடு பலரது வீடுகளில் தங்கள் குழந்தைகளின் பாடப் புத்தகம் மற்றும் பல்லாண்டு காலமாக வாசகராக வாங்கி வைத்த அரிய நூல்களும் சேதமடைகின்றன. அவை பலருக்கு விலை மதிப்பு கூற இயலாத சொத்துகளாக இருந்திருக்க வாய்ப்பு உண்டு.

இனி மழைக்காலங்களில் புத்தகங்கள் சேதமடையுமோ என்ற கவலை வேண்டாம். தங்களது புத்தகங்களையும் ஆவணங்களையும் பாதுகாப்பாக எப்படி உலர்த்துவது என்பது பற்றி சென்னை ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம், மக்களுக்கு வழிகாட்டுகிறது.

அதுகுறித்த தகவல் அறிய +918015312686 என்கிற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## :ப்ளாஷ்பேக்



### அறிவுரைக் கூட்டம்!



ராஜேந்திரன்

1988-ஆம் ஆண்டு மாவட்டந் தோறும் கழக இளைஞர் அணி நிர்வாகிகள் நியமிக்கப்பட்ட பிறகு, கும்பகோணத்தில் இளைஞர் அணிக் கூட்டத்தை நகர இளைஞர் அணி அமைப்பாளர் என்ற முறையில், நான் ஒருங்கிணைத்திருந்தேன். அன்றைய இளைஞர் அணிச் செயலாளரும், இன்றைய கழகத் தலைவருமான மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அந்தக் கூட்டத்தில் பங்கேற்று, எங்களை எல்லாம் பாராட்டி உரையாற்றினார். கூட்டம் முடிந்த பிறகு, தனிப்பட்ட முறையில் எங்களை அழைத்து இளைஞர் அணியின் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டி, கழகப் பணியாற்றுமாறு அறிவுறுத்தினார். அப்போது எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.

**-எல்.ராஜேந்திரன், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர், கும்பகோணம் நகரம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### சமூக நீதிக்கு உயிர்கொடுத்தவர்!

**1928-ஆம் ஆண்டு நீதிக்கட்சி ஆதரவுடன் ப.சுப்பராயன் அமைச்சரவை மாற்றியமைக்கப்பட்டது. முத்தையா முதலியாருக்கு அமைச்சரவையில் இரண்டாவது இடம் வழங்கப்பட்டது. திராவிட இயக்கத்தின் உயிர்மூச்சாகத் திகழும் சமூக நீதிக் கொள்கைக்கு முதன்முதலாக வடிவம் கொடுத்தார் முத்தையா. மக்கள்தொகை எண்ணிக்கைக்கு ஏற்ப ஒவ்வொரு சமூகத்துக்கும் இடஒதுக்கீடு வழங்கும் கம்யூனல் ஜி.ஓ.-வை அவர் நடைமுறைப்படுத்தினார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 334




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.